No. 566

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள் செயலக
# வெளியீடு

தொகுதி-16 எண்-2

மார்ச்-9 1992

31 N92
16.2

வெளியீடு 20-8-1992 Issued 20-8-1992

566

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை மார்ச் 9, 1992 - தொகுதி 16 - எண் 2
Monday the 9th March, 1992 - Volume 16 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

## உள்ளடக்கம்.

9—3—1992


| | பக்கங்கள் |
|---|---|
| 1. இரங்கற் குறிப்புகள்— | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு . | 65–66 |
| 2. வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 66–106 |
| 3. தகவல் கோரல்— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 106–107<br>108 114 |
| 4. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை— | |
| கோவை மாவட்டத்தில் விசைத்தறி நெசவாளர்களின் பிரச்சினைக்கு ஏற்பட்டுள்ள தீர்வு குறித்து. | 108 |
| 5. ஒழுங்குப் பிரச்சினை— | |
| ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்புகளை உறுப்பினர்கள் கொடுக்க வேண்டிய காலம் குறித்து. | 114–115,<br>145 |
| 6. வரவு-செலவுத் திட்டம், 1992–93, பொது விவாதம்— | 115–190 |
| *திரு. குமரி அனந்தன் | 115–143 |
| *திரு. ம. சின்னசாமி | 145–152 |
| திரு. ம. தனபால் | 152–155 |
| திரு. எஸ். ஆர். ஜெயராமன் | 155–156 |
| டாக்டர் எஸ். சுந்தரராஜ் | 156–162 |
| *திரு. எஸ்.எம். துரை | 162–166 |
| *டாக்டர் எம். மோசஸ் | 167–172 |
| திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் | 172–175 |
| *திரு. கு. லாரன்ஸ் | 175–179 |
| *திரு. கே. ஆர். முருகானந்தம் | 180–183 |
| *திரு. எஸ்.எஸ். ராமசுப்பு | 183–190 |
| பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 190–191 |

162336
600 008.
D
V211,31 N92
N92.16.2

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**மாசி 26, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2023**

**1992, மார்ச் 9, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்."

"உரையாற்றும்போது சொற்களைக் கேட்போர்களையும் தன் வயப்படுத்தும் வகையிலும், கேட்காதவர்களும் விரும்பும்படியும் சொல்வதே, சொல்வன்மையாகும்."

### 1. இரங்கற் குறிப்புகள்

#### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. ந. ராமச்சந்திர ரெட்டி அவர்கள் 14-2-1992 அன்றும்; திரு. மா. கதிர்வேலு அவர்கள் 24-2-1992 அன்றும்; திரு. ஏ. சேனாபதி கவுண்டர் அவர்கள் 25-2-1992 அன்றும்; மற்றும் திருமதி கே.பி. ஜானகி அம்மாள் அவர்கள் 1-3-1992 ஆம் நாளன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. ராமச்சந்திர ரெட்டி அவர்கள் 1962 ஆம் ஆண்டில் இருந்து 1967 ஆம் ஆண்டு வரையிலும், 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரையிலும், மற்றும் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரையிலும், தர்மபுரி மாவட்டம் ஓசூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. மா. கதிர்வேலு அவர்கள் 1985 ஆம் ஆண்டு முதல் 19[illegible] ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் ராணிப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி ள்ளார்.

[பேரவைத் தலைவர்] [1992 மார்ச் 9

திரு. ஏ. சேனாபதி கவுண்டர் அவர்கள் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரையிலும், 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரையிலும் அன்றைய கோயம்புத்தூர் மாவட்டம் தாராபுரம் தொகுதியிலிருந்தும், மற்றும் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரையிலும் மதுரை மாவட்டம் ஒட்டன்சத்திரம் தொகுதியிலிருந்தும் தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகச்சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1980 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நான்கு முறை மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திருமதி கே.பி. ஜானகி அம்மாள் அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு தொகுதியில் இருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றியுள்ளார்.

அனைவர்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்கள் அனைவர்க்கும் அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் அமைதியாக எழுந்து நின்றனர்).

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள். வினா எண் 119 திரு. ம.சின்னசாமி, மாண்புமிகு நிதியமைச்சர்.

119—

மாநில அரசுத்துறை செலவுகளில் சிக்கன நடவடிக்கை

*6106 திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மத்திய அரசுத் துறைகளின் செலவுகளில் ஐந்து விழுக்காடு சிக்கன நடவடிக்கை அறிவித்திருப்பதை மாநில அரசு அறியுமா ?



1992 மார்ச் 9]

(ஆ) ஆம் எனில், மாநில அரசும் அத்தகைய சிக்கன நடவடிக்கைகளை அமல்படுத்த முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இம்மாநில அரசும் அத்தகைய நடவடிக்கையை அமல்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசைப் போல் மாநில அரசும் சிக்கன நடவடிக்கைகளை அமல்படுத்த இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்தத் துறைகளில் எப்படி, எவ்வளவு சிக்கனத்தைக் கடைப்பிடிக்கப் போகிறார்கள், அதனாலே ஆண்டுக்கு எவ்வளவு பணம் அரசுக்கு மிச்சமாகப் போகிறது என்பதை அமைச்சர் விளக்கமாக அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—35

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதியாண்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்குத் தீர்வுகாணும் வகையில் ஒரு நடவடிக்கையாக அரசு திட்டம் சாராத மற்றும் சம்பளம் சாராத செலவினங்களில் 10 சதவிகம் சிக்கன நடவடிக்கையை அமுல்படுத்துவது என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் தேதி இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டு எல்லா துறையினருக்கும் அனுப்பப்பட்டுக் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டு இருக்கிறது. அவ்வாணைகள் ஓய்வூதியம் மற்றும் வட்டி செலுத்துதல் போன்ற செலவினங்களுக்குப் பொருந்தி வராது. ஆனால் எவ்வளவு இந்த ஆண்டு மிச்சப்பட்டது என்பதற்கு தனிக் கேள்வி போட்டால் தனியாக கணக்கெடுத்துச் சொல்ல முடியும்.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கனமாக இருக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சம்பளம் வாங்காமல் பணியாற்றுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அதைப்போல சிக்கனத்திற்கு அடையாளமாக நம்முடைய அமைச்சர் பெருமக்களும் குறிப்பாக சிக்கனத்திலுடைய சின்னமாக இருக்கிற பெரியாருடைய சீடரான டாக்டர் நாவலர் அவர்களாவது சம்பளம் வாங்காமல் பணியாற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

[1992 மார்ச் 9

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அத்தனை பேரும் இதற்கு எடுத்துக்காட்டாக இருந்து, முன்னுதாரணமாக இருந்து, அவர்களின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வேண்டுகோளை வைப்பதன் காரணமாக, நீங்கள் இந்த வழியில் வழி நடத்திச் செல்ல வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் ஒருமித்த முடிவிற்கு வருவீர்களேயானால், உங்கள் வழியைப் பின்பற்ற, அமைச்சரவை ஆயத்தமாக இருக்கும். (பலத்த சிரிப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஊதியம் பெறுகிறவர்கள் அத்தனை பேரும் தந்தை பெரியார் வழியில் செல்லுகிறவர்கள் இல்லை என்று உறுப்பினர் முடிவு செய்துவிடக் கூடாது. ஏதோ செய்கிற காரியத்திற்கு ஊதியம் இருக்க வேண்டும் என்று கருது கிறவர் தந்தை பெரியார். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கன நடவடிக்கை என்ற பெயரால் ரிட்டையர் ஆகியிருக்கிற வேகன்சிகளில் கூட ஆசிரியர்களையும் மற்ற இன அதிகாரிகளையும் நியமனம் செய்ய கூடாது என்று உத்திரவு போட்டதாகச் சொல்லுகிறார்கள். அது உண்மைதானா? ஆம் எனில், அத்தகைய ரிட்டையர்மெண்ட் வேகன்சிகளில் அதிகாரிகளை நிரப்பவில்லை என்று சொன்னால், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிவிடும். ஆகவே அத்தகைய ரிட்டையர்மெண்ட் வேகன்சிகளைப் பூர்த்தி செய்ய அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிக்கன நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளுகிறபோது, எல்லாத் துறைகளுடைய திறமை எக்காரணத்தைக் கொண்டும் குறையக்கூடாது என்பதை மனதிலே நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது வேலை பார்த்து வருகிறவர்கள், ஒரு பதவியை நாம் எடுப்பதன் மூலமாக அவர்கள் வேலைக்குப் பாதகம் ஏற்படாத வகையில் அவர்கள் தேவைப்படுகிற பிற துறைகளுக்கு மாற்றப்படுகிறார்கள். கூடுமான வரையில் நிர்வாகம் சீராகவும், சிறப்பாகவும் நடை பெற வேண்டும் என்பதிலேயும் அது திறமையாக நடைபெற வேண்டும் என்பதிலேயும், எந்த அளவிற்கு அதிலே பணியாளர்கள் இருக்கலாம் என்பதைப் பொறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. ஆனால் சில பல துறைகளிலே கூடுதலான பணியாளர்கள் இருந்து வருகிறார்கள் என்ற காரணத்தை யொட்டித்தான் இந்த முறை கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.



1992 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. இராமச் சந்திரன்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு வரவு—செலவுத் திட்ட உரையில் சுமார் 140 கோடி ரூபாய் சிக்கனப்படுத்தப்படும் என்று அரசு தரப்பிலே அறிவிக்கப்பட்டது. அதைப் பற்றி ஏதேனும் திட்டம் வகுத்து செயல்படுத்தப்பட்டதா? அதன் மூலம் எவ்வளவு சிக்கனப்படுத்த முடிந்தது? அதே போல அரசு துறைகளின் சார்பில் வெளியிடப்படுகிற முழுப் பக்க விளம்பரங்களை கால் பக்க விளம்பரங்களாகக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டபடி சிக்கன நடவடிக்கைகள் ஓரளவிற்கு எடுக்கப்பட்டு வருகின்றன. எந்தெந்த துறைகளில் எந்த அளவிற்கு எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளி விவரம் முழுவதும் இப்போது என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் தரப்படும். ஆனால் கூடுமான வரையில், விளம்பரத்தைப் பொறுத்தவரையில், எந்தெந்தப் பொருள்கள் எந்தெந்த அளவிற்கு விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்ற அளவைப் பொறுத்து சிக்கனம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. கூடுமான வரையில் அதிலேயும் சிக்கனம் கடைப்பிடிக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 120, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

120—

## திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் நீதிமன்றம்

* 5840 டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் நீதி மன்றம் ஆகியவற்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இஃது அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 9-40

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டமும், வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டமும் ஒன்றுபட்டு வட ஆற்காடு மாவட்டம் என்கிற பெயரில் வேலூரைத் தலைநகராகக் கொண்டிருந்தபோது, வேலூரில் மாவட்ட நீதிமன்றம் ஒன்றும், கூடுதல் மாவட்ட நீதிமன்றம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டு இப்போதும் இயங்கி வருகின்றன. வேலூரில் தற்போதுள்ள கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தை, அப்படியே அங்குள்ள அலுவலர்களையும் சேர்த்து திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தினுடைய மாவட்ட நீதிமன்றமாக தற்போது திருவண்ணாமலையில் செயல்பட்டுவரும் அமர் நீதிமன்ற கட்டடத்திலே மாற்ற முடியும். எதிர்காலத்தில் புதிய கட்டிடங்களைக் கட்டவும் தேவையான அளவிற்கு மிக விசாலமான இடம் கோர்ட் வளாகத்தில் உள்ளது. இதனை அரசு பரிசீலித்து ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுபோல, ஏற்கெனவே மாண்புமிகு போற்றுதலுக்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்துவிட்டார்கள். திருவண்ணாமலையிலே இந்த நடப்பு ஆண்டிலேயே after Budget session, District and Session Court and Chief Judicial Magistrate Court ஆகிய இரண்டு கோர்ட்டுகளும் அங்கே வர இருக்கின்றன. அதற்கு நிதியும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கிட்டு இருக்கிறார்கள். மார்ச் முடிந்து ஏப்ரல் தொடங்குகின்ற இந்த ஆண்டிலேயே அந்த நீதிமன்றங்கள் வரும் என்பதனை மாண்புமிகு உறுப்பினருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலேயே திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்திற்கு நீதிமன்றத்தை வழங்கிய எங்களுடைய கழகத்தின் காவல் தெய்வம் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சப்ளிமெண்டரி கேட்கும் போது, நன்றியோடு ஏதாவது ஒரு கேள்வியும் இருக்க வேண்டும் என்று எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. தண்டாயுதபாணி.



திரு. வி. தண்டாயுதபாணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்கள் இருந்தால் மட்டும் போதாது; அமைந்தால் மட்டும் போதாது. குடியாத்தத்திலே மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றத்திலே 9 மாத காலமாக ஸ்ட்ரைக் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தண்டாயுதபாணி, நீங்கள் கேட்பது கேள்வியையொட்டி இருக்கவேண்டும். இன்னொரு ஊரில் நீதிபதி இருக்கிறாரா இல்லையா என்பதற்கு நேரடியான பதில் அமைச்சருக்குத் தெரிந்து இருக்கலாம். ஆனால், இது தொடர்புடைய கோப்பில் அது இருக்காது. நீங்கள் இது தொடர்புடைய கேள்விக்குத் தனிக் கேள்வி போடவும், அல்லது அமரவும்.

அடுத்து வினா எண் 121, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

121—

நாச்சியார்கோவிலில் வணிகவரி துணை அலுவலகம்

*662 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் நாச்சியார்கோவிலில் வணிகவரி துணை அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "இல்லை" என்று சொன்னார்கள். இருந்தாலும் அதை அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, அங்கே அமைப்பதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்கின்ற அதே நேரத்தில், இந்தத் துறை

[1992 மார்ச் 9

வணிகவரி அலுவலகம் அமைப்பதற்கு எல்லா ஆயத்தப் பணிகளும் நடைபெற்றதாக நான் அறிந்தேன். ஆகவே, அந்த ஆயத்தப் பணிகள் குறித்து, துணை வணிகவரி அலுவலகம் அமைப்பதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாச்சியார்கோவில் என்பது மிகச் சிறிய ஊர். அந்த ஊர் கும்பகோணத்திற்கும் கொடவாசலுக்கும் இடையில், கும்பகோணத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அங்கே பதிவு செய்த வியாபாரிகள் 110 பேர் தான்; அதிலே வரி கொடுப்பவர்கள் 48 பேர்தான். ஓர் ஆண்டிற்கு வருகிற மொத்த வரியே 2 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் தான். அங்கே ஓர் திரையரங்கம் இருக்கிறது. அதில் ஆண்டுக்கு வருமானம் 68 ஆயிரம் ரூபாய்தான். ஆகையால், அந்தக் கிராமத்தில் ஓர் துணை வணிகவரி அலுவலகம் அமைப்பதற்கு வேண்டிய எந்தவிதமான சாத்தியக்கூறுகளும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாச்சியார்கோவில் என்பது நான்கு தொகுதிகளை இணைத்து வரக்கூடிய ஓர் ஊர் ஆகும். காரைக்காலிலிருந்து வருகின்ற வழியும், மன்னார்குடியிலிருந்து கும்பகோணம் வருகின்ற வழியும், என் தொகுதி திருவிடைமருதூரையும் சேர்த்து அமைந்து இருக்கக்கூடிய அமைப்புக்கு ஓர் நேரடியான பாலமாகும். அங்கே, அந்தக் கிராமத்திலே அதிகப்படியான பட்டறை தொழிற்சாலைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. ஆகவே, ஓர் துணை வருமானவரி அலுவலகத்தை அங்கே ஏற்படுத்துவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலை முன்பே சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 122, திரு. எம். தங்கவேல். மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.



1992 மார்ச் 9]

122—

முத்தரையர் இனத்தை மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்த்தல்

*5395 திரு. எம். தங்கவேல் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கல்வியிலும், பொருளாதார நிலையிலும் பன்னெடுங்காலமாக மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள முத்தரையர் இனத்தை மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முத்தரையர் வகுப்பினை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க தற்போது அரசால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தரையர் இன மக்கள் பல்வேறு உட்பிரிவுகளாக தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். முத்துராஜா, முத்தரையர், சேர்வை, காவல்காரன், வலையர் போன்ற பல உட்பிரிவுகளில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அம்பலகாரர் என்பவர் மட்டும் மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் வருகிறார். எனவே, இந்த உட்பிரிவுகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து, எல்லோரையும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழுவின் பரிந்துரையின்படி அரசு ஏற்கனவே முடிவெடுத்து முத்தரையர் பிரிவில் பிற்படுத்தப்பட்டவர்கள் யார், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் யார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பரிந்துரையின் மீது எடுக்கப்பட்ட அந்த முடிவையொட்டி இப்போது வேறு கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தரையர் பிரிவில் உள்ளவர்கள் எல்லோரும் ஒரே இனத்தவர்கள்தான். இருந்தாலும் அதிலே உட்பிரிவு

களாக பல்வேறு இடங்களில் புதுக்கோட்டை, மதுரை போன்ற இடங்களில் அம்பலகாரர் என்றும் வலையர் என்றும் இருந்து கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள்தான். ஆகவே, எல்லோரையும் ஒன்றாகச் சேர்த்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலக்குழுவின் கவனத்திற்கு இந்த வேண்டுகோள் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மிக விரிவாக இதைப் பரிசீலனை செய்திருக்கிறது. அம்பலகாரர் என்று அழைக்கப்படுகிறவர்கள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு பெயர்களில் அவர்கள் அழைக்கப்பட்டு, அவர்கள் ஈடுபட்டிருக்கிற தொழிலை ஒட்டியும், அவர்களுடைய சமுதாய, கல்வி பொருளாதார சூழ்நிலைகளை ஒட்டியும், அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே சில பிரிவினரைச் சீர்மரபினர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டியலில் சுமார் 4,46,759 பேர்கள் இருக்கிறார்கள். அதிலே 2,58,840 பேர்கள் இன்னும் சீர்மரபினர் என்று அழைக்கப்படுகிற பிரிவிலே வருகிறார்கள். ஆகவே, அந்தக் குழு மிக விரிவாக ஆராய்ந்துதான் இந்த முடிவை அரசுக்கு அறிவித்து இருக்கிறது. அரசு அந்த முடிவை ஏற்றிருக்கிறது. ஆகவே, இப்போது முத்தரையர் என்று பல்வேறு பிரிவுகளில் இருக்கிற அனைவரையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தால் இன்னும் பல்வேறு பிரிவுகள் இதைப் போன்ற வேண்டுகோளை வைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, அரசு இப்போது அதை பரிசீலிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மெ. ஆண்டி அம்பலம்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தரையர் என்று சொல்லக்கூடிய இனத்தை எடுத்துக் கொண்டால் அதிலே 18 பிரிவுகளுக்கு மேலே இருக்கிறது. குறிப்பாக அம்பலகாரர் என்பது கிராமத்திலே இருக்கக்கூடிய பெயர். அம்பலகாரரை கூப்பிடுங்க என்று சொல்வது அந்தக் கிராமத்திலே இருக்கக்கூடிய அம்பலகாரர் பட்டம். ஆகவே, அம்பலகாரர், முத்தரையர், முத்துராஜா, மூப்பனார் என்று பல பிரிவுகள் இருக்கின்றன. தாயுடு என்று கூட சென்னையிலே அழைக்கப்படுகிறது. இங்கே இருக்கக்கூடிய நான்கு கோடி மக்களில் இரண்டு கோடி மக்கள் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இதை அரசு பரிசீலனை செய்து மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரங்களைத்தான் பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு மிக விரிவாக ஆராய்ந்து அறிக்கையை அரசுக்கு அளித்திருக்கிறது. இந்த முத்தரையர் பட்டியலில் பல்வேறு பெயர்களில் பிரிவுகள் அடங்கி இருக்கின்றன. ஆகவே, அதற்குள்ளே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஆண்டி அம்பலம் அவர்கள் தெரிவித்ததை போலத்தான் இந்த வலையர் என்று அழைக்கப்படுகிறவர்கள் தமிழகத்தில் திருச்சி, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சீர்மரபினராகவும் மற்றும் பல பகுதிகளில் மிக பிற்படுத்தப்பட்டோராகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றனர். ஆகவேதான் இப்போது இப்படி பிற்படுத்தப்பட்டவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்றும், சீர்மரபினர் என்றும் பிரிக்கத் தொடங்கினால் நூற்றுக்கணக்கான ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் மேலும் பல கோரிக்கைகளை எழுப்புவதற்கு வாய்ப்பை அது அளித்து விடும். ஆகவேதான் அரசு இப்போது அந்தப் பரிசீலனையை மேற்கொள்ளவில்லை.

முற்பகல் 9—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கவேல் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி மிக நியாயமான கேள்வியாகும். ஏன் என்றால் முத்தரையர் இன மக்கள் என்பது—(சிரிப்பு) நான் யதார்த்தமாகச் சொல்கிறேன். சிரிப்பதற்காகச் சொல்லவில்லை—மிக மிக பின்தங்கிய வகுப்பினர். ஆதி திராவிடர்களைப் போலத்தான் அவர்களுடைய வாழ்க்கை இருந்து கொண்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே வாக்காளர்கள் மட்டும் 40 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். ஆக, இப்படி எல்லா கிராமங்களிலும், தமிழக முழுவதும் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் மேலாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மீது பற்றும் பாசமும் நூற்றுக்கு நூறு கொண்டவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட இன மக்களை டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே மிகவும் பின்தங்கிய பட்டியலிலே சேர்க்கப்பட்டது. ஆனால் சேர்க்கப்பட்டு அந்தப் பட்டியலிலே இருக்கிறதே தவிர, அவர்களுக்கு பிராக்டிகலாக எத்தப் பலனும் போய்ச் சேரவில்லை. இது வரையில், —so far— போய்ச் சேரவில்லை. பேக்வார்ட் கிளாசுக்குக் 'கோட்டா' கொடுக்கிறார்கள். மோஸ்ட் பேக்வார்ட் கோட்டாவிலே உள்ள அந்த முத்தரையர் இன மக்கள் யாருக்கும் போய்ச்சேரவில்லை. யார் யாருக்கோ போய்ச் சேருகிறது. ஆகவே, கொடுத்திருக்கிற அந்தப் பலன் அவர்களுக்குப் போய்ச் சேருவதற்கு, மாண்புமிகு டாக்டர் புரட்சித்

தலைவி ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பாரா? அதேபோல், ஏனைய வலையர், மூப்பனார் போன்ற அனைவரையும் ஒன்று சேர்த்து—பெயர்தான் முத்தரையர்—அந்தப் பெயரை மோஸ்ட் பேக்வார்ட்-லே சேர்ப்பதற்கு மீண்டும் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முடிவு அரசாக எடுத்த முடிவு அல்ல. அதற்காக என்றே இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு என்று திரு. அம்பாசங்கர் தலைமையிலே அமைக்கப்பட்டு,—அதிலே பல்வேறு முத்தரையர் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கூட இருந்திருக்கிறார்கள். — எல்லோரும் தமிழ்நாடு முழுவதும் சென்று, ஆராய்ந்து மிக விரிவாகவும், தெளிவாகவும் அறிக்கையை வழங்கி இருக்கிறார்கள். முத்தரையர், முத்துராஜா முத்துலியர், முத்தழகர், முத்துலிய மூப்பனார், செட்டிநாடு வலையர், வலையர் பாளையக்காரர், பாளையக்கார நாய்க்கர், முத்துராஜா நாயுடு என்று பல்வேறு பெயர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலிலே இருக்கிறது. அதிலேதான் இந்தக் குழு மிக விரிவாக ஆராய்ந்துதான், — நான் முன்னாலே சொன்னதைப் போல இப்படிப்பட்ட வலையர் அம்பலக்காரர் என்று அழைக்கப்படுகிறவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக அதிலே சில மாவட்டங்களிலே இருப்பவர்களை டீ-நோட்டிபைட், சீர்மரபினராகவும் அவர்கள் குறிப்பிட்டு, மக்களுடைய எண்ணிக்கையையே தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் இங்கே இன்னொரு குறையைத் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரை பிற்படுத்தப்பட்டவர் பட்டியலிலே இருக்கிற முத்தரையர்களானாலும் சரி, மிகவும் பிற்படுத்தப்பட்ட பட்டியலிலே இருக்கிற அம்பலக்காரர்களானாலும் சரி, அல்லது சீர்மரபினர் பட்டியலிலே இருக்கிறவர்களானாலும் சரி, அவர்களுக்கு உரிய சலுகையை, அரசாங்கம் சட்டப்படி வழங்குகிற சலுகையை நிச்சயம் அவர்கள் பெற முடியும். அதிலே குறை இருந்தால் அரசுக்குச் சுட்டிக்காட்டினால், உடனடியாக அதைக் களைவதற்கு முயற்சி எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலக் கேள்விக்கும், துணைக் கேள்விக்கும் பதில் சொல்லுகின்றபோது, ஆதாரமாக அம்பாசங்கர் கமிஷனை, பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவினுடைய பரிந்துரைகளை மேற்கோள் காட்டினார்கள். அந்த அம்பாசங்கர் கமிஷனுடைய பரிந்துரைகள் இந்த மன்றத்திலே பல முறை விவாதிக்கப்பட்டு, மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது கூட அந்தப் பரிந்துரைகள்



முழுவதும் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்பதை குறிப்பிட்டு அது கிடப்பிலே போடப்படும் என்று கூட இந்த மாமன்றத்திலே அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட அந்த கமிஷனுடைய பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, இன்றைக்கு அதைத்தான் நான் ஆதாரமாக வைத்து செயல்படுவேன் என்று சொன்னால், அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. எனவே மீண்டும் ஒரு கமிஷனை நியமித்து, முத்தரையர்கள் மட்டுமல்ல, முக்குலத்தோர் மட்டுமல்ல, இன்னும் பல கம்யூனிட்டிகள் — ஒரே கம்யூனிட்டியிலே டீ-நோட்டிபைட் டிரைப்ஸும் இருக்கிறார்கள், மோஸ்ட் பேக்வார்ட்டும் இருக்கிறார்கள், பேக்வார்டும் இருக்கிறார்கள், இந்த அனாமலியைப் போக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல் இந்த அம்பாசங்கர் கமிஷனை மட்டும் வைத்துக் கொண்டு, தொடர்ந்து பேசிக் கொண்டு இருப்பது இந்த அரசுக்கு நியாயந்தானா என்பதையும் உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினாலே அமைக்கப்பெற்று, அவர்கள் சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்ற ஒரு குழுவினர். அரசுக்கு அறிக்கையை தந்தார்கள். அரசு அதைப் பரிசீலித்து, எது எது ஏற்றுக்கொள்ளக் கூடியது என்று முடிவெடுத்து 1985 ஆம் ஆண்டிலேயே அதற்காக அரசு ஆணை பிறப்பித்தது. ஒரு குழு தன்னுடைய அறிக்கையைத் தெரிவிக்கிறபோது, அதிலே ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்களும், ஏற்றுக்கொள்ள இயலாத கருத்துக்களும் இருக்கலாம். ஆகவே அந்தக் குழுவை இப்போது நாம் குற்றம் சொல்லமுடியாது. ஒரு பொருள் பற்றி இரு கருத்துக்கள் தோன்றுவது என்பது ஜனநாயக நாட்டிலே இயற்கைதான். அது ஒன்றும் முரண்பாடு உள்ளது என்று சொல்லமுடியாது. இப்போது 5 ஆண்டுகள், 6 ஆண்டுகள் ஆகியிருக்கிறது. அந்தயொட்டி, அந்தக் குழுவினுடைய தீர்ப்பையொட்டி, கருத்துக்களையொட்டிதான் அரசு சில நடவடிக்கைகளை எடுத்து, அதை அமல்படுத்திக்கொண்டிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இனிமேல் ஒரு புதிய குழு அமைத்து, புதிய சூழ்நிலையில் புதிய பரிசீலனையை நாம் செய்ய வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் முடிவு எடுத்து, அப்படி தேவையானால், அதை நடைமுறைப்படுத்துவதற்கு அறிவிப்பார்கள். இப்போது நமக்கு அடிப்படையாக வைத்திருக்கிற ஒரு ஆதாரமாக, அந்த இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு — அம்பாசங்கர் தலைமையிலே அமைந்த குழுவினுடைய அறிக்கையை வைத்துக் கொண்டு, அரசு முடிவு எடுத்திருக்கிறதே தவிர, அம்பாசங்கர் குழு சொன்ன அத்தனையும் அரசு ஏற்றுக்கொண்டது என்ற பொருள் அல்ல. அதிலுள்ள சில கருத்துக்களை நாம் ஆதாரமாக வைத்துக் கொண்டு, அவர்கள் திரட்டித் தந்திருக்கிற அந்தப் புள்ளி

விவரங்களை வைத்துக் கொண்டு, அரசு முடிவு எடுத்து, அதில் ஆணை பிறப்பித்து, அதை அமல்படுத்திக்கொண்டிருக்கிறோம். அதிலேயிருந்து நாம் சில மாறுதல்களையும் செய்து கொண்டிருக்கிறோம். தேவையானால் ஒரு புதிய குழு அமைக்க வேண்டுமா, மீண்டும் பரிசீலிக்க வேண்டுமா என்பதைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 123, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

123—

காரைக்குடியில் நூலகக் கட்டிடம்

*4409—திருமதி கற்பகம் இளங்கோ :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காரைக்குடியில் நூலகக் கட்டிடம் வாடகைக் கட்டிடத்தில் செயல்படுவதால் அதற்கு நூலகக் கட்டிடத்தை நகரின் மையத்தில் அரசு செலவில் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காரைக்குடி நகரில் தனியார் அல்லது உள்ளாட்சி நிறுவனத்திடமிருந்து இலவச காலிமனை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இலவச காலிமனை பெறப்பட்டவுடன் நூலக ஆணைக் குழு நிதியிலிருந்து நூலகக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கூரியமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனை இடம் கிடைத்தவுடன், ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதாகக் கூறினார்கள். எப்போது துவங்கும் ? அதற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் கிடைத்தவுடன் கட்டிடம் கட்ட ஆரம்பிக்கப்படும். இரண்டு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தக் கட்டிடம் அமையும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 124- திரு. எஸ். எஸ். ராமசுப்பு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

124—

கிளைக் காசநோய் மருத்துவமனை

*4898—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம் அச்சங்குட்டம் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதியில் பீடிசுற்றும் தொழிலாளர்கள் நிறைய பேர் வாழ்வதால், இப்பகுதியில் கிளைக் காசநோய் மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தனியாக கிளைக் காசநோய் மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் பகுதியைச் சேர்ந்த அச்சங்குட்டம் கிராமத்தைச் சுற்றி பல கிராமங்களில் பீடித் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் காச நோயினால் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அச்சங்குட்டம் பகுதியில் காசநோய் மருத்துவமனையின் கிளை ஒன்றைத் தொடங்க வேண்டிய அவசியம் இருப்பதனால் நீங்கள் அதனை மறுபரிசீலனை செய்து, அதைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்வீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளத்தில் இப்போது 30 படுக்கைகள் கொண்ட ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அங்கே நான்கு மருத்துவர்கள் பணியாற்றி வருகிறார்கள். இப்போது அங்கேயே கூட புற நோயாளிகளாக இருந்து, அவர்கள் மருத்துவம் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இப்போது இருக்கிற முறைப்படி, காச நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வெளியிலே புற நோயாளிகளாகவே வந்து மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு முழுவதுமான வாய்ப்பு இருக்கிறது. அதுவுமல்லாமல், நாகர்கோவிலில் 400 படுக்கைகளோடு கூடிய மிகப்

பெரிய ஒரு மருத்துவமனை இருக்கிறது. அதோடு தென்காசியிலே அதற்கென்று தனியாக ஒரு மையம் இருக்கிறது. எனவே சுற்றிச்சுற்றி இவ்வளவு வசதிகள் இருக்கின்ற காரணத்தினால், தனியாக அங்கே ஒன்று துவக்க வேண்டிய அவசியமில்லை இருக்கின்ற அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே அவர்கள் மருத்துவம் பெறுவதற்கு வசதிகள் இருக்கின்றன.

முற்பகல் 10-00

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற மருத்துவமனைகளிலேயே ஏரானமான வசதிகள் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஆலங்குளத்திலே பிரைமரி ஹெல்த் சென்டர் ஒன்று இருக்கிறது. அங்கே காசநோய்களுக்குரிய மருந்துகள் இல்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. அவற்றை வெளியிலேயிருந்து வாங்கிக் கொண்டு வரக்கூடிய சூழ்நிலையும் இருக்கிறது. அதனால் அங்கே இந்த நோயினால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரிதும் துன்பப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து, அந்த ஆஸ்பத்திரிக்கு உரிய மருந்துகளை சப்ளை செய்வதோடு, ஏற்கெனவே அங்கே காச நோய் ஆஸ்பத்திரி கட்டுவதற்காக இதற்கு முன்னால் தீர்மானிக்கப்பட்டு, அது தொழிலாளர் நலத்துறையின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும்கூட நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அதை மறுபடியும் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 6 மாத காலத்திலே அங்கே காச நோய்க்கென வந்தவர்கள் 121 பேர்கள் என்று எனக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மருந்துகளைப் பொறுத்தவரையில் இல்லை என்ற பிரச்சினை இடையிலே ஏற்பட்டது. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 6 கோடி ரூபாயை இடைக்காலத்திலே கூடுதலாக ஒதுக்கிக் கொடுத்ததன் காரணத்தால் தேவையான மருந்துகள் எல்லா இடத்திற்கும் வாங்கி கொடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக காச நோய் சம்பந்தப்பட்ட தேவையான மருந்துகள் அந்த மருத்துவமனைகளிலே கிடைப்பதற்கான ஏற்பாடுகளை நாம் செய்யலாம். ஆகவே அதற்கென்று தனியாக ஒரு ஆஸ்பத்திரி தேவையில்லை. 121 பேர்கள்தான் இந்த நோயாளிகள் அங்கே வந்திருக்கிறார்கள். எனவே அந்த வகையிலே அவசியம் ஏற்படாது என்ற காரணத்தால்தான் அந்த மருத்துவமனையிலேயே இந்த மருத்துவத்தையும் பெறுவதற்கான வாய்ப்பை நாம் ஏற்படுத்தலாம். அதிகமான தீவிர சிகிச்சை தேவை எனப்படுபவர்களுக்கு பக்கத்தில் உள்ள தென்காசிக்கோ அல்லது நாகர்கோவிலுக்கோ அனுப்புவதற்கான ஏற்பாட்டை நாம் செய்ய முடியும் என்று நான் கருதுகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி. இது ஆலங்குளம் பற்றியது.

திருமதி ரமணி நல்லதம்பி : தலைவர் அவர்களே, பீடிச் சுற்றும் தொழிலைச் செய்கிறவர்கள் 7 வயதிலிருந்தே அந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். வறண்ட பகுதிகளிலே வாழ்கின்ற பெண்பிள்ளைகள் இதிலே அதிகமாக ஈடுபடுகின்ற காரணத்தாலே ஒரு சில ஆண்டுகளிலேயே இந்த நோய்க்கு அவர்கள் ஆளாகின்ற ஒரு வாய்ப்பு, நெல்லை மாவட்டம் போன்ற இடங்களில் பரவலாக காணப்படுகிறது. என்னுடைய தொகுதியிலேயும் அவ்வாறு நிலைமை இருக்கிறது. ஆகவே மொபைல் காச நோய் மருத்துவ மனை ஒன்று ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மொபைல் காச நோய் மருத்துவமனை எந்த அளவிற்குச் சிறப்பாக இயங்கும் என்பதை நம்மால் சொல்ல முடியாது. ஆங்காங்கே தேவையான அளவிற்கு இப்போது மருத்துவமனைகள் இருகின்றன. எனவே அங்கேயே போய் எல்லா மருத்துவ வசதிகளையும் அவர்களால் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் மொபைல் என்று போட்டால் அவர்கள் அங்கே போகிறார்களா இல்லையா என்பது தெரியாது. இப்போது இருக்கிற மருத்துவமனைகளிலேயே வருகிறார்களா என்பதை கண்காணிப்பது மிகக் கடினமாக இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட யோசனை தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 125. திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

125—

## மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து

*3475 திரு. எம் எம். எஸ். அபுல்ஹசன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை நகரிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து ஒன்று திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் விட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து விடப்படும் ?

[1992 மார்ச் 9

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பரிசீலனையில் இல்லை.

திரு. எம்.எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாயவரத்திற்கும் சென்னைக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலிருந்து சொகுசு பஸ் ஒன்று ஓடிக் கொண்டு இருந்தது. அது நல்ல லாபத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. சென்ற சர்க்கார் என்ன காரணத்தைக் கொண்டோ அதை முழுவதுமாக நிறுத்தி விட்டார்கள். மாயவரத்திற்கும் சென்னைக்கும் நீண்டதூரமாக இருப்பதினால் அந்தப் போக்குவரத்தை மறுபடி பரிசீலனை செய்து என்னுடைய தொகுதி மக்கள் நலனைக் கருதி உடனடியாக அந்த பஸ்ஸை விடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 8 பேருந்துகள் 16 நடைகளில் அங்கே பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அந்தப் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்று சொன்னால் ஒரு கிலோ மீட்டருக்கு 2 பைசா கூடுதலாக செலுத்த வேண்டியிருக்கிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 910 பேருந்துகள் தமிழகம் முழுவதும் இயங்கிக்கொண்டிருக்கிறது. சூப்பர் டீலக்ஸ் என்று சொல்லப்படுகிற பேருந்துகள் 140 பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். செமி டீலக்ஸ் என்று சொல்லப்படுகிற பேருந்துகள் 750 பேருந்துகளை நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முந்தைய ஆட்சிக் காலத்தில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நிறுத்தப்பட்ட பேருந்துகள் எதுவாக இருந்தாலும் நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவியின் ஆட்சியில் அது மீண்டும் இயக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியது போன்று எப்போது அதைச் செய்வார்கள்? உடனடியாகச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பர் டீலக்ஸ் என்று சொல்லப்படுகிற பேருந்துகளை இன்னும் அதிகம் இயக்குவதற்காக நாம் இப்போது பாடிகளைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். விரைவாக உங்களுடைய கருத்துக்களை ஏற்று அந்தப் பேருந்துகள் இயக்கப்படும்.



1992 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 126, திரு. ஜெ. பரந்தாமன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

126—

## நடத்துனர் மற்றும் ஓட்டுனர்களுக்குக் கட்டாய இன்சூரன்ஸ் திட்டம்.

*4296 டாக்டர் ஜெ. பரந்தாமன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களில் விபத்து ஏற்பட வாய்ப்புள்ள நிலையில் பணியாற்றும் நடத்துனர் மற்றும் ஓட்டுனர்களுக்குக் கட்டாய இன்சூரன்ஸ் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடத்துனர் மற்றும் ஓட்டுனர்களுக்கு கட்டாய இன்சூரன்ஸ் செய்யும் திட்டம் என்று எதுவுமில்லை. எனினும் ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்காக போக்குவரத்துக் கழகங்களின் செலவில் ஜனதா விபத்து காப்பீட்டு திட்டத்தில் பாலிசி எடுக்கப்பட்டு 1–9–1989 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இக்காப்பீட்டுத் திட்டத்தின்படி ஓட்டுநர் மற்றும் நடத்துனர்கள் விபத்தின் காரணத்தால் இறக்க நேரிட்டால், அல்லது நிரந்தரமாக உடலில் ஊனம் ஏற்பட்டால் ரூ. 15,000 லிருந்து அதற்கு ஏற்ப தொகைகள் கொடுப்பதற்கு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறோம். போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி திட்டத்தின் கீழ், தொழிலாளர்கள் ஈட்டுறுதி இணைப்பு காப்பீட்டு திட்டத்தின் அடிப்படையில், அவர்கள் இறந்தால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு 20,000 ரூபாய் வழங்கும் திட்டத்தையும் அரசு இன்றைக்கு மேற்கொண்டு இருக்கிறது.

முற்பகல் 10–05

டாக்டர் ஜெ. பரந்தாமன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் கனிவான பதிலுக்கு நன்றி. ஏழையின் துயரக் கண்ணீரைத் துடைக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவியின் அரசு, தமிழ்நாடு அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும் போது இறந்து விட்டால், அவர்கள் குடும்பத்திற்கு வழங்கப்படும் தொகை 40,000 என்பதை 60,000 ரூபாயாக உயர்த்தியிருக்

றார்கள். இதற்காக தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஏறத்தாழ 11 இலட்சம் பேரும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அதே போல போக்குவரத்துக் கழகங்களிலே பணி ஆற்றுகிற டிரைவர், கண்டக்டர் இவர்களுக்குக் கூட இந்தத் தொகை குறைவாக இருக்கிறது. எனவே, இன்றையச் சூழ்நிலையில் இந்தத் தொகை குறைவாக இருக்கின்ற காரணத்தினால் போக்குவரத்துக் கழகத்திலே பணியாற்றுகிற பணியாளர்கள் விரும்பினால், இவர்களுடைய சம்பளத்தின் அடிப்படையிலே மாதம் ரூ. 15, ரூ. 20, ரூ. 25 என்று சம்பளத்தில் பிடித்தம் செய்து கொண்டு சேமிப்பு முதலீட்டை உயர்த்தி, இந்த ஊழியர்கள் எதிர்பாராத விதமாக இறந்து விட்டால், இவர்களின் குடும்பத்திற்கு ரூ. 1 இலட்சம், 2 இலட்சம், 3 இலட்சம் என்ற அளவிலே வழங்க, புரட்சித் தலைவியின் அரசு கருணையோடு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இன்சூரன்ஸ் திட்டம்தான் இல்லை என்று நான் குறிப்பிட்டேனே தவிர மாண்புமிகு தமிழகத்தின் ஒப்பற்றத் தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் பொறுப்பு ஏற்றவுடன் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அவர் இந்த சட்டமன்றத்திலே அறிவித்து அதற்குப் பிறகு 40,000 ரூபாய் தலா வழங்குகிறேன் என்று சொல்லிகூட, அது வழங்கப்படவில்லை. நம்முடைய முதல்வர் பொறுப்பு ஏற்றபிறகு 28–9–1989 தேதியன்று, 1989 ஆம் ஆண்டு திராவிட முன்னேறக் கழகம் அறிவித்தாலும்கூட அந்தத் தொகை நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 1–9–1991 ஆம் ஆண்டு. இறந்த குடும்பங்களாக இருக்கின்ற ஏறத்தாழ திராவிட முன்னேற்றக் கழகத்திலே அறிவித்த 874 குடும்பங்களுக்கும் தலா 40,000 ரூபாய் வழங்கலாம் என்ற உத்தரவை வழங்கிய ஒப்பற்றத் தலைவிதான் நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு அவர் நின்றுவிடவில்லை. நம்முடைய அரசுத் துறை பணியாளர்களுக்கு இப்போது மாதம் 10 ரூபாய் பிடிப்புத் தொகை பிடித்ததற்குப் பிறகு அவர்களுக்கு 60,000 ரூபாய் வழங்குகிறார்கள். அதை நம்முடைய போக்குவரத்துத் தொழிலாளிகளுக்கு மாற்றி 5 ரூபாய் மாதம் கட்டினாலே 60,000 ரூபாய் வழங்கலாம் என்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அதையும் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>டாக்டர் ஜெ. பரந்தாமன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களிலே பணியில் இருக்கும்போது இறந்து விட்ட அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, ஊழியர்கள்



இறந்த ஒரு மாத காலத்திற்குள் பணி வழங்கி அவர்களுடைய குடும்பங்களுடைய கண்ணீரைத் துடைக்க ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் அரசு கருணையோடு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் இறையுள்ளம் கொண்ட முதலமைச்சராக விளங்கிக் கொண்டிருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவியின் ஆட்சியில், இறந்த குடும்பங்களுடைய வாரிசுதாரர்களுக்கு விரைந்து வேலை வாய்ப்பை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண் 127. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

127—

<u>நூல் விலை உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை.</u>

*2232 <u>டாக்டர் எஸ். சுந்தரராஜ்</u> :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நூல் விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நூல் விலையைக் கட்டுப் படுத்தும் பொருட்டு பஞ்சு மற்றும் சிட்ட நூல் போன்றவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாதென மத்திய அரசினை தாயுள்ளம் கொண்ட தமிழகத்தினுடைய புரட்சித் தலைவி அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பஞ்சு மற்றும் நூல் ஏற்றுமதியை மத்திய அரசு தற்போது தடை செய்துள்ளது. மற்றும் மாநிலத்திலுள்ள நூற்பாலைகள் 50 விழுக்காடு அளவிற்கு சிட்ட நூல் உற்பத்தி செய்தல் வேண்டும் என்றும் மற்றும் சிட்ட நூல் விநியோகஸ்தர்கள் விலைப் பட்டியல், பதுக்கலைத் தடுத்தல் போன்றவற்றின் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அது அல்லாமல் மனிதாபிமானம் படைத்த தாயுள்ளத்தின் தலைவி புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் தனியார் துறையின்கீழ் உள்ள கைத்தறி

[1992 மார்ச் 9

நெசவாளர் சங்கங்களுக்கு 2,000 பேல்கள் சிட்ட நூல் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு வழங்கப்படும் விலையில் கைத்தறி இயக்குநரால் விநியோகிக்கப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாயிடங்களிலும் நூல் தாராளமாக கிடைக்கின்றன. ஆனால் விலைதான் ஏறிக்கொண்டே போகிறது. ஆகவே, அந்த விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு நெசவாளர்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் நூல் பாங்க் அமைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான குறிப்புகள் தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்விப் போட்டால் அதற்கான விளக்கத்தைத் தர முடியும்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விலை அதிகமாக ஏறும்போது அந்த நூலை வாங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏதாவது விசேஷ சலுகையை அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பஞ்சினுடைய விலை 50 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. இப்போது கோ–ஆப்டெக்ஸ் வாயிலாக 5 முதல் 8 சதவீதம் வரையிலும் தள்ளுபடி விலையை கூட்டுறவுத் துறைக்கு உட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது டெக்ஸ்டைலினுடைய வேலைநிறுத்தம் காரணமாக ஏராளமான நூல் முடங்கியிருக்கிறது. பஞ்சின் மார்க்கெட் விலை குறைக்கப்பட்டு இருக்கிற சூழ்நிலையிலும் திட்டமிட்டு நூல் விலையை குறைக்காமல் இருக்கிறார்கள் என்பதை அரசு அறிந்து அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக புகார்கள் வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



1992 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 128. திரு. நா. கா. பழனிசாமி; டாக்டர் எம். கருப்புசாமி; திரு. மெ. ஆண்டி அம்பலம்; டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

128—

பாண்டியாறு புன்னம்புழா திட்டம்.

*9951. திரு. நா. கா. பழனிசாமி :
டாக்டர் எம். கருப்புசாமி :
திரு. எம். ஆண்டி அம்பலம் :
டாக்டர் மு. சீனியம்மாள் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் நிறைவேற்றவேண்டிய தக்க முயற்சிகள் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. கா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியை இந்த அரசு எடுத்துக்கொண்டிருப்பதை அறிந்து அதை மனமாரப் பாராட்டுகிறேன். ஆனால் இந்தத் திட்டத்தை கடந்த 20, 30 ஆண்டு காலமாக பல்லடம், அவிநாசிப் பகுதிகளில் தேர்தல்கள் நடைபெறுகின்ற காலத்தில் எல்லாம் அந்த பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றுவோம் என்ற வாக்குறுதியை அங்கே போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் அனைவருமே சொல்லிக்கொண்டு இருக்கிற பிரச்சினையாக இருக்கிறது. அந்த பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தால் நிரந்தரமாக வறட்சியாக இருக்கின்ற கோவை மாவட்டத்தினுடைய அவிநாசி, பல்லடம் போன்ற பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் கிடைக்கக்கூடிய வாய்ப்பாக இருக்கிறது. அது நீலகிரி மாவட்டம் கூடலூருக்கு அருகில் தேவாளை

என்ற இடம் மிக அதிகமாக மழை பெய்கின்ற இடம். அந்த இடத்திலிருந்து பாண்டியாறு—புன்னம்புழா போன்ற ஆறுகள் உற்பத்தியாகிச் செல்கின்றன. அதிலே 18 ஆயிரம் கோடி கன அடி தண்ணீர் கடலிலே வீணாகக் கலக்கிறது. தமிழ் நாட்டுப் பகுதியிலிருந்தும் 3 ஆயிரம் கோடி கன அடி தண்ணீர் அதிலே கலந்து வீணாகிக் கொண்டிருக்கிறது. அதை முன்பு 1960 ஆம் ஆண்டில் மின்சார திட்டமாக ஆய்வு செய்யப்பட்ட திட்டங்களில் பாண்டியாறு—புன்னம்புழா, சோமுட்டிப்புழா நீர் மின் திட்டத்தில் ஒன்றாகும். எனவே, 1969 ஆம் ஆண்டில் மத்திய அரசு அதற்கு நீர் மின் திட்டமாக அனுமதி கொடுத்த போது அங்கே நிலாம்பூர் என்ற இடத்தில் நிலம் பெறுவதில் பிரச்சினை ஏற்பட்டு தடைப்பட்டது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திரு. பழனிசாமி, நீங்கள் கேள்வியாகக் கேட்க வேண்டும். அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். நீங்கள் ஒரு பெரிய ஸ்டேட்மெண்டே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

<u>திரு. நா. சா. பழனிசாமி:</u> தலைவர் அவர்களே, அதற்குப் பிறகு அதை விவசாயிகள் நீர்ப்பாசன திட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்ததன் காரணமாக அந்தத் திட்டத்தை நீர்ப்பாசன திட்டமாக ஆய்வு செய்தார்கள். அதற்குப் பிறகு கேரள அரசு அது ஒத்து வராது; பொறியியல் துறையால் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டமாக இல்லை என்று சொன்ன காரணத்தால் தடைப்பட்டு இருக்கிறது. அந்த கேரள அரசோடு அது சம்பந்தமாக பேசி முடிக்கின்ற திட்டம்; விரைவாக முடிக்கின்ற திட்டம் இந்த ஆட்சியில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் சாலியாற்றின் இணை நதிகளாகிய பாண்டியாறு மற்றும் புன்னம்புழா ஆகியவை தமிழகத்தில் உற்பத்தியாகி மேற்கு நோக்கிப் பாய்ந்து சாலியாற்றில் கலக்கின்றது. இந்நதிகளில் தமிழ்நாட்டின் எல்லையில் ஒரு நீர்மின் திட்டம் அமைத்து மின் உற்பத்தி செய்வதற்காக ஒரு ஒப்பந்தம் 1965 ஆம் ஆண்டு கேரள-தமிழக அரசுகளிடையே ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி மின் உற்பத்திக்குப்பின் வெளியேறும் நீர் அந்த நதியிலேயே விடப்பட்டு மேற்கு நோக்கிப் பாய்ந்து கேரளத்திற்குச் செல்வதாக இருந்தது. அந்தத் திட்டத்திற்கு கோவை மாவட்ட விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து நம்முடைய கிழக்குப் பகுதிக்குத் திருப்பிவிடவேண்டுமென்று சொன்னதன் காரணத்தினாலே பேச்சுவார்த்தை கேரள அரசோடு நடத்தப்பட்டு அங்கே ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது. அந்த நிபந்தனை என்னவென்-





றால், கேரள அரசு, காவிரிப்படுகையில், கேரளத்தில் பவானி ஆற்றில் அமைக்கப்படவிருக்கும் கேரள-பவானி திட்டத்தில், பவானி ஆற்று நீரை மேற்கே திருப்புவதற்கு தமிழகம் ஒப்புதல் அளித்தால்தான் பாண்டியாறு—புன்னம்புழா நீரை கிழக்கே திருப்புவதற்கு ஒப்புதல் அளிக்க முடியும் என்பதாகும். இந்த நிபந்தனை கேரள அரசால் விதிக்கப்பட்டது. அதற்காக இரண்டு அரசுகளும் பேசி, இந்தப் பிரச்சினை காவிரி ஆற்று நீர்சம்பந்தமான பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினாலேயும், அந்தக் காவிரி நீர் பிரச்சினை இன்றைக்கு நடுவர் நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தினாலேயும், இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து இருக்கின்ற காரணத்தினாலேயும், தமிழக அரசு உடனடியாக ஒரு முடிவை எடுக்க முடியாமல் கொஞ்சம் காலம் தாழ்ந்திருக்கிறது. இன்றைக்கு, காவிரிப் பிரச்சினையிலே நம்முடைய ஒப்பற்றத் தலைவி தமிழகத்தினுடைய புரட்சித் தலைவியினுடைய முயற்சியால் நல்ல நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, இத்திட்டம் பற்றி கேரள அரசோடு பேசி, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையிலே பேசி, இந்தத் திட்டத்தை வெகு விரைவிலே நிறைவேற்றுவதற்கு இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>டாக்டர். எம். கருப்புசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னிந்தியாவின் சிரபுஞ்சி என்று அழைக்கக்கூடிய அளவிற்கு மிக அதிகமாக மழை பெய்யக் கூடிய தேவாலை, கூடலூர் போன்ற மலைப் பகுதிகளிலிருந்து வரும் நீரெல்லாம் சுமார் 60 கிலோ மீட்டருக்குள்ளாக அரபிக் கடலிலே சென்று கலந்து விடுகிறது. ஆகவே, பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் விரைவாக முடிக்கப்பட்டால் கூடலூர் மாநகரத்திற்கு குடிதண்ணீர் பிரச்சினை தீர்வதோடு, பவானி ஆற்றின் நீர் மட்டமும் உயரும் என்பதால் அதை விரைவாக முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, இந்தத் திட்டத்தினுடைய அடிப்படைகள், அதற்கான பிரச்சினைகள் போன்றவற்றை தெளிவாக நான் விளக்கி இருக்கிறேன். நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலேதான். இந்த 9 மாத காலத்திலே ஏற்கனவே, கேரள நீர்ப்பாசன அமைச்சர் இங்கே வந்து நம்மோடு பேசிவிட்டு சென்றிருக்கிறார்கள். அதற்கான, அடுக்கடுக்கான முயற்சிகளெல்லாம் நாம் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, அதற்கான முயற்சிகளை நம்முடைய அரசு மிக விரைவாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 9

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் எல்லோரும் நம்பியிருப்பது விவசாயம். நாம் விவசாயத்தை நம்பி இருக்கிற காரணத்தினாலே, கனம் அமைச்சர் அவர்கள் இந்த அணை கட்டும் திட்டம் பற்றி குறிப்பிடும்போது 'கட்டப்படும்' என்று சொல்லியிருக்கிறார்கள். மகிழ்ச்சி. குறிப்பாக, தமிழகத்தைப் பொறுத்த அளவிலே மழைக்காலங்களிலே வெள்ளப்பெருக்கு எடுக்கும்போது நீரெல்லாம் சமுத்திரத்திற்குச் சென்று வீணாகக் கலந்து விடுகிறது. அப்படி வீணாகச் சென்று கடலில் கலக்கின்ற நீரை தடுத்து, தேக்குவதற்கு இந்த அரசாங்கம் நல்ல ஒரு திட்டத்தை, அணைத் திட்டங்களை ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறியவேண்டும். என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவிலே சைந்தமலை, அழகர் மலை, சிறு மலை போன்ற மலைப் பிரதேசங்கள் இருக்கின்றன. மழைக் காலங்களிலே வெள்ளம் ஏற்பட்டு, நிறைய தண்ணீர் சமுத்திரத்திற்குப் போவதாலே அங்கேயெல்லாம் அணை கட்டி தண்ணீரைத் தேக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆண்டி அம்பலம், இந்தக் கேள்வி, பாண்டியாறு—புன்னம்புழா பற்றியது. உங்கள் தொகுதிக்கும் இதற்கும் ரொம்ப தூரம் இருக்கிறது; 100, 150 மைல் தூரம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குப் பதில் சொல்லியிருக்கின்றீர்கள். இருந்தாலும் இன்றைக்கு, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளைத் திருப்பி விடுகின்ற திட்டம், பல்வேறு மலைகளிலே வீணாக இருக்கின்ற தண்ணீரையெல்லாம் ஒன்றுபடுத்தி அணைகள் கட்டும் திட்டமெல்லாம் பொதுப்பணித் துறையால் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்தந்த ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. சின்னியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலுள்ள அவிநாசி தொகுதி மிக மிகப் பின்தங்கிய பகுதியாகும். நிலத்தடி நீர் சுமார் 600 அடிக்கு கீழே உள்ளது. எந்தவிதமான அணைகளோ ஆறுகளோ அவிநாசி தொகுதியிலே இல்லை. குடிப்பதற்கு நீரின்றி மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். விவசாயத்திற்குத் தண்ணீர் இன்றி, விவசாய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இந்த பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தை, இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்திலே, எவ்வளவு காலத்திற்குள் முடிக்க முடியும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1992 மார்ச் 9]

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இரண்டு அரசுகளுக்கிடையே இருக்கின்ற பிரச்சினை. ஆகவே, அந்த இரண்டு மாநிலங்களுக்கு இடையே இருக்கின்ற பிரச்சினை என்கின்ற காரணத்தினாலே அவைகளை முறையாகப் பேசி, சுமுகமான முறையிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று, இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களினுடைய மேலான முயற்சியின் பேரிலே இன்றைக்குத் துரிதமான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். வெகு விரைவிலே, கேரள அரசோடு இணக்கமான ஒரு முடிவை ஏற்படுத்தி, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 129, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

129—

நிலக்கோட்டை தொகுதியில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம்.

*4249 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நிலக்கோட்டை தொகுதி, ராமநாயக்கன்பட்டி, ரெங்கப்ப நாயக்கன்பட்டி இரண்டையும் இணைக்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக முயற்சித்த இந்தத் திட்டம், இப்பொழுதாவது—நம்முடைய மாண்புமிகு மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களுடைய காலத்திலே இதற்கு ஆம்

என்று சொன்ன பதிலிலே நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு பணத்தில் எஸ்டிமேட் தயார் செய்யப் பட்டுள்ளது? இந்த வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்பட இருக் கிறது என்பதை அறிவிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வருவார்களா?

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, வைகை ஆற்றின் வலது கரையி லுள்ள ரெங்கப்ப நாயக்கன் பட்டியையும், இடது கரையில் உள்ள ராமக்க நாயக்கன் பட்டியையும் இணைக்கும் வகையில் வைகை ஆற்றில் பாலம் கட்டும்படி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரி இருக்கின்றார்கள். அது ஏறக்தாழ 125 மீட்டர் நீளத்திலே அந்தப் பாலம் கட்டப்பட வேண்டும். உயர் மட்டப் பாலம் அமைக்க வேண்டும் என்றால் ஏறத்தாழ ஒன்றரை கோடி ரூபாய் செலவு ஆக வேண்டும். தாம்போகி கட்ட வேண்டுமென்றால் நாற்பது இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவே, அந்த இடத்திலே தாம்போகி கட்டி னால் போதும் என்ற நிலையை ஏற்படுத்தி, அதற்கு மத்திய சென்ட்ரல் ரோடு ஃபண்டிலே அதைச் சேர்த்து, இன்றைக்கு அதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டு, ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக் குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாற்பது இலட்சத்திலே கட்டினால் கூடப் போதுமானதுதான். அதை சென்ட்ரல் ரோடு ஃபண்டிலே சேர்ப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இதற்கு, சென்ட்ரலிலே இருந்து சேங்க்ஷன் செய்யப்பட்டு அவர்கள் பணம் ஒதுக்க வேண்டுமா, அல்லது நாமே—நம்முடைய அரசே இந்தப் பணத்தை ஒதுக்கி இந்த வேலை மேற்கொள்ளப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, பாலங்களைக் கட்டுகின்ற நேரத் திலே நாம் இரண்டு திட்டங்களை வைத்து இருக்கின்றோம். ஒன்று, நம்முடைய அரசின் சார்பிலே பார்ட்—2 ஸ்கீம் என்ற ஸ்கீமிலே இன்றைக்குப் பாலங்கள், சாலைகளை—முக்கியமான திட்டங்களை எடுத்துக் கொள்கிறோம். அதைப்போல மத்திய அரசின் உதவியோடு, சென்ட்ரல் ரோடு ஃபண்ட் ஸ்கீம் என்ற அந்த நிதியின் சார்பிலே வேலைகளை எடுத்துக் கொண்டிருக்கி றோம். சில வேலைகளை நம்முடைய திட்டத்தின் கீழ் எடுத்து கொண்டு செய்கிறோம். சில வேலைகளை மத்திய அரசினுடைய திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டு செய்கிறோம். இந்த வேலையைப் பொறுத்தமட்டிலே, நம்முடைய மத்திய தொகுப்பு நிதியிலேயிருந்து கொடுக்கின்ற இந்த சென்ட்ரல் ரோடு ஃபண்ட்



ஸ்கீம் என்ற அளவிலே இந்தத் திட்டத்திலே சேர்த்து இருக்கி றோம். ஆகவேதான், அந்த ஒப்புதல் வந்தவுடன் இந்த வேலை ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக் குத் தெரிவித்துக் கொள்கிறேன்; இந்த அவைக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> வினா எண் 130 திரு. வ. சத்தியமூர்த்தி. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

130—

<u>மலட்டாற்றில் ஓடுபாலங்கள் கட்டும் திட்டம்.</u>

*5178—<u>திரு. வ. சத்தியமூர்த்தி:</u>

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடிக்கு அருகி லுள்ள கொம்பூதிச்சாலை மற்றும் எம். கரிசல்குளம் சாலையை குறுக்கிடும் மலட்டாற்றில் இரண்டு ஓடுபாலங்கள் கட்ட செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:</u> மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. வ. சத்தியமூர்த்தி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு தமிழக அரசினுடைய பகுதி—2 திட்டத்திற்கு அங்கிருந்து எடுத்து கருத்துரு அனுப்பப்பட்டு, நிதிநிலை பற்றாக்குறையின் காரணமாக நிலுவையில் போடப் பட்டது. ஒவ்வொரு ஆண்டும் பொதுமக்கள் பிரதிநிதி ஒரு திட்டத்தைப் புதுப்பித்து அரசுக்கு அனுப்புவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள இயலாது. ஆகவே, ஒரு ஆண்டு பகுதி—2 திட்டத்திற்கு இந்தத் திட்டத்திற்குக் கருத்துரு அனுப்பப்பட்டு, ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்று சொன்னால் மறு ஆண்டுக்கு அந்த திட்டத்தைத் துறையே தன்னிச்சையாக, தானே பரிந்துரை செய்வதால்தான் அந்தக் காரியங்கள் நடைபெற

இயக்கும். ஆகவே, இப்படியொரு திட்டம் இல்லை; கேள்விக்கு இடமில்லை என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒன்றை நான் கொண்டு வர விரும்புகிறேன். 1947-லிருந்து 67 வரையில் இந்தக் கடலாடி தொகுதி—தேவர் திருமகன் தொகுதியாக இருந்து, அவர் வாய்ப் பூட்டுச் சட்டத்திற்கு உட்பட்டு, அரசுக்கு கோரிக்கை வைக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்ட பகுதி. ஒரு 15, 20 கிராமங்களுக்கு ஐந்து கிலோமீட்டர் தொலைவில் அடையக்கூடிய தூரத்தை அறுபது கிலோமீட்டர் சுற்றித்தான் சென்று இன்றையத்தினம் அடைய வேண்டிய அவல நிலை உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்வி போட வேண்டும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : ஆகவே, இந்தப் பாலத்தின் குறுக்கே ஒரு பாலம் சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டினால், 50 கிலோமீட்டர் சுற்றாமல் 5 கிலோமீட்டர் தொலைவிலேயே சென்று வரக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஆண்டு இல்லை என்றாலும், அடுத்த ஆண்டு இதற்கு ஒரு கருத்துரு பெற ஆணை பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலாடித் தொகுதியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கடலாடி தொகுதிக்குத்தான் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, வெகுநாட்களாகக் கிடப்பிலே கிடந்த, ஏறத்தாழ 18 கோடி ரூபாய் அளவிலேயுள்ள மலட்டாறு அணைக்கட்டுத் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கடலாடித் தொகுதிக்கு அதிகமான சலுகை தரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலே, அவர்கள் குறிப்பிட்டுள்ள இரண்டு பாலங்களும் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பாலங்களாகும். ஒன்று, கடலாடி—எம். கரிசல்குளம் சாலையில் ஒரு குழாய் பாலம் அமைத்தல்; இன்னொன்று, ஒப்பிலான்—கடலாடிச் சாலையில் ஒரு தாம்போகி கட்டுதல். இந்த இரண்டு பாலங்களுக்கும் முதல் பாலத்திற்கு 100 மீட்டர் நீளத்திற்கு கட்ட வேண்டியிருக்கிறது. ஏறத்தாழ, 35 லட்சம்



ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது பாலத்திற்கும் 100 கிலோ மீட்டர் நீளத்திற்கும் 35 லட்சம் ரூபாய் செலவில் ஒரு தாம்போகி கட்ட மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியச் சாலையையும் இப்படி எடுத்துக் கொண்டால், 35 லட்சம் ரூபாய் என்று எடுத்துக் கொண்டால், அதற்கான நிதியாதாரங்களுக்கு வாய்ப்பு இல்லை. எனவேதான், வருகிற தேவைகளைக் கருதி, இருக்கிற நிலைமைகளைக் கருதி, அங்கே இருக்கிற பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, எவ்வெவற்றிற்கு முக்கியத்துவம் முதலிலே கொடுக்க வேண்டுமோ அவ்வவற்றிற்குக் கொடுத்து, அப்படிப்பட்ட நிலைமைகளை தமிழகம் முழுவதும் எடுத்துக் கொண்டு வருகிறோம். ஆகவே, உறுப்பினர் குறிப்பிட்ட சாலைகளின் முக்கியத்துவத்தைக் கருதி, இது சம்பந்தமான பிரச்சினைகளைப் பரிசீலித்து, நிதியாதாரத்திற்கேற்ப அடுத்த ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 131, திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

131—

கீழ்ஒரத்தூர் கிராமத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*1295 திரு. ச. புரட்சிமணி :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில், கீழ் ஒரத்தூர் என்ற கிராமத்திற்கு கூட்டுக்குடிநீர்த திட்டம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் உள்ள கீழ் ஒரத்தூர் கிராமம், மங்களூர் மற்றும் 24 கிராமங்கள் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆய்வில் உள்ளது.

திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா என் 132, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

132—

## நியாயவிலைக் கடைகள்.

*1315 திரு. பே. தர்மலிங்கம் :
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பொதுமக்கள் உணவுப்பண்டங்கள் நியாவிலலக் கடையில் வாங்க 4 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளதால் இதனை மாற்றி உள்ளூரிலேயே நியாவிலைக் கடைகள் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாய விலைக்கடை இயங்கி வருகிறது. அப்படி ஏற்கெனவே நியாயவிலை கடை இயங்கி வருகிற கிராமங்களில் ஆறு, காடு, மலை போன்ற இயற்கைத் தடைகள் இருக்குமானால், 3 கிலோ மீட்டருக்கு உள்ளே இருந்தாலும், வேறு புதிய கடைகள் பகுதி நேரத்திலே திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பொது மக்கள் 4 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று நியாயவிலைக் கடைகளில் உணவுப் பண்டங்களை வாங்கி வருகிற கஷ்டம் எல்லாத் தொகுதிகளிலும் இருந்து வருகிறது. குறிப்பாக, பாளையங் கோட்டைத் தொகுதியில் கண்டித்தான்குளம், அடைமிதித்தான் குளம், ஆலங்குளம் ஆகிய கிராமங்களிலுள்ள தாய்மார்கள் சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து சென்று, அங்குள்ள கிராமத்திலுள்ள கடைக்குச் சென்று பொருள் வாங்க வேண்டியிருக்கிறது. எனவே, மேற்கூறிய 3 கிராமங்களையும் இணைத்து, அடைமிதித்தான் குளத்தில் ஒரு நியாய விலைக் கடையை அமைக்க தாயுள்ளம் கொண்ட நம்முடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல், ஏழை மக்கள், குறிப்பாக இல்லத்தரசிகள் நடந்து போக



1992 மார்ச் 9]

வேண்டிய அவசியம் இல்லையென்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதையும் மீறி, சில விசேஷக் காரணங்கள் இருக்குமானால், அதையும் பரிசீலனை செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரிடமே, தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் எழுதிக் கொடுக்க வேண்டும். அது பரிவோடு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைக்க முன்பு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருந்தது. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்த அதிகாரம் இல்லை. ஆகவே, மாண்புமிகு தாயுள்ளம் கொண்ட நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் அரசு, அப்படிப்பட்ட நியாயவிலைக் கடைகளை அமைத்துத் தருவதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. ஆனால் மாநிலப் பதிவாளருடைய இசைவைப் பெற வேண்டுமென்ற ஒரு கண்டிஷனையும் அதிலே சேர்த்து வைத்திருக்கிறோம். ஆனாலும், எந்தவித இடையூறும் ஏற்படாமல் அதிக நாட்கள் தள்ளிப்போடாமல் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற முறையிலே அமைத்து, கூட்டுறவுக் கடைகள் இல்லாமல், படித்து வேலையில்லாத பட்டதாரிகளுக்கு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைகள் திறக்கப்படுவது ; வேலை கொடுப்பதற்காக என்ற நோக்கம் இல்லாமல், அத்தியாவசியப் பண்டங்கள் குடும்பங்களுக்குப் போய் சேர வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் கடைகளைத் திறந்து கொண்டிருக்கிறோம். 800 அட்டைகளுக்குக் கீழே இணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கடைக்கும் ஆண்டுதோறும், அதை நடத்துவதிலே நஷ்டம் ஏற்படுகிறது. அந்த நஷ்டத்தையும் அரசாங்கம் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மாநிலப் பதிவாளர் ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய்க்கு மேலே நஷ்டம் ஏற்படுகிறது என்று கேட்டு

கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகையையும் முழுமையாக நாம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். எனவேதான் பகுதி நேரக் கடைகளைத் திறப்பதற்கு அரசு தயாராக இரு கிற இந்த நேரத்திலே, வாடகை இல்லாமல் கட்டிடத்தை அந்தந்தப் பகுதியிலே இருப்பவர்கள் கொடுப்பார்களேயானால், அங்கு பகுதி நேரக் கடைகளை அமைக்க அரசு தயாராக இரு கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடை கள் நேரம் அவையின முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 133, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமி வேளாண்மைத் துறை அமைச்சர்.

133—

குடுமியான்மலை அரசுப் பண்ணையில் விவசாயக் கல்லூரி.

*336—திரு. சி. குழந்தைவேலு :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்கண் வினாவுக்கு விடையளிப்பாரா :

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, குடு யான்மலை அரசுப் பண்ணையில் விவசாயக் கல்லூரி அமைக்கு செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமி பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் உள் பண்ணையை வேளாண்மைக் கல்லூரியாக மாற்றும் திட்ட அரசின் ஆய்வில் இல்லை.

திரு. சி. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, குடுமியான்மலை விவசாயப் பண்ணை சுமார் 20 ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலங்களை உடையதாகும். மேலும், அங் ஒரு கல்லூரி நடைபெறுவதற்கு வேண்டிய அனைத்துக் கட்டி வசதிகளும் உள்ளன. மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் குடுமியா மலையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் கோ பில் இருந்தது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலாவது அங்கு ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கும் திட்ட ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாவளத் தீவின் நம்பிக்கை நட்சத்திரம் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் குடுமியான்மலையில் உள்ள பண்ணையை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக ரூ. 88.38 இலட்சம் செலவில் இந்த அரசு அந்தப் பண்ணையை விரிவுபடுத்தி உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 134, டாக்டர் பெ. வீரபாண்டியவ. மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

134—

செங்கத்தில் அரசு ஊழியர்களுக்கு வீடு.

*4431—டாக்டர். பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கத்தில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்பெறும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி. தாலுக்கா தலைமையிடமாக உள்ளது. பல்வேறு துறைகளில் அரசு ஊழியர்கள் கிட்டத்தட்ட 1,000 பேர்கள் பணியாற்றுகின்றனர். செங்கம் மிகவும் சிறிய நகரம். அங்கு வாடகைக்கு வீடுகள் கிடைப்பது மிகவும் அரிது. அதோடு செங்கத்திற்கு வந்து பணியாற்ற சிறந்த அரசு ஊழியர்கள் மறுத்துவிடுகிறார்கள். அங்கு வாடகைக்கு வீடுகள் கிடைப்ப தில்லை என்பதால் வர மறுத்து விடுகிறார்கள். ஒருவேளை சிறந்த ஊழியர்கள் அங்கு வருவதாக இருந்தால் மாற்றல் வாங்கி அவர்களே சென்று விடுகிறார்கள்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவிற்கு சம்பந்தம் இல்லாமல் போகிறீர்கள். அரசு ஊழியர்களுடைய நடத்தை பற்றி, ஆற்றல் பற்றி பேசக்கூடாது. உங்களுடைய துணைக் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் செங்கத்தில் தயவுகூர்ந்து அரசு ஊழியர்களுக்கு விரைவில் வீடு கட்டித் தந்து, ஒரு இன் சென்டிவ்வாக செங்கத்திற்குத் தரும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இதை அரசு ஆராயுமா என்று அறிய விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணைப்படி அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டங்களைப் பொறுத்த வரை, அதனைச் செயல்படுத்த மாவட்டத் தலைமையிடமும், வருவாய் கோட்டத் தலைமையிடமும் மட்டும்தான் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளன. அரசு அலுவலர்கள் குடியிருப்பு கட்ட அரசுக்குச் சொந்தமான நிலம், மற்றும் மாவட்ட ஆட்சியருடைய பரிந்துரை இருக்குமாயின், அரசு இதைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 135, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

135—

திருச்சி நகரில் பழுதடைந்த சத்துணவுக் கூடங்களைச் செப்பனிடுதல்.

*1796 டாக்டர் ஜி. ஆர். மாலா :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி நகரின் பல்வேறு பகுதிகளில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் (I.C.D.S.) கீழ் இயங்கி வரும் சத்துணவுக்கூடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு அறியும்.

(ஆ) அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.



டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரில் ஐ.சி.டி.எஸ். திட்டத்தின் கீழ் சுமார் 200 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் முழுவதும் பழுதுபட்ட நிலையில் சுமார் 60 மையங்கள் உள்ளன. மேற்கூரை மற்றும் தரைத்தளம் பழுதடைந்த நிலையில் சுமார் 40 மையங்கள் உள்ளன. இவற்றின் சீரமைப்புப் பணிகளை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள், திருச்சி மாவட்ட ஆட்சியர் முன்னிலையில், தனியார் நிறுவனங்கள், தொழில் அதிபர்கள் மற்றும் சேவை நிறுவனங்களிடம் ஒப்படைத்து பல மாதங்கள் ஆகியும் சீரமைப்பு வேலை துவங்கப் படாமல் இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் ஏறக் குறைய 1968 ஐ.சி.டி.எஸ். சத்துணவு மையங்கள் இருக்கின்றன. இதிலே பழுதுபட்டிருப்பவை 757. இதில் பழுதுபார்க்கப்பட்டவை 306. இதற்கு ஏற்பட்ட செலவு ரூ. 10.14 இலட்சம். மீதம் உள்ளவைகளை விரைவாக, துரிதமாக நடவடிக்கை எடுத்து அதன் பழுதுபார்ப்புப் பணிகளை அரசு விரைவில் நடைமுறைப்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையத்திற்கு வரும் குழந்தைகள் அமர்ந்து உண்பதற்கும், படிப்பதற்கும், கோடைகாலத்தின் கொடுமையிலிருந்து குழந்தைகளைக் காப்பதற்கும் இந்தப் பழுது பார்க்கும் பணிகளை விரைந்து முடித்துத் தர அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வேகமான நடவடிக்கை எடுத்துத்தான் இந்த 306 மையங்களை வேகமாகச் சீர்திருத்தி இருக்கிறது. நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தால் எவ்வளவு வேகமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு வேகமா அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 136, திரு. வே. தம்புசாமி. இருக்கையில் இல்லை.

வினா எண் 137, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

[1992 மார்ச் 9

137—

## மாநில தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்.

*6091 திரு. ஆ. சுப்புரத்தினம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து உரிய பரிந்துரைகள் செய்ய, மாநில தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம் (State Commission on SC and ST ) அமைப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் இதுபோன்ற ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதா என்றும், அப்படி அமைக்கப்பட்டிருப்பின் அதன் முழு விபரங்களையும் கொடுக்குமாறு, ஆந்திர பிரதேச மாநில அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. அம் மாநில அரசிடமிருந்து பதில் கிடைத்தவுடன் தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திரு. ஆ. சுப்புரத்தினம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசினுடைய சமீபத்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் தொகை ஒரு கோடிக்கும் சற்று அதிகமாக வருகிறது. இப்படி மிகப் பெரிய அளவில் வாழக்கூடிய இந்த தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுடைய பிரச்சினைகள் பற்றி ஆராய்வதோடு மட்டுமல்லாமல் சமுதாயத்தில் நசுக்கப்பட்டு, அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு சமூகத்தின் அடித்தளத்திலே வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களின் பிரச்சினைகளை ஆய்வு செய்து மாநில அரசுக்குப் பரிந்துரை செய்ய இதுபோன்ற ஒரு ஆணையம் மிகவும் அவசியம் ஆகிறது. அதுமட்டுமல்ல, இந்திய அளவில்....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : கேள்வியாகக் கேளுங்கள்.



1992 மார்ச் 9]

<u>திரு. ஆ. சுப்புரத்தினம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவில் இதுபோன்ற ஒரு ஆணையம் ஏற்கெனவே அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே எதையும் விரைந்து முடிக்கக்கூடிய ஆற்றல் நிரம்பிய புரட்சித் தலைவியினுடைய புனித ஆட்சியில் குறிப்பிட்ட காலத்திற்குள் இப்பேர்பட்ட ஆணையம் அமைக்கப்பட்டு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் வாழ்விலும், சமூகத்திலும் மறுமலர்ச்சி ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநில அரசிடமிருந்து அதன் அமைப்பு, அதிகாரம், பணிகள் மற்றும் தகுதி ஆகியவை குறித்த விவரங்கள் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. பதில் இன்னும் வரவில்லை. பதில் கிடைக்கப்பெற்றவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. செ. கு. தமிழரசன்.

<u>திரு. செ. கு. தமிழரசன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய கமிஷன் மத்திய அரசிலேயும் நம்முடைய அரசியல் சட்ட விதிகளின்படி தொடர்ந்து அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மராட்டியத்திலும், பீகாரிலும், உத்தர பிரதேசத்திலும் இப்படிப்பட்ட கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. பக்கத்து மாநிலமான ஆந்திராவிலும் அமைக்கப்பட்டு இருக்கிறது. கர்நாடகத்திலும் கூட தற்காலிகமான காலவரையறையுடன் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. 18 விழுக்காடு என்பது முறையாகச் செயல்படுத்தப்படவில்லை; சில இடங்களில் ஓப்பன் காம்பெட்டிஷனில் இருப்பதைக்கூட இந்தக் கணக்கிலே சேர்த்துக் கொடுத்துவிடுகிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : சுருக்கமாகக் கேள்வி கேட்கவேண்டும். 18 சதவீதம் என்பது பெரிய பிரச்சினை.

<u>திரு. செ. கு. தமிழரசன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலிச் சான்றிதழ்கள் பல பெருகி அதன்மூலம் பலர் உயர்பதவிகளுக்குக் கூட வந்துவிடுகிறார்கள். அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தருகிற பல்வேறு சலுகைகளைக் கூட சிலர் பினாமியாகப் பயன்படுத்திவிடுகிறார்கள். எனவே, இவைகளை எல்லாம் முறைப்படுத்துவதற்கு இப்படிப்பட்ட கமிஷன் அத்தியாவசியமாகத் தேவை. தமிழக அளவில் குறைந்தபட்சம் ஒரு ஆலோசனைக் குழு என்ற அளவில் கூட வெகு நாட்களாகப் போடப்படாமல் இருக்கிறது. நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் அது அமைக்கப்பட வேண்டும். அதை அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 9

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் காலத்தில்தான் ஆதிதிராவிட மக்களுடைய கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக இதயதெய்வம டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எஸ்.எஃப்.சி. அதாவது ஸ்டாண்டிங் ஃபைனான்ஸ் கமிட்டி நடக்கிறபோது, அவர்கள் கோரிக்கை வைக்காமலேயே இந்த ஆதிதிராவிட மக்களின் கல்வித் தரம் உயர்த்தப்படவேண்டுமென்று சொல்லி, அதற்காக நூல் நிலையத்தை உருவாக்கவேண்டும் என்று 12.5 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு எந்த அரசும் எடுக்காத அளவுக்கு நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆதிதிராவிட மக்களிடத்திலேயிருந்து கோரிக்கை வராமலேயே, சிந்தித்துப் பார்த்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தக் கோரிக்கையையும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவியிடம் எடுத்துச் சொல்லி உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 138. திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

138—

மீன் வளர்ச்சிக் கழக தினச்சம்பள பணியாளர்களை நிரந்தரம் செய்தல்.

*765 திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தில் பல ஆண்டுகளாக தினச்சம்பள அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு நிரந்தரம் செய்யப்படாமல் தொழிலாளர் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களின் பணி நாட்களை கணக்கில் கொண்டு தொழிலாளர் நல அடிப்படையில் அவர்களை நிரந்தரப் பணியமர்த்த அரசு முன்வருமா ?



1992 மார்ச் 9]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பல்வேறு துறைகளில் மாதச் சம்பள அடிப்படையில் ஏற்படும் காலியிடங்களின் வாய்ப்புகள் ஏற்படும்போது அரசு விதிகளின்படி தகுதி வாய்ந்த தினக் கூலி பணியாளர்களை, மாத சம்பள அடிப்படையில் பணியில் அமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினக்கூலியாக தமிழகத்திலே இந்த இலாகாவிலே எத்தனை பேர்கள் வேலை செய்கின்றார்கள்? எத்தனை ஆண்டுக் காலமாக வேலை செய்கிறார்கள் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பல்வேறு அமைப்புகளில் சுமார் 58 பேர் பணியாற்றுகின்றார்கள். இது வரையில் 36 தினக்கூலிகள் மாத சம்பள அடிப்படையிலே பணியில் அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே மட்டும் இருக்கின்றவர்கள் நூற்றுக் கணக்கான பேர்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களை உடனடியாக நிரந்தரப்படுத்துவதற்கு ஏதாவது திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊழியர்களின் கோரிக்கையானாலும் சரி, ஏழையெளியவர்களின் கோரிக்கையானாலும் சரி, அக்கோரிக்கைகளை கனிவுடன் கேட்டறிந்து உடனுக்குடன் உரிய நடவடிக்கைகளை எடுத்து தீர்க்க வேண்டும் என்ற ஆர்வத்துடனும் அக்கறையுடனும் செயல்படும் நமது வாழும் தெய்வத்தை வாழ்த்த வார்த்தைகளே இல்லை. புதிய பதவிகள் உருவாக்கப்படும் போதும் மாதச் சம்பள பணியிடங்கள் காலியாகும் போதும், தகுதி மற்றும் மூப்பு நிலை அடிப்படையில் தற்காலிக மற்றும் தினக் கூலிகள் ஆகியோர் அப்பணிகளில் அமர்த்தப்படுகின்றனர் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

[1992 மார்ச் 9

136—

## ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா.

*1508 திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் வட்டம், கடம்பங்குடி கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாமல் இருப்பது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கையினை இன்று வெளியிடுவார்கள். (குறுக்கீடு).

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் [illegible] பானம் பற்றி உங்களுக்குச் [illegible] கொடுத்திருக்கிறீர்கள். சில விதிகளின் கீழ் எதிர்க்குறிப்பு [illegible]



1992 மார்ச் 9] [பேரவைத் தலைவர்]

என்பதைப் பற்றி [illegible]. [illegible] நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. நீங்கள் அதைப் பற்றிப் பொது விவாதத்தில் பேசுகிறபோது பேசலாம். (குறுக்கீடு) அதைத்தான் நான் சொல்கிறேன். இன்றைக்கு அதிலே [illegible] டாம். (குறுக்கீடு) அது சம்பந்தமாகப் பேசுவதற்கு வாய்ப் பில்லை. நான் எந்த அடிப்படையிலே அதை இப்போது எடுப்பதற்கு இல்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்து இருக்கிறேன். (குறுக்கீடு).

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தயவு செய்து பொது விவாதத்தில் அதைப் பேசுங்கள். பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியைத்தான் பொது விவாதத்திலே பேச வேண்டும். நான் கொடுத்திருக்கின்ற சில முடிவுகள் மீது விளக்கம் அவையிலே கேட்கக் கூடாது. நேரடியாக நீங்கள் என்னுடைய அறைக்கு வரலாம். என்னுடைய அறையிலே வந்து கேட்கலாம்.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. நான் கொடுத் திருக்கின்ற முடிவுகள் மீது இங்கே பேச முடியாது. அது உங்களுக்குத் தெரியாதது அல்ல. (குறுக்கீடு) நான் கொடுத்திருக்கின்ற முடிவின் மீது நீங்கள் இங்கே வந்து அவை யிலே பேசமுடியாது.

நான் இப்போது அனுமதி கொடுத்திருப்பது விதி 110-ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை வெளி யிடுவது. அதற்கும் நீங்கள் கொடுத்திருக்கின்ற ஒத்திவைப்புப் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கையை வெளியிடுவார்கள்.

திரு. ஜி. பழனிசாமி : **

திரு. ச. இராமச்சந்திரன் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அறையிலே வந்து பேசுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைப்படி நீக்கப் பெற்றது.

## 4. விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

### கோவை மாவட்டத்தில் விசைத்தறி நெசவாளர்களின் பிரச்சினைக்கு ஏற்பட்டுள்ள தீர்வு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் கடந்த 19–1–1992 முதல் சுமார் 50 நாட்களாக நடந்து வந்த விசைத்தறி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் குறித்து ஒரு அறிக்கை வெளியிட விரும்புகிறேன். 8–3–1992, அதாவது நேற்று இரவு 9 மணிக்கு, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உயர் அலுவலர்கள், பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், கிணத்துக்கடவு சட்டமன்ற உறுப்பினர், விசைத்தறி உரிமையாளர்கள், மொத்தத் துணி விற்பனையாளர்கள் முன்னிலையில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தையில் ஒப்பந்தம் ஏற்பட்டு வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டது. விசைத்தறி உரிமையாளர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட துணி நெசவிற்கான கூலி போதவில்லை என்ற காரணத்தினால் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த வேலை நிறுத்தத்தினால் கோவை மாவட்டத்தில் சுமார் 1,25,000 விசைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு இருந்தனர். இந்தப் பேச்சு வார்த்தையில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி மொத்தத் துணி வியாபாரிகள் ஏற்கனவே கொடுத்து வந்த நெசவுக் கூலியை விட திருப்பூர் ரகத்திற்கு 22 விழுக்காடு கூடுதலாகவும், சோமனூர் ரகத்திற்கு 27 விழுக்காடு கூடுதலாகவும் அளிப்பதாக ஒப்புக் கொண்டுள்ளனர். இன்று 9–3–1992 முதல் அனைத்துத் தொழிலாளர்களும் வேலைக்குச் செல்வார்கள். நிறுத்தப்பட்டிருந்த விசைத் தறிகள் இன்று முதல் இயங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10–45

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

~~திரு. ச. இராமச்சந்திரன் : நான் 3 ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன்.~~



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூன்று ஒத்திவைப்புத் தீர்மானங்களையும் 9 மணிக்குக் கொடுத்திருக்கிறீர்கள். விதி முறையின்படி ஒரு மணி நேரத்திற்கு முன்னால் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் தயவு செய்து தவறான முன்உதாரணத்தை வைக்கக்கூடாது. தாங்களும் நானும் மதிக்கிற மதிப்பிற்குரிய முன்னாள் பேரவைத் தலைவர் திரு. மதியழகன் அவர்களே இங்கே ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். (குறுக்கீடு). "Consent to the above group of Adjournment Motions given notice of by some Member was withheld by the Chair on the ground that the Member had ample opportunities to refer to the subjects raised in the Motions in the course of the general discussion on the Budget and during the discussion on voting on demands for grants and Appropriation Bill"

என்று கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) ஆனால் நீங்கள் ஒரு தவறான முன் உதாரணத்தை ஏன் இங்கே பின்பற்றக் கூடாது என்று கேட்கிறீர்கள்.

(குறுக்கீடு) இல்லை, இல்லை, கேளுங்கள். (குறுக்கீடுகள்) விதியை நீங்கள் பின்பற்றலாமே. (குறுக்கீடுகள்) இவ்வளவைச் சொல்கிறவர்கள் ஒரு மணிநேரத்திற்கு முன்னர் கொடுக்கவில்லை என்பதை நான் குறிப்பிட்டிருக்கிறேன், அதைச் சொல்லலாமே (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது அதைப் பேசுங்களேன் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, நீங்கள் அதைப் பற்றி நிறையப் பேசி, அறிக்கைகள் விட்டு, அரசாங்கத்தின் சார்பிலேயும் நிறைய மறுப்புகளும், அறிக்கைகளும் விடப்பட்ட ஒரு பிரச்சினை. அந்தப் பிரச்சினையை நீங்கள் பொது விவாதத்திலே எழுப்பலாம், பேசலாம். அதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. அதிலே பயன்படுத்திக் கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன். (குறுக்கீடு) நான் ஒரு முடிவைத் தங்களுக்குத் தெரிவித்ததற்குப் பின்னர் அதன் மீது இப்படிப் பேசிக் கொண்டிருப்பது சரியல்ல.

திரு. ச. இராமச்சந்திரன் **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேச்சுரிமையைப் பறிப்பதல்ல, பேச்சுரிமையை நீங்கள் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. (குறுக்கீடுகள்). It has been held (குறுக்கீடு) கேளுங்கள், உங்களுக்குச் சொல்கிறேன். எல்லாவற்றையும் நீங்கள் தெரிந்து கொண்டே, பேரவையினுடைய விவாதத்தை நீங்கள் திசை திருப்ப தயவுசெய்து முயற்சிக்கக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இன்றைக்குப் பேசுங்களேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அவ்வளவு முக்கியமான பிரச்சினையைப் பேசாமல் வேறு என்ன பேசப் போகிறீர்கள் ? (குறுக்கீடுகள்) அவ்வளவு முக்கியமான பிரச்சினையைப் பொது விவாதத்தின் பேச்சின் போதே பேசலாமே, (குறுக்கீடுகள்) இன்றைக்கு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. குமாரதாஸ், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> **

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஒத்திவைப்புத் தீர்மானம், பொது விவாதத்தின்போது எடுப்பதில்லை என்கிற மரபை முன்னாள் பேரவைத் தலைவர் திரு. மதியழகன் இருந்த காலத்திலேயே சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் அவரை ஏற்றுக் கொண்டிருந்த ஒரு கால கட்டத்திலே சொல்லியிருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) உட்காருங்கள், பொது விவாதம் (குறுக்கீடுகள்)

<u>திரு. ச. இராமச்சந்திரன் :</u> **

(திரு. ச. இராமச்சந்திரன் அவையிலிருந்து வெளியேறினார்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஒரு மணி நேரத்திற்கு முன்னர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்க வேண்டுமென்று விதி இருந்தும் (குறுக்கீடு) அரை மணி நேரம் பேரவைத் தலைவரிடம்--நீங்கள் செயலாளரிடம் கொடுத்திருக்கிறீர்கள். விதியைப் படியுங்கள். நீங்கள் செயலாளரிடம் சேர்ப்பித்ததே 9 மணிக்கு. செயலாளரிடம் ஒரு மணி நேரத்திற்கு முன்னர் கொடுக்க வேண்டுமென்ற விதியைத் தெரிந்தும், உங்களுடைய பிரச்சினை முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதியிருந்தால் ஒரு மணி நேரத்திற்கு முன்னர் கொடுத்திருப்பீர்கள். இங்கே, வந்து அவையினுடைய நேரத்தை வீணடிக்க வேண்டும் அல்லது அவையினுடைய கவனத்தைத் திசை திருப்ப வேண்டும் என்பதே உங்களுடைய நோக்கமாக இருக்கக் கூடாது. (குறுக்கீடு) குமாரதாஸ் உட்காருங்கள், குமாரதாஸ் உட்கார வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் நிற்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு).

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> ** (குறுக்கீடு)

முற்பகல் 10-50

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இல்லை, இல்லை. விவாதத்திலே பேசுங்கள். பழனிசாமி பேசிய அனைத்தும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது (குறுக்கீடு) பொது விவாதத்தில் நீங்கள் பேசுங்கள். பேரவைத் தலைவர் ஒரு முடிவைச் சொன்னதற்குப் பிறகு இப்படி நின்று கொண்டு பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) குமாரதாஸ் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) குமாரதாஸ் உட்காருங்கள். வெளியேற்ற வேண்டிவரும்.

உறுப்பினர் குமாரதாஸ் அவர்களை அவையிலிருந்து வெளியேற்ற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) சார்ஜண்ட், குமாரதாசை வெளியேற்றவும். (குறுக்கீடு) குமாரதாஸ் வெளியேற்றப்படுகிறார்.

(டாக்டர் தே. குமாரதாஸ் வெளியேற்றப்படும் போது கோஷமிட்டுக் கொண்டே சென்றார்)

திரு. குமாரதாஸ் எந்த அறிவிப்பும் இன்றைக்குக் கொடுக்கவில்லை. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்று சொல்கிற குமாரதாஸ் எந்த அறிவிப்பும் கொடுக்காமல், யாரையோ திருப்திபடுத்துவதற்காக அவர் இப்படிக் கோஷமிடுவது தவறான முறை. (குறுக்கீடு) பழனிசாமி, உட்காருங்கள். உங்களுக்கு ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நீங்கள் கொடுத்த அறிவிப்புக்கு உங்களுக்குப் பதில் கொடுத்துவிட்டேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு ஒரு மணி நேரத்திற்கு முன்னாலே கொடுக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருந்தும், வேண்டுமென்றே பத்திரிகைகளில் தங்களுக்கு விளம்பரம் வேண்டுமென்பதற்காக இந்த மாதிரி நிலையை ஏற்படுத்துகின்ற உறுப்பினர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. பழனிசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) அதன்மீது என்னுடைய முடிவைத் தங்களுக்குச் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) அதை எடுப்பதற்கில்லை என்று சொல்லி இருக்கிறேன். என்னுடைய முடிவிற்கு மேலே என்ன இருக்கிறது ? (குறுக்கீடு) முதலில் பேரவைத் தலைவர் அனுமதிக்க வேண்டும். பேரவைத் தலைவர் அனுமதிக்கவில்லை என்று சொன்னதற்குப் பிறகு அதுப்பற்றி பேசக்கூடாது (குறுக்கீடு) பேரவைத் தலைவர் நின்று கொண்டிருக்கிறேன், தயவு செய்து உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு அவைமுன்னவர்.

(திரு. ஜி. பழனிசாமி வெளிநடப்புச் செய்தார்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட. . . .

திரு. இளம்வழுதி : ** (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன பிரச்சினைக்காக நீங்கள் நிற்கிறீர்கள் ? எந்த விதியின்கீழ் நிற்கிறீர்கள் ? (குறுக்கீடுகள்) பேரவையினுடைய எந்த விதியின்கீழ் நிற்கிறீர்கள் என்று சொல்லுங்கள் ? (குறுக்கீடுகள்)

(திரு. இளம்வழுதி வெளிநடப்புச் செய்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு இந்தப் பேரவைக்கு வந்திருக்கிற உறுப்பினர்கள் அத்தனை பேரும் விதி முறைகளுக்குக் கட்டுப்பட்டு, இந்தப் பேரவையை ஒழுங்குற, அமைதியாக, முறையாக, சீராக நடத்திச் செல்ல வேண்டுமென்று நம்மை நாமே கட்டுப்படுத்திக்கொள்ளும் அளவுக்கு விதிமுறைகளை வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்த விதிமுறைகளுக்குக் கட்டுப்படுவதுதான் ஜனநாயகப் பண்பாடாகும். பாராளுமன்ற நெறிமுறையாகும். அதைத் தாங்கள் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்கின்றீர்கள். இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்கள் நாட்டிலே ஏற்படுகிற குற்றங்கள், குறைகள், நாட்டிலே ஏற்படுகிற பல்வேறு பிரச்சினை களுக்குத் தீர்வு காண்பதற்கு எடுத்துச் சொல்வதற்காகத்தான் இருக்கிறார்கள். எந்தெந்தக் குறைகளை, எந்தெந்தக் குற்றங் களை, எந்தெந்தப் பிரச்சினைகளை, எந்தெந்த விதிகளின்கீழ் எப்படி எழுப்ப வேண்டுமென்று நாமே விதிமுறைகளை எல்லாம் வகுத்து வைத்திருக்கிறோம். அந்த விதிமுறைகளுக்குக் கட்டுப்பட மறுப்பது என்கிற ஒரு தன்மையை எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கிற சில மாண்புமிகு உறுப்பினர்கள் கையாளுகிறார்கள். என்றால், அவர்கள் ஜனநாயக முறையையே மீறுகிறார்கள். பாராளுமன்ற முறையையே எதிர்க்கிறார்கள். இந்த அவைக்குக் களங்கம் ஏற்படுத்த விரும்புகிறார்கள். இந்த அவை அமைதியாக நடைபெறக்கூடாது என்ற உள்நோக்கம் வைத்துச் செய்கிறார் கள் என்றுதான் நாம் ஒரு முடிவிற்கு வர வேண்டியிருக்கிறது. ஆகவே கட்டுப்பாட்டுக்கு அடங்குவதுதான் மனிதத் தன்மை யாகும். ஆகவே, அந்த வகையிலே தன்னைத் தானே கட்டுப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



படுத்திக் கொள்ள வேண்டுமென்பதுதான். தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்பவன் தான் தரணியைக் கட்டுப்படுத்து வான் என்று பழமொழி உண்டு. அந்த வகையிலே பொறுப் புள்ள எதிர்க் கட்சி வரிசையிலே உள்ள உறுப்பினர்கள் விதி முறைகளுக்கு மாறாகத் தாங்கள் தீர்ப்பு அளித்ததற்குப் பிறகும் செயல்படும் அந்த முறை சரியானதல்ல என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அவர்கள் திருந்தி, நல்லமுறையிலே, இந்த அரசு நடப் பதற்குத் தொடர்ந்து ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்க் கிறேன். எவ்வளவு பிரச்சினைகள் வேண்டுமானாலும் எழுப்ப லாம். எந்த ஒரு பிரச்சினைக்கும் அரசு அவ்வப்போது அறிக்கை அளித்துக் கொண்டிருக்கிறது ; தெளிவுபடுத்திக்கொண்டு வரு கிறது. நிலையைப் புரியவைத்துக்கொண்டு வருகிறது. இந்த அவையைப் பொறுத்து ஏதாவது பிரச்சினையை எழுப்பவேண்டு மானால், விதிமுறைகளுக்குட்பட்டு, விவாதத்தின்போது எந்தப் பிரச்சினைகளையும் அவர்கள் எழுப்பலாம். எந்தப் பிரச்சினை களுக்கும் பதில் சொல்ல அரசு ஆயத்தமாக இருக்கிறது. இதில் அரசு பின்வாங்காது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது விவாதத்தின் போது ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படுவ தில்லை என்பதற்குரிய பல்வேறு விதிமுறைகளும் மரபுகளும் மிகத் தெளிவாக இருப்பதை திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களுக்கு நான் என்னுடைய அறையிலேயே எடுத்துத் தெரி வித்தேன். அதற்குப் பின்னர் எழுத்து மூலமாகவும் அவருக்கு ஒரு அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. Practice and Procedure of Parliament by Kaul & Shakdhar—

"It has been held that an adjournment motion on a matter which can be raised during debate on the motion of thanks on the President's Address or Governor's Address in the case of Legislatures, Budget Discussions—இப்போது நடப்பது -motion on international situations, "இப்படிப்பட்ட நேரங்களில் motions regarding a matter of public importance such as food policy, etc. to be held in the same session is not in Order" இவ்வளவு தெளி வாக இருந்தும்கூட, திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் இங்கே கிளப்பிய இத்தனை பிரச்சினைகளும், Not in Order என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துக் கொள்கிறேன். அதன் பின்னர், அவர் இன்னொரு பிரச்சினையை என்னிடத்திலே சொன்னார். இதே அவையில் பட்ஜெட் விவாதத்தின்போது, ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது

என்கிற ஒரு செய்தியை எடுத்துச் சொன்னார். எப்போது எடுத்ததைச் சொல்கிறார் என்றால், இதே அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாக்கப்பட்ட மார்ச் 25ந் தேதிக்குப் பின்னர், மார்ச் 29ந் தேதி அன்றைய எதிர்க்கட்சிகளாக இருந்த அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகம் மற்றும் காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்களும் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த ஒரு கால கட்டத்தில் அவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ளாமல், அன்றைய ஆளுகிற கட்சிக்கு ஆதரவாக இருந்த திரு. லத்தீப் அவர்கள் கொடுத்த ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டதைச் சொல்கிறார்.

இப்படியொரு தவறான நடைமுறையை இங்கே முன்னுதாரணமாக எடுத்து வைத்துக்கொண்டு, ஏன் என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் அதைப்போல் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்கிறார்கள் என்று சொன்னால், தவறான முன்னுதாரணத்தை திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் போன்றவர்கள் ஏற்றுக்கொண்டு, தலையில் வைத்துக்கொண்டு ஆடலாமே தவிர, இந்தப் பேரவையினுடைய இந்தக் கண்ணியம் மிக்க பொறுப்பிலே இருக்கின்ற நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விவாதத்தின் போது இடையிடையே பேசிய திரு. பழனிசாமியினுடைய பேச்சு, திரு. குமாரதாசினுடைய பேச்சு மற்றும் திரு. பண்ருட்டி இராமச்சந்திரனுடைய பேச்சு அனைத்தும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) திரு. இளம்வழுதிக்கும் அனுமதியில்லை. அவர் பேசிய பேச்சு அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு)

## 5. ஒழுங்குப் பிரச்சினை.

### ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்புகளை உறுப்பினர்கள் கொடுக்க வேண்டிய காலம் குறித்து.

திரு. பி. வி. இராஜேந்திரன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். இதுவரை நடந்ததைச் சம்பந்தப்படுத்திப் பேசவில்லை. பொதுவாக ஒரு விதி. செகரட்டரியிடமோ அல்லது ஸ்பீக்கரிடமோ அட்ஜர்ன்மெண்ட் மோஷன்-ஐப் பற்றி அரை மணி நேரத்திற்கு முன்னால் கொடுத்தால் போதும் என்று இருக்கிறது. அதைத் தான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆனால் கொடுத்ததே சரியாக 9 மணிக்குக் கொடுத்திருக்கிறார்கள். 9-30 மணிக்கு அவை துவங்கியது ..........



திரு. பி. வி. இராஜேந்திரன் : செக்ரட்டரி என்றால் 1 மணி நேரம். ஸ்பீக்கர் என்றால் அரை மணி என்கிற மாதிரி சொல்கிறீர்கள். அதைத்தான் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுவாக, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கிறபோது, செயலகத்தில் கொடுப்பதாக இருந்தால், ஒரு மணி நேரத்திற்குள் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. பேரவைத் தலைவரிடமோ, செயலாளரிடமோ கொடுப்பதாக இருந்தால், அரை மணி நேரத்திற்கு முன்னர் கொடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுவதைப்போல, தமிழில் சொற்கள் இருப்பதில், 'இரண்டும் சேர்ந்து' என்பது போல் இருக்கிறது.

முற்பகல் 11-00

## 6. வரவு–செலவுத் திட்டம், 1992-93, பொது விவாதம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம். திரு. குமரி அனந்தன்.

*திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இரண்டு மணி நேரம் 24 நிமிடங்கள் இங்கே தளர்வற்று படித்தக் காட்சியினை நாம் கண்டோம். அப்போதும் நான் அதனை வரிக்கு வரி பார்த்துக் கொண்டிருந்த காரணத்தினாலும், அவருடைய நிதிநிலை அறிக்கையிலே அக்கறையைக் காட்டுகின்ற காரணத்தினாலும் ஒவ்வொன்றைப் பற்றியும் சில கருத்துக்களை இங்கே சொல்லுகின்ற வாய்ப்பைத் தந்த உங்களுக்கும் எம்மவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலிலே இது ஒரு துணிச்சலான வரவு–செலவுத் திட்டம். பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியிலே ஒரு வரவு-செலவுத் திட்டத்தை இங்கே தயாரித்துத் தருகின்ற போது, அவர்கள் கொடுத்திருக்கிற கருத்துக்களையெல்லாம் பார்க்கின்றபோது இது ஒரு துணிச்சலான வரவு–செலவுத் திட்டம் என்றே நான் சொல்ல வேண்டும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது

ஆளுகிற கட்சியினுடைய தோழமைக் கட்சியாக இருந்து கொண்டிருக்கிறவர்கள் எதிர்க் கட்சியாகவும் இருக்கிறபோது இரட்டைப் பணியை இங்கே செய்ய வேண்டி இருக்கிற காரணத் தாலே நட்போடு சில கருத்துக்களை நான் இங்கே எடுத்துக் காட்ட வேண்டி வரும். அதே நேரத்தில் பாராட்டுவதற்கும் ஏராளமாக இருந்து கொண்டிருக்கின்றன. நூற்றுக்கு நூறு எண்கள் பெறுகின்ற மாணவனாக தனது மகன் இருந்தாலும்கூட அந்தத் தாய்மை உணர்வு, போகிற நேரத்திலே பையன் பேனா எடுத்தானா என்று சில நேரத்திலே சிந்தித்தும், பேனா எடுத்திருக்கிறான் என்று தெரிந்தாலும்கூட உள்ளே மை இருக் குமா என்று ஒரு பக்கத்திலே சிந்தித்தும் — காரணம் எவ்வளவு நல்ல மாணவனாக அவன் இருந்தாலும், அந்த மை இல்லாத காரணத்தால் ஒரு எண்கூட குறைந்துவிடக் கூடாது என்று எண்ணுகிற அந்த உணர்வு — பார்க்கிற அந்தத் தாய் உணர் வோடு இங்கே பார்க்கிறபோது, பொருளாதாரத் துறையிலே சீரழிவிலே இருந்து கொண்டிருந்த ஒரு நாட்டைக் காப்பாற்றி விட்டார் மத்தியிலே இருக்கின்ற பிரதமர் என்று நமது முதல்வர் டாக்டர் ஜெயலலிதா அவர்களே இங்கே பாராட்டினார்கள்; தமிழகத்திலே பாராட்டினார்கள்.

அதைப் போலே, தமிழகத்திற்கு வரவிருந்த மிகப் பெரிய கேட்டை, இப்போது இருக்கிற கேட்டைவிட மிகப் பெரிய கேட்டை, தன்னுடைய இன்னுயிரைக் கொடுத்து ராஜீவ் காந்தி அவர்கள் எச்சரிக்கை செய்து இந்த உலகத்தைவிட்டுப் போய் விட்ட போதிலும், தான் பார்த்து, தான் பழகி, தன்னோடு கூட்டங்களிலே பேசிய அந்தப் புன்னகை பதித்த முகத்தை மறக்க முடியாத காரணத்தாலே தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் வீராங்கனையாக எழுந்து, விடுதலைப் புலிகள் என் கிற கொடியவர்களின் கரங்களிலே இருந்து தமிழகத்தைப் பாது காத்துத் தந்ததற்காக நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எனவே ஒருவரையொருவர் புரிந்து கொண்டிருக்கிற சூழ்நிலையில் மத்தியிலே உள்ள ஓர் அரசும், மாநிலத்திலே உள்ள ஓர் அரசும் செம்மையாக வழி நடத்துகிற ஒரு சூழ்நிலை தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் ஏற்பட்டிருக்கிறது.

இங்கே நீங்கள் விடுத்திருக்கிற வேண்டுகோளிலே, சரக்கு ஒப்படைப்பு வரி என்று சொல்லுகிற consignment tax என்பதற்கு ஒரு ஏற்பாடு செய்தாக வேண்டும் என்று நீங்கள் கேட்கிற கோரிக்கையிலே நியாயம் இருப்பதாகவே நாங்கள் கருதுகிறோம்.



அதைப்போல பல்வேறு காரியங்களை நாம் செய்திருப் பதை எல்லாம் இங்கே சுட்டிக் காட்ட வேண்டும். ஒரு சான்று சொல்வதாக இருந்தால், மத்திய-மாநில உறவுகளில், நிதி உறவுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று சொல்வது கூட வரவேற்கத்தக்கதுதான். ஆய் வுக்கு ஓய்வே கிடையாது. நல்ல விளைவுகள் ஏற்பட வேண்டும் என்று சொன்னால் ஆய்ந்து கொண்டே இருக்கலாம். ஆனால் இப் போது இருக்கின்ற சூழ்நிலையிலேகூட நமது மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலிலே தயாரிக்கப் பட்டுள்ள இந்த நிதி நிலை அறிக்கையில், நிதியமைச்சர் அவர்கள் ஒரு இடத்திலே சொல்லியிருக்கிறார்கள். ''மத்திய அரசு, மாநில அரசை கவனிக்கவில்லை என்பது போலவே தோன்றுகிறது'' என்று ஒரு வார்த்தையைச் சொல்லியிருக் கிறார். பல்வேறு இடங்களில் பாராட்டுக்கள் இருக்கின்றன. 36 இடங்களிலே மத்திய அரசைப் பற்றி குறிப்பிடப்பட் டிருக்கிறது.

அதிலே நமது நிதியமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கிற மனத்தாங்கல் என்னவென்று சொன்னால், சிறு சேமிப்புத் திட்டத்தை பின்வாங்கிவிடுகிற ஒரு எண்ணம் இருக்கின்ற காரணத்தாலே மாநிலத்திற்கு வருகின்ற வருவாய் வாய்ப்பு அடைக்கப்பட்டுவிடுமோ என்று சொல்லுகிற கவலைதான். நேற்றுகூட இதனை பேசியிருக்கிறார். இது முற்றிலு மாக அடைக்கப்படவில்லை, முற்றிலுமாக பின்வாங்கப்பட வில்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள் கிறேன்.

முற்பகல் 11-05

உதாரணத்திற்குச் சொல்வதாக இருந்தால் தேசிய சேமிப்பு திட்டம் என்று சொல்லுவதுதான் இங்கே 'வித்ட்ரா' பண்ணப் படுவது என்று சொல்லுகிற ஒன்று. நேஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட் என்று சொல்கின்ற வகையிலே இருந்து கொண்டு இருக்கின்ற சலுகைகள் மொத்த வரியிலே 20 சதவீதம் தள்ளு படி செய்து செலுத்துகின்ற அந்தச் சலுகை தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது. சிறு சேமிப்பை ஏழை எளியவர்களிடமும் விட்டு வைத்து இருக்கக் கூடாது என்று சொன்னால் மத்தியில் இருக்கிற நிதி அமைச்சர் அவர்கள் சொல் கிற காரணம் என்னவென்று சொன்னால் சிறு சேமிப்பில் போடுகின்ற அந்தத் தொகையில் எவ்வளவு வரியை அவர் செலுத்த வேண்டுமோ அந்த வரியை, 40 சதவீத வரியை ஏறத் தாழ தள்ளுபடி செய்ய வேண்டி இருக்கிறது. மத்திய அர சாங்கம் 40 சதவீத வரியை தள்ளுபடி செய்தது ஒருபுறம், அப்படிப் போடப்பட்ட தொகைக்கு சிறு வட்டி கொடுக்க

[திரு. குமரி அனந்தன்] [1992 மார்ச் 9

வேண்டி இருக்கிறது என்பது இன்னொருபுறம். ஆக, விதிக்க
வேண்டிய வரியை விதிக்கவில்லை: அதனாலே ஒரு இழப்பு.
வட்டி கொடுக்க வேண்டி வருகிறது; அதனாலே ஒரு இழப்பு.
இந்த இரண்டு இழப்புகளையும செய்யாமல் இருந்தால் அங்கே
சேமிக்கப்படுகின்ற பணம் எல்லாம் தமிழக அரசுக்கு உட்
பட, மாநில அரசுக்கு வருகின்றபோது அது இலவசமாகவே
வருகிறது. இதிலிருந்து நீங்கள் 75 சதவீதத்தை எடுத்துக்
கொண்டால், அது 14 சதவீத வட்டியாகத்தான் வருமே தவிர,
கடனாகத்தான் வருமே தவிர, அது இலவசமாக வராது;
ஒதுக்கீடாக வராது. எனவே மத்திய நிதி அமைச்சர் அவர்கள்
அப்படிச் சிந்தித்து இருக்கக் கூடும். மறு ஆய்வுசெய்ய வேண்டும்
என்று நாம் கேட்பதிலே தவறு இல்லை என்று சொன்னாலும்,
அவர்கள் மாநிலங்களைக் கவனிக்கவில்லை என்று நாம் சொல்ல
முடியாது என்பதற்கு நான் சில சான்றுகளைச் சொல்ல
விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு நேர்முக வரியிலே சில மாற்றங்களைச்
செய்து இருக்கிறார்கள் மத்திய நிதி அமைச்சர் அவர்கள்,
மத்திய அரசாங்கம். அப்படிச் செய்த காரணத்தினாலே இப்
போது வருகின்ற அதிகபட்ச வரி எவ்வளவு என்று சொன்னால்
நேர்முக வரியிலே மாற்றம் செய்த காரணத்தினாலே 795
கோடி ரூபாய். அந்த 795 கோடி ரூபாயிலே மாநிலங்களுக்
குக் கிடைக்க இருப்பது 435 கோடி ரூபாய். ஆக, மாற்றம்
செய்தாலும் கூட அந்த மாற்றம் மாநிலங்களுக்கு ஏமாற்றம்
தராத அளவுக்கு ஒரு பெரும் தொகை கிடைத்துக் கொண்
டிருக்கிறது. அதைப்போலவே சென்ற ஆண்டு திருத்தி அமைக்
கப்பட்ட நிலையிலேகூட 17,199 கோடி ரூபாய்தான் மாநிலங்
களுக்கு எல்லாம் வரியிலே பங்கு இருந்தது. ஆனால் நமது
நிதி அமைச்சர் அவர்கள் 1,293 கோடி ரூபாயைச் சேர்த்து
இப்பொழுது 18,412 கோடி ரூபாய் மாநிலங்களினுடைய
பங்காக ஒதுக்கி வைத்து இருக்கிறார்கள். ஆக, மாநிலங்களைப்
பற்றிய கவலை மத்திய அரசாங்கத்திற்கு இருந்து கொண்
டிருக்கிறது. அதைப்போலவே Central assistance for the
State plans— மாநிலங்களினுடைய திட்டங்களுக்கு உதவி செய்
கின்ற தொகை, இதற்கு முந்திய ஆண்டு 14,710 கோடி
ரூபாய், இந்த ஆண்டு 16,111 கோடியாக உயர்த்தப்
பட்டு இருக்கிறது. இந்த வகையிலே பார்க்கின்றபொழுது
நாம் இந்த அவையிலே இருந்து பேசுகின்ற நேரத்திலே
சொல்லுகின்றோமே, மத்தியிலே ஒரு கூட்டாட்சி, மாநிலத்திலே
ஒரு வளமான ஆட்சி என்று சொல்கின்ற அளவுக்கு, அந்த
வளமான ஆட்சி இருக்க வேண்டுமென்று சொல்கின்ற நிலையி
லேதான் மத்தியிலே இருக்கின்ற ஆட்சி சிந்திக்கிறது;
அதனாலேதான் அது பலமான ஆட்சியாக இருக்க வேண்டு
மென்று நமது முதல்வரும் நினைக்கிறார்கள்; நீங்களும்



1992 மார்ச் 9] [திரு குமரி அனந்தன்]

நினைக்கின்றீர்கள். நாம் ஒருவருக்கு ஒருவர் புரிந்துகொண்டு
செயல்படுகிறோம் என்பதற்காக நான் இதை எடுத்துக்
காட்டுகின்றேன்.

சிறு சேமிப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே இன்னும்
ஒன்று. இதை மறு ஆய்வு செய்வதிலே எனக்கு ஒன்றும்
ஆட்சேபணை இல்லை என்று சொன்னாலும், வெளியே
இருந்து பல கம்பெனிகள் தொடங்குகிறார்கள் என்ற
காரணத்திற்காக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் அவர்
கள் பங்கு மூலதனத்தை, பங்கு (Shares) பெற்றுக்
கொண்டு இருக்கிறார்கள். நீண்ட க்கியூ வரிசை என்று சொல்
கிறோமே, அந்த அளவுக்கு மக்கள் அதிலே பங்கு செலுத்து
கிறார்கள். 40 கோடி ரூபாய் வேண்டுமென்று சொன்னால்,
80 கோடி ரூபாய் குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்களுக்குக்
கிடைத்துவிடுகிறது. 40 கோடி ரூபாயை அவர்கள் திருப்பிக்
கொடுக்கிறார்கள். இப்படி வெளியே இருந்து பல கம்பெனிகள்
இங்கே வந்து, நம்முடைய பணத்தை வாங்கிக் கொண்டு அவர்
களுடைய மாநிலத்திலே தொழில்களை ஆரம்பிக்கின்ற சூழ்
நிலை இருக்கின்றபொழுது, நமது நாட்டுக்குள்ளேயே, தமிழ்
நாட்டுக்குள்ளேயே, நமது மாநிலத்திற்குள்ளேயே இருக்கின்ற
நமது தொழில் அதிபர்கள், தொழிற்சாலைகள்—அவைகள்
எல்லாம் பங்கு மூலதனத்தை பம்பாயிலே இருந்தோ, டில்லி
யிலே இருந்தோ வாங்கிக் கொண்டு வந்து நமது ஊருக்குக்
கொண்டு வருகிற வகையிலே நம்மவர்களுக்குத் தொழில் தொடங்
குவதற்கும், அதைப்போல வெளி மாநிலத்தவர்கள் நமது
ஊரிலே தொழில் தொடங்குவதற்கும் வேண்டிய வசதிகளை
நாம் செய்வோமேயானால் அதிகமான சேமிப்பு நமக்கு
வரும். நமது மாநிலத்திலே நம்மவர்கள் தொழில் தொடங்கி
னாலும் வேற்று மாநிலத்தவர்கள் தொழில் தொடங்கினா
லும் உற்பத்தியாகப் போவது இங்கே; வரி கிடைக்கப்போவது
இங்கே; தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கப்போவது
இங்கே, செழுமைப்படப்போவது இங்கே என்ற காரணத்திற்
காக இப்படிப்பட்ட முயற்சியிலே நாம் இன்னும் தீவிரம் காட்ட
வேண்டும். இந்த அரசு தீவிரம் காட்டவில்லை என்று நான்
சொல்லமாட்டேன். இந்த மாதம் 4 ஆம் தேதி கூட தொழில்
அதிபர்களை எல்லாம் கூப்பிட்டு நமது மாண்புமிகு முதல்வர்
அவர்கள் பேசி இருக்கிறார்கள். அப்படிப் பேசியதோடு மட்டு
மல்லாமல், 5 ஆண்டுகளுக்கு deferred Sales tax
என்று சொல்கின்ற அளவுக்கு, வட்டி இல்லாத அளவுக்கு
அவர்கள் 5 ஆண்டுகளுக்குக் கட்ட வேண்டியது இல்லை என்ற
சலுகையை எல்லாம் சொல்லி இருக்கின்றார்கள்.

முற்பகல் 11-10

மேலும் எந்தெந்த வகையில் இந்தச் சலுகைகளை கொடுக்க
முடியும்? மின்சார வசதிகளை எப்படிக் கொடுக்க முடியும்? நிலம்

[திரு. குமரி அனந்தன்] [1992 மார்ச் 9

எப்படிக் கொடுக்க முடியும்? கடன் வசதி எப்படிக் கொடுக்க முடி-
யும்? அந்த கடன் வசதியை செய்து கொடுக்கிற நேரத்தில்
சாங்ஷன் பண்ணியவுடனே ரிலீஸ் செய்வதற்கு வழி இருக்கிறதா?
கால தாமதம் இல்லாமல் உடனே கொடுக்கலாமா என்பன
போன்றவைகளை எல்லாம் நாம் பெரிதும் ஆலோசிப்போ
மானால் நிறைய சேமிப்பு நமக்குக் கிடைக்கும் என்று சொல்
கிற ஒரு ஆலோசனையை எங்கள் கட்சியின் சார்பில் உங்கள்
முன்னால் வைப்பதற்கு நான் விரும்புகிறேன்.

இரண்டாவது, சென்ற ஆண்டு நீங்கள் கொடுத்த நிதிநிலை
அறிக்கையில் பக்கம் 12, பத்தி 18—ஏறத்தாழ 25,000 ஏக்கர்
தரிசு நிலங்கள் ஏருக்குக் கீழே கொண்டு வரப்படும். நல்ல
நிலமாக மாற்றப்படும் என்று சொல்கிற ஒரு திட்டத்தை அறி
வித்து இருந்தீர்கள். ஆனால் அதில் 6,500 ஏக்கர்தான் முடிந்
திருக்கிறது. இந்த ஆண்டு 12,500 ஏக்கர் என்று நீட்டிக்கப்
பட்டிருக்கிறது என்று சொன்னால், போன தடவை போட்டி
ருக்கிற 25,000 ஏக்கரில் 6,000 தான் முடிந்தது என்றால்,
மாதங்கள் ஆறு, ஏழு தான் என்பதால் 12,000 தான் முடியும்
என்று சொன்னால், பாதிதான் நடந்து இருக்கிறது. இதற்கு
என்ன காரணம்? உங்களுடைய திட்டத்தை சரியான முறையில்
மற்றவர்கள் எடுத்துக்கொண்டு செயல்படுகிறார்களா என்
பதை நீங்கள் பார்க்க வேண்டும் என்பதற்கு இது கோடிட்டுக்
காட்டப்படுகிறது.

அதைப்போல நீண்ட நெடுநாட்களாக மலேசியா போன்ற
இடங்களுக்குச் சென்று வந்த எங்களைப் போன்றவர்கள்
இதே அவையில் பேசியிருக்கிறோம். செம்பனை என்று சொல்
கிற எண்ணெய் பனையை இங்கே நாம் உற்பத்தி செய்து
விட முடியும். 29 மாதங்களில் அது பயனைக் கொடுக்கும் அது
தான் பாமாயில் என்று சொல்வது என்றெல்லாம் இந்த சட்டப்
பேரவையில் பல ஆண்டுகளுக்கு முன்னால் பேசியிருந்தும்
கூட யாரும் கேட்காத போது, அந்த செம்பனையை நாங்கள்
இங்கே வளர்க்கிறோம் என்று சொல்கிற மரியாதைக்குரிய
முதல்வர் டாக்டர் ஜெயலலிதா அவர்களுடைய அரசுக்கு நான்
என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
நீண்ட நாட்களாக நாங்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்
டிருந்த கனவு நனவாகிறது என்று சொல்கிற வகையிலே
செயல்பட்டிருக்கிற அவர்களுக்கு என்னுடைய பாராட்டு
களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு திட்டங்கள்.
வைப்பாறிலே ஒரு அணை கட்டுகிற திட்டத்தை நிறைவேற்
றப்போகிறோம் என்று சொல்கிற செய்தி மகிழ்ச்சி தரக்கூடிய
செய்தியாக இருக்கிறது. வரவேற்கத் தகுந்த செய்தியாக
இருக்கிறது. ஆனால் ஏற்கனவே கொடுமுடியாறு,
நம்பியாறு, பச்சையாறு போன்ற அணைத் திட்
டங்களுக்கு எல்லாம் என்னென்னவோ சிந்தனை செய்து



1992 மார்ச் 9] [திரு. குமரி அனந்தன்]

செயல்வடிவம் கொடுக்க வேண்டுமென்று நாம் முனைந்தால்
கூட அவை எல்லாம் முன்னேறிப் போக மாட்டேன் என்கின்ற
காரணத்தால் மனதிலே சஞ்சலங்கள் ஏற்படுகின்றன. அவை
களையும் ஒட்டு மொத்தமாக தீர்த்து வைக்க வேண்டிய
பொறுப்பினை இந்த அமைச்சரவை ஏற்றுக்கொள்ள வேண்டு
மென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கால்நடை மருந்தகங்களுக்குப் பேரளவில் ஏற்பாடு செய்
வதாக நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.
அதாவது பேரளவில், பெரிய எடுப்பில் நான் ஏற்பாடு செய்
யப் போகிறேன் என்று பெருமிதத்தோடு சொல்கிறார்கள்.
காரணம் என்னவென்றால் 400 மருந்தகங்கள் இந்த ஆண்டு
வரப்போகிறது என்று சொல்கிறார்கள். அந்த 400 மருந்
தகங்களுக்கு ஒதுக்கியிருக்கிற ரூபாய் எவ்வளவு என்று சொன்
னால் வெறும் 125 லட்சம் ரூபாய்தான். இந்த 125 லட்ச
ரூபாயில் ஒரு மருந்தகத்திற்கு கிடைக்கப்போகிற ரூபாய்
31,250 தான். சென்ற ஆண்டு இங்கே செயின்ட் தாமஸ்
மவுண்ட் யூனியனில் இருக்கிற ஒரு இடத்திற்கு இது போன்ற
மருந்தகம் அமைக்க 50,000 ரூபாய் ஒதுக்கியபோதும்,
பற்றாத காரணத்தால், உறைவிந்து வைப்பதற்கான கருவி
யான 'கிரயோகான்' என்று சொல்கிற கன்டெயினரை
7,500 ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். 50,000
ரூபாய் பற்றாத காரணத்தால்—அது வாடகைக் கட்டிடம்
கூட கிடையாது. இலவசக் கட்டிடத்தில் இருக்கிறது.
அதற்கு சில டாக்டர்கள் வெளியிலேயிருந்து வந்து உதவி
செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்க
டாக்டர்கள் வேறு இடத்திலிருந்து they have been
deputed there. அதற்கென்று அப்பாயின்ட் பண்ணப்
படவில்லை. அப்படியிருந்தும் கூட 50,000
ரூபாய் பற்றாமல் 7,500 ரூபாய் அதிகமாகிறது என்றால்
இப்போது 31,000 ரூபாயில் நாம் ஒரு மருந்தகத்தைக்
கொண்டு வந்து விடலாம் என்று நினைப்பது பேரளவில் என்
பதற்கு பதிலாக பெயரளவில் என்று ஆகிவிடக்கூடாது என்று
சொல்கிற நல்ல நோக்கோடு சொல்கிறேன். ஏனென்றால் அவர்
களுக்கு நிச்சயமாகத் தெரியும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்பு
மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சொல்லா
ராய்ச்சி நடைபெறுகிறது. (சிரிப்பு) பேரளவில் என்றால் பெரிய
அளவில் என்று தான் வரும். பேரதிர்ச்சி என்கிறோம். பெய
ரளவில் என்பது தான் அவர்கள் குறிப்பிடுவது போல வரும்.
பெயரளவில் என்பது தான் உண்மையில் சொல்ல வேண்டி
யது. கலோக்கியல் என்று சொல்கிற சாதாரண
முறையில் பெயர் என்பது குறுகி பேர் என்று ஆகிவிட்டதே
தவிர, பெயர் என்பது அதற்கு பொருந்தி வராது. பேர் என்றால்
பெரிய என்று தான் பொருள்படும்.

[1992 மார்ச் 9

முற்பகல் 11-15

திரு. குமரி அனந்தன் : ஒப்புக்கொண்டுதான் சொல் கிறேன். பேரளவில் என்பது பெயரளவில் என்று ஆகிவிடக் கூடாது என்று சொன்னேன். அது சரிதான். ஆகவே தாத்தாவினுடைய பெயரை நாம் வைப்பதற்குக் காரணம், அந்தத் தாத்தாவினுடைய பெயரை உடையவன் என்பதற் காகச் சொல்வதை என்ன காரணத்தாலோ பேரன் என்று சொல்லிவிடுகிறோம். நம்முடைய நாட்டிலே சில பழக்கங்கள் இருந்துவிட்டுப் போகட்டும். இந்த 400 மருந்தகங்களுக்கு டாக்டர்கள் நீங்கள் போடப் போகிறீர்களா? புதிதாக ஏற்பாடு செய்யப் போகிறீர்களா அல்லது ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுப் பதற்கு என்று, ஆடு, மாடு இவைகளை எல்லாம் பார்ப்பதாகச் சொல்லிக்கொண்டு இருக்கிற டாக்டர்கள் இருக்கிறார்கள் அல்லவா, அவர்களையே இங்கே கொண்டு வந்து போடப் போகிறோமா? அப்படிப் போட்டால், இது என்ன ஆகும்? ஏன் என்றால், இது ஒரு கிளாரிபிகேஷன். இது விளக்கத்திற்காகக் கேட்கப்படுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

அடுத்து மாடுகள். எங்களுடைய தலைவர் இங்கே சுட்டிக் காட்டியதைப் போல, எருமைப் பாலுக்கு அதிக விலை கொடுப் பதைப் போல, பசும் பாலுக்கும் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஒரு 'ஆம்பிசியஸ் ஸ்கீம்' என்று சொல்கிற அளவிற்கு அற்புதமான திட்டத்தை தீட்டி இருக்கிறார்கள். பெருமளவிலே பால் உற்பத்தி செய்கின்ற திட்டத்தை தீட்டுகிறோம். பால் உற்பத்தி செய்வதற்கு பசு மாடு வேண்டும் என்பது நமக்கு எல்லோருக்கும் தெரிந்த ஒன்று தான். ஆனால், நாள்தோறும் கேரளாவிற்குப் போகின்ற மாடு களைப் பார்த்தால், அடிமாடுகளாகப் போய்க்கொண்டிருக் கின்ற மாடுகளில், பல மாடுகள் பசுமாடுகளும் இருக்கின்றன. கன்றுகளும் இருக்கின்றன. பசுங்கன்றுகளும் இருக்கின்றன, ஏன் என்றால் அவர்கள், அவைகளை அங்கே மட்டும் உண்ப தோடு அல்லாமல், டப்பாக்களிலே அடைத்து வெளிநாடு களுக்கும் அனுப்புகிறார்கள் என்ற காரணத்திற்காக, அது எந்த மாடாக இருந்தாலும், அது இள வயது மாடாக இருந்தது என்று சொன்னால், அவர்கள் மிக மகிழ்ச்சியாக வாங்கிக் கொள்கிற காரணத்தினாலேயே ஆயிரக்கணக்கான மாடுகள் போய்க் கொண்டிருக்கின்றன, அடி மாடுகள் என்ற பெயராலே, எனவேதான் நாம் இங்கே கட்டிடத்தைக் கட்டி, பால் பண்ணைக்கு வேண்டிய இயந்திரங்களை எல்லாம் வாங்கி வைத்ததற்குப் பிறகு பசுமாடுகள் கிடைக்காமல் போய்விடக் கூடாதே என்ற கவலையிலே நான் சொல்கிறேன், வெளியே போகின்ற மாடுகளை எல்லாம் தடுத்து நிறுத்துகின்ற அளவிற்கு நம்முடைய அரசு திட்டமிட வேண்டும் என்று நான் உங்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



1992 மார்ச் 9] [திரு. குமரி அனந்தன்]

அடுத்து செம்மறியாடுகளை பல இடங்களிலே வளர்ப்பதற்கு என்று போடப்பட்டு இருக்கிற திட்டம், டானிடா போன்ற அன்னிய நாடுகளுடைய உதவியைப் பெறுவது என்பது மிக மகிழ்ச்சியான ஒரு காரியம். ஆனால் செம்மறியாடுகள் வளர்க்கப்படுவதற்குக் காரணமே, அதிலிருந்து ரோமம் கிடைக்கிறது, கம்பளி கிடைக்கிறது என்பதற்காகத்தான். கிடைத்ததை உடனே நெய்வதற்கு உரிய கம்பளி ஆலைகளை, நெசவு ஆலைகளை அமைப்பதற்கு நாம் ஏதாவது திட்டமிட்டு இருக்கிறோமா? அப்படித் திட்டமிட்டால்தான் இது சரியாக இருக்கும். ஏன் என்றால், 'ரா'-வாக வெளியே எங்கேயோ அனுப்புவோம் என்று சொன்னால், நமக்கு போதிய விலை கிடைக்காது. அதற்கு இங்கேயே நெசவாலைகளைத் தோற்று விப்போம் என்று சொன்னால், நல்ல முறையில் நம்முடைய தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத் திற்காக அப்படிப்பட்ட திட்டம் இருக்கிறதா என்று கேட்கிறேன். இருக்கும், இல்லாமல் இருக்காது. இருக்கிறதா என்று ஒரு கேள்வியைக் கேட்கிறேன். அவ்வளவுதான். நான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகக் கேட்கிறேன்.

அதைப் போலவே, மீனவ மக்களுக்கு, மீனவ நண்பர்களாக நாம் எல்லாம் இருக்கிற காரணத்தினாலே, அந்த மீனவ மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. மலையென உயர்ந்து நிற்கின்ற அலை களுக்கு மத்தியில் கூட, கட்டுமரங்களை எடுத்துக்கொண்டு, தங்களுடைய கட்டுமஸ்தான உடலின் காரணத்தினாலே, நீந்தி வருகின்ற அந்த வீரமிக்க புதல்வர்களுக்கு நாம் நமது பாராட்டுதல்களைத் தெரிவிக்க வேண்டும். ஆனால், அவர் களுக்குப் புயல் வருகின்ற நேரத்தில், பெரிய சூறாவளி வருகின்ற நேரத்தில், ஆபத்து இருக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கு விபத்துக்கள் ஏற்பட்டுவிடக்கூடாது, அப்படி ஏற்பட்டு விட்டது என்றால், அந்த நேரத்தில் என்ன செய்ய இருக்கிறீர்கள் என்றால், இப்போது இருக்கிற அறிக்கையிலே, 1992 மார்ச் 6 ஆம் தேதியன்று தாங்கள் படித்த அறிக்கையிலே என்ன சொல்லி யிருக்கிறீர்கள் என்றால், 15 ஆயிரத்திலிருந்து அவர்களுக்கு 21 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப் படும் என்ற காரியத்தை செய்திருக்கிறீர்கள். ஆனால், இதே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் படித்த அந்த நிதி நிலை அறிக்கையிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், ஒருவர் இறக்க நேர்ந்தால் அந்த மீனவக் குடும்பத்திற்கு அந்த 15 ஆயிரத் திலிருந்து 21 ஆயிரம் வரை கொடுக்கப்படும் என்று ஏற்கனவே சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே சென்ற நிதி நிலை அறிக்கையிலே இந்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கி றீர்கள். இப்போது திரும்பவும் இந்த அறிவிப்பு என்பது

புதிதாக வருவதைப் போல ஒரு தோற்றத்தை உண்டாக்கி
விடக்கூடாது. நான் ஒருவரையும் வேறு வகையிலே திசை
திருப்ப விரும்பவில்லை. ஆனால், நம்முடைய கவனக்
குறைவினாலே, மற்றவர்கள் நம்மை குற்றம் சொல்வதற்கு
வழி வகுத்து விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.
அதனாலே சென்ற முறையும் இங்கே சொல்லப்பட்டு
இருக்கிறது என்பதை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன்.

அதைப் போலவே, பருவமற்ற காலங்களிலே அவர்கள்
என்ன செய்வார்கள்? வேறு தொழில் தெரியாத காரணத்
தாலே, அவர்களுக்கு 60 ரூபாய் கொடுக்கின்ற அந்த
ஊதியத்தை 270 ரூபாயாக நீங்கள் உயர்த்தி இருப்பதைப்
பெரிதும் பாராட்டுகிறேன். அதை நாங்கள் பாராட்டி
வரவேற்கிறோம், காங்கிரஸ் கட்சியின் சார்பிலே, ஆனால்
அதைப் போன்று, இன்னும் உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்ற
பல தொழில்கள் இருக்கின்றன. கட்டிடத்தொழில், அதைப்
போலவே, பாதாள சாக்கடைத் தொழில், உள்ளே புகுந்து
அங்கேயிருக்கின்றவற்றை எடுத்து வெளியே போடுகின்ற தொழில்,
கல் உடைக்கின்ற தொழில், பனை ஏறுகின்ற தொழில் இப்படிப்
பட்ட தொழில்களைச் செய்கின்ற தொழிலாளர்களையும்
கொஞ்சம் மனதிலே வைத்துக் கொண்டு காரியங்களை
செய்வதற்கு முனைந்தால், நாம் எல்லோருக்கும் நன்மை
செய்தவர்களாவோம் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். கிணறு வெட்டுகின்றவர்கள் மிகுந்த துன்பத்திற்கு
சில நேரங்களிலே ஆளாகிறார்கள்.

அடுத்து 200 புதிய பள்ளிக்கூடங்கள் மிகுந்த பாராட்டு
தலுக்கு உள்ள காரியம். அதைப்போலவே, மேல்நிலைப்
பள்ளிகளுக்கு பலர் ஏங்கித் தவித்துக் காத்துக் கொண்
டிருக்கிறார்கள். நிபந்தனைகளை எல்லாம் பூர்த்தி செய்த
தற்குப் பிறகு, எனது தொகுதியிலே கூட இந்த நிலைமை
எல்லாம் இருக்கிறது. கட்ட வேண்டிய பணத்தைக் கட்டி
காட்ட வேண்டிய நிலத்தைக் காட்டி, இத்தனையையும்
கொடுத்ததற்குப் பிறகும் கூட அனுமதி மட்டும் கிடைக்காமல்
இருக்கிறார்கள். ஆகவே அவைகளுக்கு எல்லாம் உடனடியாக
அனுமதி கொடுப்பீர்கள் என்றால், அவர்கள் மகிழ்வார்கள்.
அவர்களுடைய பிரதிநிதிகளாக இருக்கிற நாங்களும் மகிழ்
வோம் என்பதைச் சொல்லி, இதை உங்களிடம் நான்
வேண்டுகோளாகக் கேட்கிறேன்.

அடுத்து, கொஞ்சம் சங்கடமான காரியம். இதை நீங்கள்
எண்ணக்கலாமா என்று நினைத்து இருப்பீர்கள். என்னைப்



பேசுகின்றவர்கள் வேண்டுகோள் விட்டால், அதை விட்டு
விடுவீர்கள் என்ற காரணத்திற்காக இதை நான் இங்கே சொல்ல
ஆரம்பிக்கிறேன்.

முற்பகல் 11—20

பள்ளிக் கல்விக்கு ஏற்படுகின்ற செலவுகளை எல்லாம் கணக்
கில் கொண்டு, இனிமேல் பள்ளிக்கூடங்களில் படித்துக் கொண்
டிருக்கின்ற மாணவர்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு,
கல்லூரி போன்ற உயர் படிப்புகளிலே படித்துக் கொண்டிருப்ப
வர்களுக்கு நீங்கள் கட்டணம் வசூலிக்கலாமா என்று சொல்
கின்ற ஒரு சிந்தனை உங்களுடைய உள்ளத்திலே இடையிலே
ஊடாடி ஓடுவது போல எனக்குத் தோன்றுகிறது. ஆனால்
இலவசக் கல்வி என்று சொல்கின்ற ஒரு அற்புதமான திட்டத்தைக்
கொண்டு வந்த பெருந்தலைவர் காமராஜருடைய தொண்டன்
.................... (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு கல்வி
அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மனதில் மட்டும்
அது ஊடாடிக் கொண்டிருக்கவில்லை. தேசிய கல்விக் கொள்
கையினுடைய முக்கிய அடிப்படையே அதுதான்.

<u>திரு. குமரி அனந்தன்</u> : இந்த தேசிய கொள்கை அப்படி
இருக்கிறது என்று எனக்குத் தெரிகிறது. ஆனால் நாம்
ஒன்றை மறந்துவிடக் கூடாது. நமது 'டைரக்டிவ் பிரின்சி
பிளிலும்' நமது 'கான்ஸ்டிட்யூஷனின்' பகுதிகளில் எல்லாம்
1 முதல் 14 வயது வரை உள்ளவர்களுக்கு.... (குறுக்கீடு)

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்</u> : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அதன் காரணமாகத்தான்
இந்த அடிப்படைக் கொள்கையே உருவாகியிருக்கிறது. நம்
முடைய முக்கிய கடமை, சாதாரண ஏழை எளிய மக்கள்
படித்துக் கொண்டிருக்கிற ஆரம்பக் கல்விக்குத்தான் செலவு
செய்ய வேண்டுமே தவிர, அரசாங்கத்திற்கு அவர்களால் வரு
கின்ற வருமானம் ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்குத் தான் வர
முடியும். அந்தப் பணத்தை நாம் எப்படி, யாருக்கு செலவு
செய்ய வேண்டுமென்று வருகின்றபோது, சாதாரண மக்கள்
படிக்கின்ற ஆரம்பக் கல்விக்குத் தரவேண்டும் என்பதுதான்
அடிப்படைக் கொள்கை. உயர் கல்வி என்பது யார் படிக்கின்
றார்களோ, அவர்கள் அந்தச் செலவை ஏற்றுக்கொள்ள
வேண்டும்.

திரு. குமரி அனந்தன் : நமது கல்வி அமைச்சர் போன்ற பெரு மக்கள் எல்லாம் இடையிலே விளக்கம் கொடுப்பதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அந்த விளக்கம் கொடுப்பதற்கு ஏற்படுகின்ற நேரத்தை நீங்கள் கணக்கில் வைத்துக் கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியும். எனவே அதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஆக நான் இங்கே சொல்ல வந்தது என்னவென்றால், அமைச்சர் பெருமகனார் எழுந்தவுடனேயே அமர வேண்டுமென்ற மரபின் காரணத் தினாலே உடனேயே அமர்ந்து விட்டேன், என்னுடைய சொற் றொடரைக் கூட முடிக்காமல்.

நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், அரசியல் அமைப் பில் அது இருந்தபோதும்கூட மற்ற மாநிலங்கள் நிறைவேற் றாத நிலையிலும்கூட, தமிழகத்திலே இலவச கல்வியை பெருந்தலைவர் காமராஜர் கொண்டு வந்தார் என்று சொல்ல வந்தேன். அதனாலே மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது நல்லதற்கு மட்டுமே நமக்கு வழி காட்ட வேண்டுமே தவிர, அதுவும் நாம் ஒன்றை ஏற்படுத்தி வைத்து விட்ட பிறகு, அதற்குப் பிறகு கூட அங்கே இருக்கின்றவர்கள் ஏழை மாணவர்களாக இருந் தால் படிப்பு போய்விடக் கூடாது என்பதற்காக அவர்களுக்கு மதிய உணவு கொடுத்து, பிறகு அதை சத்துணவு என்று நமது மரியாதைக்குரிய தலைவர், எம்.ஜி.ஆர். அவர்கள் ஆக்கி, இலவச கல்வி என்று எங்களை வழி நடத்தியவர்கள், உங்களை வழி நடத்தியவர்கள், ஆக நம் இரண்டு பேரையும் வழி நடத்திய வர்கள் சொன்னதை மீறி, நாம் போக மாட்டோம் என்ற நம் பிக்கையில் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். மேல் படிப்பு என்று சொல்கிறபோது, உங்களிடம் நான் சொல்ல விரும்பு கிறேன். ஒருவருக்கு சொத்து சுகத்தை எழுதி வைக்கமுடிய வில்லை என்று சொன்னால் கூட, ஒருவருக்கு கார் முதலியன வாங்கிக் கொடுக்க முடியவில்லை என்று சொன்னால்கூட, ஒருவர் கலெக்டர் ஆகிவிட்டார் என்றால் அவருக்கு கார் தா னாக வந்து விடுகிறது. சம தர்மத்தை இப்படி படிப்பின்மூலம் கொண்டு வந்தோம். அது உயர் படிப்பு இல்லாமல் முடியாது, அமைச்சர் அவர்களே. எனவே இந்த உயர் படிப்பு என்பது இவ்வளவு நாட்கள் மரியாதைக்குரிய நமது தலைவர்கள் எல்லாம் சிந்தித்த சிந்தனைக்கு மாறுபட்டதாக இருக்குமோ என்று நான் எண்ணுகின்ற காரணத்தினாலே, நீங்கள் அதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் உங்களை சற்று அழுத்த மாகவே கேட்க விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியினுடைய சார்பிலே இதனை ஒரு வேண்டுகோளாக. இங்கே நான் வைக்க விரும்புகிறேன்.

அடுத்து மிக ஒரு நல்ல காரியம். அடுத்தாற்போல நீங்கள் செய்ய இருப்பது கம்ப இராமாயணத்தை ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கிறீர்கள். எனக்கு எவ்வளவு பெரிய மகிழ்ச்சி தெரியுமா?



கம்ப இராமாயணத்தை ஆங்கிலத்திலே மொழி பெயர்க் கிறீர்கள். எவ்வளவு பெரிய மகிழ்ச்சி? இதைப்போல் பல பல இலக்கியங்களை எல்லாம் நீங்கள் மொழி பெயர்க்கப் போகி றீர்கள் என்று நினைக்கின்றபோது பெரு மகிழ்ச்சி அடை கிறேன். பாரதியினுடைய கனவு நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெயலலிதா காலத்திலே நிறைவேறுகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்ல விரும்புகிறேன். என்ன காரணம் தெரியுமா? திறமான புலமை எனில் வெளி நாட்டார் அதை வணக்கம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். விளக்கம் செய்வது அல்ல, வணக்கம். H must worship it. He must salute. திறமான புலமை எனில் வெளி நாட்டார் அதை வணக்கம் செய்யவேண்டும். வெளி நாட்டார் எப்படி வணக்கம் செய்வான்? மொழி பெயர்த்தால் தானே? ஆக பாரதியின் கனவை நீங்கள்தானே நனவாக்குகிறீர்கள்? எனவே நான் அதைப் பாராட்ட வேண்டாமா? பாரதியினுடைய ஒரு தொண்டனாக இருக்கின்ற நான் பாராட்டுகிறேன். அது போன்று இன்னொன்று என்னவென்று சொன்னால், வெளி நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும். அதையும் சேர்த்துக் கொள்ளுங்கள். சேர்த்தால் வெளி நாட்டில் இருக்கின்ற மிகத் திறமையான புலவர் களுடைய நூல்கள் எல்லாம் தமிழர்களுக்குக் கிடைக்கு மென்ற காரணத்தினாலே சொல்கிறேன்.

இன்னொன்று, நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால், சென்ற ஆண்டில், பக்கம் 56, பத்தி 126. அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், தமிழகத்திலே உள்ள மாவட்டங்களிலே நல்ல முறையிலே தமிழிலே வரைவு எழுது கிறவர்களுக்கு, draft போடுகிறவர்களுக்கு பரிசு கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஒரு வேளை அந்த காலக் கட்டம் முடியவில்லையோ, என்னவோ தெரி யாது. பரிசு கொடுக்கவேண்டும். இன்னும் கொடுக்கவில்லை. அதனால் கொடுக்க வேண்டிய கால கட்டம் இனிமேல் இருக்க லாம். அதனாலே நான் அவசரப் பட்டு விடக்கூடாது. நீங்கள் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நினைவுபடுத்துகிறேன். அவ்வளவு நான்.

சத்துணவு என்று சொன்னால், சத்துணவைக் கொண்டு வந்த சரித்திர நாயகன், என்று சொன்னால், யார் என்று தெரியும். ஆகவே எங்கே தொடக்கம், எங்கே அது செழிப்பு என்பது எல்லாம் நமக்குத் தெரியும். அப்படி இருக்கின்ற காலத்திலே, ரொம்ப நாட்களாக அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது ரூ. 150-க்கு மேற்பட்டவர் களுக்கு ரூ. 20 என்றும், அதற்குக் குறைந்தவர்களுக்கு ரூ. 10 என்றும் இருப்பது மிகக் குறைவாக இருக்கிறது.

[திரு. குமரி அனந்தன்] [1992 மார்ச் 9

உங்களுடைய தாராள மனத்தை பிரதிபலிப்பதாக இல்லை அது. ஆதலால் அதற்குத் தகுந்தவாறு அவர்களுடைய எண்ணத்திற்குத் தக்கவாறு எழுந்து நிற்கின்ற அளவிற்கு ஒரு பெரிய விஸ்வரூபம் மாதிரி இருக்கிற காரணத்தால், விஸ்வரூபம் மாதிரி உங்களுடைய தோற்றம் இருக்கிற காரணத்தால், நீங்கள் இல்லை என்று சொல்வது அவர்களுடைய மனத்திலே பெருத்த ஏமாற்றத்தைத் தரும். அது உங்களுக்குத் தெரியாதது அல்ல. எனவே, அதை நினைவுப்படுத்துவது தான் என்னுடைய கடமை. நண்பன் என்ற முறையிலே....

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனம் தாராளமாகத் தான் இருக்கிறது. பணம் தான் தாராளமாக இல்லை. (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன் : நமது நடமாடும் பல்கலைக் கழகம் என்று போற்றப்படுகிற நாவலர் அவர்களுக்குத் தமிழில் ஒரு முதுமொழி இருப்பது தெரியும். 'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.' (சிரிப்பு) அதனாலேதான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதிலே மனமும் உண்டு, மார்க்கமும் உண்டு. அந்த மார்க்கத்தை நான் சொல்லுகிறேன். அதற்கு நீங்கள் ஒத்துழைப்புத் தருவீர்கள் என்றால், அதன்படி நாம் நடக்கலாம்.

திரு. குமரி அனந்தன் : நிச்சயமாக ஒத்துழைப்புத் தருவோம், முழு மூச்சோடு ஒத்துழைப்புத் தருவோம், அதில் ஐயப்பாடே இல்லை,

அடுத்தாற்போல, ஒரு திட்டம். தொழிற் சாலைகளைத் துவங்குவதற்கு 755 கோடி ரூபாயிலே அருமையான திட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். அற்புதமான திட்டம். 755 கோடி ரூபாயிலே 9 தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப் படும் என்று சொன்னால் பாராட்ட வேண்டும். ஆனால் அதிலே எனக்கு ஒரு ஐயப்பாடு. என்ன ஐயப்பாடு என்றால் 755 கோடி என்று சொல்லுகிற ஒரு பெரும் தொகையைப் போட்டு திட்டத்தில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது என்றால் 2800 பேருக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைக்கிறது.



1992 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெரிய தொழிற் சாலையை ஆரம்பிக்கிறபோது நேரிடையாக ஒரு சில 100 பேருக்குத்தான் வேலை கிடைக்கும். மறைமுகமாக நிறைய பேருக்கு கிடைக்கும். D w. –Str am Inaust ies என்று சொல்லும் வகையில் ஒரு பெரிய தொழிற்சாலை வந்தால் நூற்றுக்கணக்கான உப தொழில்கள் வரும். அதன் மூலம் Ii directly we a.r creati g l.kks and l.kh ot jobs.

திரு. குமரி அனந்தன் : நுணுக்கமாக நீங்கள் சொல்வதை நான் பாராட்டுகிறேன். நீங்கள் சொன்னது கரெக்ட். ஆனால்...... .

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைகள் எப்போதுமே கசக்கும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது இனிக்கிறது. நெல்லிக்காய் மாதிரி இருக்கிறது. தின்றுவிட்டு பிறகு தண்ணீர் குடித்தால் இனிக்கிறது. அவ்வளவு தானே. அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. இனிக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய இறுதி இலட்சியம். அந்த இறுதி லட்சியத்தைப் பார்க்கிறபோது நீங்கள் சொன்ன விளக்கம் அற்புதமாக இருந்தது. அதிலே ஒரு சின்ன செய்தி என்னவென்றால் நான் சொல்ல விரும்புவது—அதை நான் கணக்குப் போட்டு பார்த்த போது, 2800 பேருக்கு என்று சொல்லுகிறபோது, 27 லட்சம் ரூபாயிலே ஒருவருக்கு வேலை நேரிடையாக கிடைக்கிறது. மறைமுகமாக நீங்கள் சொன்ன பலனும் இருக்கும். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். சரியான விளக்கம் அது. ஆனால் அதில் நேரிடையாக வேலை கிடைப்பதற்கு 27 லட்சம் ரூபாய் ஒருவருக்குத் தேவைப்படு கிறது. ஆனால் காந்திய பொருளாதாரத்தின்படி இப்போது இருக்கும் நிலையில் ஒருவருக்கு வேலை கிடைக்க வேண்டு மென்றால் 10 ஆயிரம் ரூபாய் போதும். அப்படிக் கணக்கு பார்க்கிறபோது —ஒரு சின்ன உதாரணத்திற்குத்தான் சொல்லு கிறேன்—அதனாலே நீங்கள் அதை மாற்ற வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அந்தத் தொழிற்கூடங்களை நீங்கள் ஆரம்பியுங்கள்—ஒரு உதாரணத்திற்கு சொல்லுகிறேன் அந்த 755 கோடி ரூபாயிலே 7 லட்சத்து 55 ஆயிரம் பேருக்கு நேரிடையாக வேலை கொடுக்கலாம். நான் இப்படிச் சொல்வ தால், அந்தத் திட்டத்தை மாற்ற வேண்டுமென்றோ அந்தத் திட்டத்திலே குறைபாடு இருக்கிறது என்றோ சொல்ல

[திரு. குமரி அனந்தன்] [1992 மார்ச் 9

இனிவருங் காலத்திலே நீங்கள் திட்டம் போடுகிறபோது அதையும் கொஞ்சம் மனதிலே வைத்துக் கொண்டு செய்வீர்கள் என்று சொன்னால் நல்லது. ஏனென்றால் இன்று கூட பத்திரிகையிலே வந்திருக்கிறது. வேலை இல்லாத பட்டதாரிகள், படித்த இளைஞர்கள் கேரளாவிற்கு அடுத்தபடி அதிகமாக இருப்பது தமிழ்நாட்டிலேதான். 48 லட்சத்து சொச்சம் என்று போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்காக சொல்லுகிறேன். இப்போது இருக்கிற திட்டம் நல்ல திட்டம்தான். ஏனென்றால் நீங்கள் தொழிற்சாலைகளை எவ்வளவு கவனமாகக் கொண்டு வருகிறீர்கள் என்று எல்லோருக்கும் தெரியும். ஸ்டேன்டர்ட்டு மோட்டார் தொழிற்சாலை—யார் யாரோ முயன்று பார்த்தார்கள். நீங்கள்தானே வெற்றி பெற்றீர்கள். அதைப் பாராட்ட வேண்டாமா? அதுபோல கே.சி.பி. கம்பெனி, நீங்கள்தானே வெற்றி பெற்றீர்கள். பாராட்ட வேண்டாமா? இன்று காலையிலே கூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்களே விசைத்தறி பற்றி. அதைப் பாராட்ட வேண்டாமா? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே நீங்கள் பாவாக இருந்தால் நாங்கள் ஊடாக இருக்கவேண்டும். அப்போதுதானே நெசவு நடக்கும்? இந்த ஒரு காரியத்தைப் பார்க்கிறபோது சட்டமன்றத்திலே நாங்கள் இங்கே இருந்தாலும், நீங்கள் அங்கே இருந்தாலும் துணி நெய்ய வேண்டும் என்ற காரணத்தால் சுட்டிக் காட்டுகிறேன். உதாரணத்திற்காகச் சொன்னேன்.

அடுத்து 58 நாட்களாக கிறிஸ்டியன் காலேஜ் என்று சொல்லப்படுகிற ஒரு கல்லூரியிலே நடந்த வேலை நிறுத்தத்தினாலே தமிழ்நாடு முழுவதும் வேலை நிறுத்தம் நடந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு தடவை பேசினார்கள். ஒரே ஒரு தடவைதான் பேசினார்கள். அது எப்படிப்பட்ட கல்விக்கூடம்? டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் படித்த கல்விக் கூடம். சி.ஏ. நடேசன் படித்த கல்விக் கூடம். காந்திஜி வந்தால் அங்கேதான் தங்குவார். ஏ.எல்., ஏ.ஆர். முதலியார், ஆர்.வி. கிருஷ்ணய்யர், இப்படிப்பட்ட பெரியோர்கள் எல்லாம் படித்த கல்விக் கூடத்தின் பிரச்சினையை ஒரே நேரத்திலே உட்கார்ந்த இடத்திலேயே தீர்த்து வைத்திருக்கிறார்கள் என்றால், பி.அன்டு சி. மில் பிரச்சினையில் நமது முதல்வர் அவர்கள் அப்படியே தீர்ப்பார்கள். சேலத்திலே இருக்கிற பிரச்சினையிலேயும் அப்படி தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையில் சொல்லுகிறேன்.

முற்பகல் 11-30

அடுத்து சென்ற முறை நிதியமைச்சர் அவர்கள் பக்கம் 172-லே பத்தி 157-ல் தொழிலாளர் ஊதிய விகிதத்தை மாற்றி அமைப்பேன்; அச்சுப் பணி தொழிலாளர்கள், தீப்பெட்டித்



1992 மார்ச் 9] [திரு. குமரி அனந்தன்]

தொழிலாளர்கள், பட்டாசுத் தொழிலாளர்கள், மலைத் தொழிலாளர்கள், எண்ணெய் ஆலைத் தொழி தோட்டத் தொழிலாளர்கள், தையல் தொழிலாளர்கள், திரையரங்குத் தொழி லாளர்கள், சால்வை நெய்யும் தொழிலாளர்கள், கைத்தறி லாளர்கள், தேங்காய் நார் உரிக்கும் தொழி பட்டுத் தொழிலாளர்கள், உழவுத் தொழிலாளர்கள் இவர்களுக்கு எல்லாம் லாளர்கள், ஊதியத்தை அமைப்போம் என்று சொன்னீர்கள். நாங்கள் செயல்பாட்டு முறையிலே இருக்கிறதா? அது ஏதாவது Is it in process நடைபெற்றுக் கொண்டிருக்கிறதா? என்று நான் கேட்க விரும்புகிறேன். தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவ்வளவுதான்.

அதைப்போலவே, சென்ற தடவை நிதிநிலை அறிக்கையில் 30 ஆம் பக்கத்திலே 66 ஆவது பாராவிலே ஜெயங் கொண்டம் மின் உற்பத்திக்கு 50 கோடி ரூபாயிலோ, 500 கோடி, Sorry 5000 கோடி செலவு என்று சொல்லியிருந்தீர்கள். 5000 கோடி ரூபாயிலே அது தொடங்கப்படும் என்று சொல்லியிருந்தீர்கள். இந்த 6வது மாதத்திலே வருகின்ற நிதிநிலை அறிக்கையிலே 7000 கோடி என்று இருக்கிறது. அவ்வளவு inflation ஆகியிருக்காது என்று நினைக்கிறேன். அது என்ன காரணம்? ஒரு வேளை வேறு ஏதாவது revised Scheme இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. 5,000 என்று இருப்பது 7,000 என்று இருக்கிறது. உங்களுடைய பார்வையில் பட வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்து இலவச மின்சாரத்தைப் பற்றிப் பேசுகின்றபோது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால் பக்கம் 46, பத்தி 108. உண்மையில் 560 கோடி ரூபாய் இழப்பு. ஒரு தடவையும் இந்தச் சொல்லைச் சொல்லாதவர்கள் ஏன் இதிலே சொல்கிறார்கள்? நான் ரொம்ப நேரம் ஆராய்ந்தேன்; உண்மையில் 560 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்களே என்று. எனக்கு ஒரு ஐயப்பாடு உண்டு. தயவு செய்து நீங்கள் பொறுத்தருள வேண்டும். 1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4-ந் தேதி நான் நடத்திய மகாநாட்டிலே இலவச மின்சாரம் வேண்டும் என்று கேட்டேன். அதற்குப் பிறகு ஜூன் மாதம் 18-ந் தேதி இலவச மின்சாரம் வேண்டும் என்று ஆர்பாட்டம் நடத்தினோம். அதற்குப் பிறகு ஜூலை மாதம் 15-ந் தேதி எங்கள் பெருந் தலைவர் காமராஜருடைய பெருமையைப் புரிந்துகொண்டு, அவருக்கு மாவட்டம் அமைத்துத் தந்த மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய முன்னாலே விருதுநகரிலே வைத்து இலவச மின்சாரம் வேண்டும் என்று கேட்டேன். அப்போது அவர் சொன்னார். 'குமரி அனந்தன் சொல்வதிலே நியாயம் இல்லாமல் இல்லை',

[திரு. குமரி அனந்தன்] [1992 மார்ச் 9

அது அவருடைய பாணி, அப்படி ஒரு வீச்சு. அந்த வீச்சிலே எனக்குக் கிடைத்து விட்டது. நான் பேசியது ஒரு பேச்சு, அவர்கள் பேசியது ஒரு வீச்சாக இருந்த காரணத்தினாலே சேலத்திலே 1-ந் தேதி பேசுகின்ற நேரத்திலே சொன்னார்கள். '' நான் ஆகஸ்ட் 15-ந் தேதி மின்சாரத்தைப்பற்றி ஒரு அறிவிப்பு அறிவிக்க இருக்கிறேன். கருணாநிதி அவர்கள் இலவச மின்சாரம் கொடுக்க முடியாது என்று பேசுகிறார். நான் அதைப்பற்றிய அறிவிப்பை ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி கொடுக்கிறேன் '' என்று சொன்னார். அந்தக் கொடியினை ஏற்றி வைத்து விட்டு, அந்தத் தூய தலைவன் இலவச மின்சாரத் திட்டம் என்று அறிவித்தார். அறிவித்துவிட்டு வெளியே வந்தவுடனேயே, '' குமரி அனந்தன், இதோ இனிப்பு '' என்றார் ; தலைவர் அவர்களே, '' இதோ இனிப்பு '' என்று நான் கொடுத்தேன். மாறி மாறி கொடுத்த அந்த இனிப்பின் அடிப்படையிலே வந்த இலவச மின்சாரத்திற்கு ஆபத்து வந்து விடக்கூடாது நிதியமைச்சர் அவர்களே. (சிரிப்பு) தயவு செய்து. . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருக்கே உரிய தமிழ் நயத்தோடு இங்கே ஒரு இலக்கியப்பேருரையை ஆற்றிக்கொண்டிருக்கிறார். நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அரசுக்குச் சுட்டிக்காட்ட வேண்டிய கடமைகளையும் சொல்கிறார். பாராட்டையும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்த அந்த இலவச மின்சாரத் திட்டம் எந்த அடிப்படையிலே இருந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். அதற்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த இலவச மின்சாரத் திட்டத்தையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறி வார்கள். எந்தக் காலத்திலும் புரட்சித் தலைவர் அவர்கள் கடைப்பிடித்த நடைமுறையை இந்த அரசு மாற்றாது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கி றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு நிதியமைச்சர்.

<u>*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக பொறுத்தருள கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு விளக்கத்தைச் சொல்லி



1992 மார்ச் 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

விடுவது நல்லது. ஏனென்றால், நிதிநிலை அறிக்கையிலே ஒரு விளக்கம் இல்லாமல் அந்த வரி போடப்பட்டிருக்கிறது. நான் நிதிநிலை அறிக்கையைப் படிக்கும்போது அதைச் சேர்த்துப் படித்தேன் ; சேர்த்துச் சொன்னேன். ஆனால் அச்சு ஏற்றிய அந்த நூல்களிலே விரிவான விளக்கம் இல்லை. ஆகவே இலவச மின்சாரத்தை விவசாயிகளுக்குக் கொடுப்பதன் மூலமாக எல்லாம் சேர்த்து ரூ. 560 கோடி இதிலே இழப்பு ஏற்படு கிறது என்று நான் சொன்னேன். என்னுடைய பதிலுரை வருகின்றபோது எந்தெந்த வகைகளில் எவ்வளவு இழப்பு ஏற்படு கிறது என்பதை நான் மொத்தமாகச் சொல்கிறேன். இலவச மின்சாரத்தை விவசாயிகளுக்கு மட்டும் கொடுப்பதினால் ரூ. 560 கோடி இழப்பு ஏற்படுகிறது என்பது உண்மை. கிட்டத் தட்ட ஒரு யூனிட் மின்சாரம் இப்போது உற்பத்தியாவதற்கு 140 காசாகிறது. வீடுகளுக்கு 55 காசுக்குத் தருகிறோம் என்றால், அதிலேயும் இழப்பு வருகிறது. இந்த இழப்பு எல்லாம் சேர்த்துத்தான் மொத்தம் 700 கோடி ஆகிறது. அது எந்தெந்த வகையிலே எவ்வளவு என்பதை என்னுடைய பதிலுரையின்போது தெளிவுபடுத்துகிறேன்.

முற்பகல் 11-35

<u>திரு. குமரி அனந்தன்</u> : ரொம்ப மகிழ்ச்சி, நன்றி. ஏனென்றால் நான் மாண்புமிகு முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களிடம் மனு கொடுத்தபோது அப்போது இருந்த பம்ப் செட்டுகளுக்கு 35 கோடி ரூபாய் தான் செலவாகும் என்று நானே கொடுத்திருக்கின்ற அறிக்கை என் கையில் இருக்கிறது. எனவே, நீங்கள் பல்வேறு செய்திகளைச் சேர்த்து சொல்கின்ற காரணத்தினால் அந்த விளக்கம் எனக்கு ஒரு தெளிவை ஏற்படுத்தும்.

அடுத்து பல்லவனிலே பழைய வண்டிகளை எல்லாம் போகச் சொல்லி இனி புது வண்டி 15 கோடி ரூபாயில் வாங்குவ தாக நமக்கு ஒரு திட்டம் இருக்கிறது. நான் எல்லா ஊர் பஸ்களையும் பார்க்கிறேன். கார்ப்பரேஷன் பஸ்ஸையே கூட பார்க்கிறேன். வெளியே பி. ஆர். சி. எல்லாம் பார்க்கிறேன். அவையெல்லாம் ஓரளவு பரவாயில்லை என்று தோன்றுகிறது. இந்தப் பல்லவன் தண்ணீரே பார்க்காதது போல் இருக்கிறது. அதைத் துடைப்பதும் இல்லை : கழுவுவதும் இல்லை : ஒன்றும் செய்வது இல்லை. அதில் யாராவது வெள்ளை சட்டையோடு போய்விட்டு வெளியே இறங்கினால் எப்போது சந்நியாசியானீர் கள் என்று தான் கேட்பார்கள். அந்த அளவுக்கு அந்த பஸ்கள் எல்லாம் இருக்கின்ற காரணத்தால் பணத்தை மேலும் மேலும் போட்டுக்கொண்டு இருக்கிறோமே, அதைச் சற்று தயவுசெய்து பார்த்துப் போடுங்கள்.

[திரு. குமரி அனந்தன்] [1992 மார்ச் 9

அதைப்போலவே, நீங்கள் ஒவ்வொரு தடவையும் அகிலஇந்திய ரீதியில் சிந்திக்கின்றவர்கள். நம்மைப் பொறுத்தவரையில் அகல ரயில் பாதை போடுகிற நேரத்தில் மீட்டர் கேஜ் எடுக்கக்கூடாது என்று சொல்லுகிற மக்களுடைய கோரிக்கை போன்றவை களையும், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை போன்றவைகளையும் நீங்கள் கொஞ்சம் வலியுறுத்தி இருக்கலாமோ என்று நினைக்கிறேன்.

வீடு கட்டும் திட்டத்திற்கு இப்போது ஒரு புதுமையான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார் லாரி பேக்கர் என்று சொல்லுகின்றவர். நாம் ஏராளமான வீடு கட்டும் திட்டம் கொண்டு வருகிற காரணத்தால், அவரை அழைத்து வந்து— அவர் திருவனந்தபுரத்தில் தங்கியிருக்கிறார், அவர் ஒரு ஆஸ்திரேலியர், லாரி பேக்கர் என்று சொல்லப்படுகின்ற அவர் அங்கே இருக்கிற பொருட்களை வைத்துக்கொண்டே எப்படி வீடுகட்டுவது என்று சொல்லுகின்ற Low Cost Houses பற்றி அவரை— ஒரு தடவை நாம் கூப்பிட்டுப் பேசலாமா என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதைப்போலவே பெண் குழந்தைகளின் உயிரைக்காக்க வேண்டும் என்பதற்காக 2 ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்பது ஆண் குழந்தைகள் இல்லாதவர்கள் குடும்பத்தில் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு கொடுப்பது என்பது மிகவும் சிறப்பாக இருக்கிறது.

அதைப்போலவே 10 ஆயிரம் கிணறுகள் ஆதி திராவிடப் பழங்குடி மக்களுக்கு நீர்ப்பாசனத்திற்கு வெட்டிக் கொடுப்போம் என்று சொன்னதன் அடிப்படையில் இந்தத் தடவை 3 ஆயிரம் கிணறுகள் வெட்டிக் கொடுத்திருப்பதாக அதிகாரிகள் உங்களிடம் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். தயவுசெய்து அந்த 3 ஆயிரம் கிணறுகள் பாசனத்திற்கு என்று வெட்டிக் கொடுக்கப்பட்டிருக் கிறதா என்பதை நீங்கள் பார்க்கவேண்டுமென்று நான் சொல்லிக் கொள்கிறேன். ஏன் என்றால் அண்மையில் ஒரு கேஸ் பத்திரிகை யில் வந்திருக்கிறது. இராமநாதபுரத்துக்காரர் ஒருவர் தன் னுடைய கிணற்றைக் காணோம், தேடிக் கொடுங்கள் என்று போலீசில் புகார் கொடுத்திருக்கிறார். இப்படி எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. எனவே நாம் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதற்காகச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்த திட்டம் ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ், அருமையான திட்டம். ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கிறது என்று சொன் னாலும் கூட அதிலே போகிறவர்கள் அனேகமாக அங்கே போகா மல் இருந்தால் கூட வெற்றி பெற்று இருப்பார்கள். இப்போது போகிற காரணத்தால் பலர் தோற்றுப் போய் விடுகிறார்கள்.



1992 மார்ச் 9] [திரு. குமரி அனந்தன்]

அப்படி ஒரு பயிற்சி நடக்கிறது. அதை நீங்கள் உணர்ந்து, தெரிந்துகொண்டு இனிமேல் நல்லமுறையில் பயிற்சி கொடுக் கிறோம் என்று சொன்னதற்கு என்னுடைய பாராட்டைத் தெரி வித்துக் கொள்கிறேன். அதன் மூலம் சாதாரண ஏழை மக்கள் எல்லாம் இப்போது வந்து பயன் பெறுவார்கள்.

அடுத்து நிர்வாகச் சீர்திருத்தம் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள்.
கொஞ்சம் பணிவோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, சில
கோரிக்கைகளை சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளிடம்
எடுத்துச் சொன்னால் அந்த அதிகாரிகளுக்குச் செய்ய விருப்பம்
இருந்தால் செய்யலாம், செய்யவில்லை என்று சொன்னால் இப்
போது போலீசில் புகார் கொடுக்கிற ஒரு நிலை அடிக்கடி ஏற்படு
கிறது. அது எதற்கு? இதுவரை மக்களுடைய பிரதிநிதிகள் ஒரு
அதிகாரியை அணுகி காரியம் செய்வது என்பது மக்களுடைய
பிரதிநிதிகளும், அரசியல் தலைவர்களும், அதிகாரிகளும்
சேர்ந்துதானே இந்த நாட்டை நடத்திக்கொண்டு இருக்கிறோம்.
நாம் ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளாமல், ஒருவருக்கொருவர்
முரண்பாடாக மோதிக்கொண்டு இருக்கிறோமோ என்ற ஐயப்பாடு
எனக்கு ஏற்படுகிறது. இவ்வளவு நாள் இல்லாத ஒரு நிலை இப்
போது ஏற்பட்டு இருப்பதற்கு யாருடைய தவறு என்று சொன்
னாலும் அதனை நீங்கள் செம்மைப்படுத்த வேண்டுமென்று
உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அது நன்றாக
இல்லை: நம்மைப் பற்றி சரியான பிரதிபலிப்பாக மக்கள்
மத்தியில் அது உலாவவில்லை.

அடுத்து இப்போது சிக்கனத்தைப் பற்றி அதிகமாகப் பேசிக்
கொண்டிருக்கிறோம். 55 கோடி ரூபாய்க்கு நீங்கள் சிக்கனம்
செய்யவேண்டும். அதற்கெல்லாம் நாங்கள் பெரும் உதவியாக
இருக்கப் போகிறோம். இந்த 55 கோடி ரூபாய்க்கு மேலும் கூட
சிக்கனம் ஆக்கலாம். ஆனால் சில நேரங்களில் நான் பார்க்
கிறேன்: Heads of Department ஆக இருக்கக் கூடிய
வர்கள் வீட்டில் கல்யாணம் நடந்தால் உடனே சென்னையில்
ஒரு கான்பிரன்ஸ் நடக்கிறது. அது ஏன் என்று கொஞ்சம்
பாருங்கள். அது இரண்டும் எப்படி Co-incidence ஆக
ஆகிறது என்பதைக் கொஞ்சம் பார்க்கவேண்டும். (சிரிப்பு) சில
இடங்களில் பார்க்கிறோம்: அதேபோல் டெல்லிக்குப் போகிற
போது பார்க்கிறோம்; அது ஏன் என்று பாருங்கள் என்பதற்
காகத்தான் சொல்லுகிறேன். உங்களுடைய பார்வைக்கு; நண்பன்
அல்லவா. அதைப்போல திரைப்படக் கொட்டகைகளில் பல
நேரங்களில் அவர்களுடைய ஜீப்புகள் நின்று கொண்டு இருக்கின்
றன. அவசர உதவி செய்யப்போவதற்காக அல்ல. அவர்கள்
அவசரமாக டிக்கெட் வாங்கப் போகிறார்கள். அந்தயும்
கொஞ்சம் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ

தேவையா என்பதை எல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். சிலர் உள்ளே போனால் தெரிந்துவிடும் என்பதற்காக அந்த ரோட்டில் விட்டு விட்டு போகிறார்கள். கண்ட லாரிக்காரன் அடித்துப் விட்டுப் போய்விடுகிறான். அடித்தது அரசாங்கத்திற்கு தெரிந்தால் என்ன ஆவது என்று கருதி பிரைவேட்டாக ரிப்பேர் செய்து விடுகிறார்கள். அதைக் கொஞ்சம் பாருங்கள். அவர்கள், அதிகாரிகள் நஷ்டப்படக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

அடுத்து இன்னும் ஒரு சிந்தனை ஓடுகிறது. ரேஷன் கடையைப் பற்றி. ஒன்றை மட்டும் வேண்டிக்கொள்வேன். வசதி அற்றவர்களுக்கு, ஏழை பாழையாக இருப்பவர்களுக்கு இப்போது 12 கிலோவாக கொடுத்துக்கொண்டு இருப்பதை 25 கிலோவாக உயர்த்திப் போடுங்கள். கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களுக்கு 3 லிட்டர்தான் மண்ணெண்ணெய் கிடைக்கிறது. கிராமப் புறத்தில் இருப்பவன்தான் மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருக்கின்ற விளக்கை வைத்துக்கொண்டு இருக்கிறான்; விறகை வைத்துக்கொண்டு இருக்கிறான். அவனுக்கு 3 லிட்டர், பட்டணத்தில் இருப்பவர்களுக்கு 10 லிட்டர் என்று சொன்னால், அவனுக்கு இல்லை என்றால் கூட பரவாயில்லை; கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை, அதை யாராவது தப்பாக நினைத்துவிடப் போகிறார்கள். அவர்களுக்கும் 10 லிட்டராவது கொடுக்கவேண்டும். இன்றைக்கு பாமாயில் என்பது பலருக்குத் தெரிவது இல்லை. ஏன் என்றால் கொஞ்ச நாட்களாக நாம் கொடுக்க முடியாத காரணத்தால் அதையும் கொடுக்கவேண்டும். இவைகளையெல்லாம் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். வசதி அற்ற மக்கள் சிலயிடங்களில் வெகுதூரம் நடந்து சென்று. . . (குறுக்கீடு)

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்</u> : தலைவர் அவர்களே, . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : உறுப்பினர் பேசி முடிக்கட்டும். மாறி மாறி குறுக்கீடு இருப்பதால் நேரம் பற்றிய பிரச்சினை வருகிறது.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்</u> : தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பாமாயில் ஆரம்ப காலத்தில் 3 ஆயிரம் டன் கிடைத்த போது நகரங்களுக்கு மட்டும் கொடுத்தோம். இப்போது எல்லா கிராமங்களுக்கும் பாமாயில் கொடுக்கப்பட்டுவிட்டது. வாங்காத கிராமங்களில் இனி வாங்கச் சொல்லியும் வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். அவர்களும் வாங்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





முற்பகல் 11-40.

<u>திரு. குமரி அனந்தன்</u> : யாரோ வாங்காத கிராமத்தான் என்னிடம் இதுபற்றி சொல்லியிருக்கிறான். (சிரிப்பு). அவனைப் பார்த்து, இனிமேல் நீங்களும் வாங்குங்கள் என்று சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களுடைய ஊரிலே, நாகர்கோவிலுக்கு வந்து ஒரு நல்ல காரியத்தைச் செய்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பிறந்த நாள் பரிசாக இனிமேல் ரேஷன் கடைகளிலே இருக்கிறவர்களுக்கு 250 ரூபாய்க்குப் பதில் 400 ரூபாய் சம்பளமாக வழங்கப்படும்; 150 ரூபாய் உயர்த்தப்படும் என்று அவர்கள் சொல்லிவிட்டு வந்து விட்டார்கள். நான் ஆவலோடு பட்ஜெட்டிலே எதிர்பார்த்தேன். பட்ஜெட்டிலே இல்லை. வேறு ஏதாவது திட்டம் இருக்கும். (சிரிப்பு).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு உணவு அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். அவர்களுக்குச் சம்பளத்தை கூட்டுறவுச் சங்கங்கள் கொடுக்கின்றன. அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்து இருக்கிறார்கள். 350 ரூபாயிலிருந்து 150 ரூபாயைக் கூட்டி, 500 ரூபாயாகக் கூட்டுறவுச் சங்கங்களில் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>திரு. குமரி அனந்தன்</u> : இப்போது தட்டுகிற கைத்தட்டலை அன்று பட்ஜெட்டிலேயே தட்டி இருப்போம் என்பதுதான்; வேறு ஒன்றும் இல்லை. அதிலேயே அந்த வரிசைப்படி வந்திருக்குமல்லவா? பல நன்மைகளிலே அதுவும் வந்திருக்கும். பட்ஜெட்டிலே இல்லையென்றுதான் நான் சொன்னேன். அதற்கு ஏற்பாடு இருக்கும் என்று நான் சொன்னேன்.

அதற்குப் பிறகு இல்லத்தரசிகளை மகிழ்விக்கின்ற ஒரு நல்ல காரியத்தை நமது நிதி அமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அந்த இல்லத்தரசிகள் மகிழ்வோடு வரவேற்கவேண்டுமென்று வரியைக் குறைத்திருக்கிறார்கள். அதிலே எங்களுக்கு இருக்கிற ஐயப்பாடு என்னவென்றால், ரொம்ப அழகாக, பலகாரங்கள் நெய்யினால் செய்யப்பட்டவை அல்ல என்பது தெரியதாக இருக்கும் அப்படி ஒன்றும் அவர்கள் செய்திருக்க மாட்டார்கள். ஆனால் சில கடைகளிலே அப்படி போடப்பட்டிருக்கும்.

அந்த மாதிரி, ஒன்றாவது இரண்டாவது அட்டவணை தவிர, வரி குறைப்பு என்று சொன்னார்கள். ஒன்றாவது, இரண்டாவது அட்டவணையிலே ஒன்றாவது அட்டவணையிலே என்ன இருக்கிறது என்றால் மஞ்சள் இருக்கிறது ; மிளகாய் இருக்கிறது ; புளி இருக்கிறது ; கொத்தமல்லி இருக்கிறது ; கடலெண்ணெய் இருக்கிறது ; தேங்காய் எண்ணெய் இருக்கிறது ; மைதா, கோதுமைப் பொருள்கள் இவ்வளவும் இருக்கின்றன ; காப்பி இருக்கிறது ; வெல்லம் இருக்கிறது ; இதற்கெல்லாம் வரி குறைவு இல்லை. இரண்டாவது பட்டியலில் துவரம் பருப்பு கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு இதெல்லாம் இருக்கிறது. அதற்கும் வரி குறைவு இல்லை.

பிறகு 8 லிருந்து 5 ஆக வரி குறைந்தது என்னவென்று சொன்னால், ''நாம் அன்றாடம், எல்லோரும் பயன்படுத்துகின்ற கிராம்பு'' என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். எல்லோரும் பயன்படுத்துகிற கிராம்பு என்று சொன்னால், இங்கே இருக்கிற பலர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எல்லோரும் அன்றாடம் கிராம்பைப் பயன்படுத்துவதில்லை என்று நான் நினைக்கிறேன். ஒருவேளை இப்போது எப்படியோ ? காலமாற்றத்தினாலே என்ன ஏற்பட்டு இருக்கிறது என்று தெரியாது. இப்போது எல்லோரும் நாள்தோறும் கிராம்பைப் பயன்படுத்துவதில்லை என்பது நமக்குத் தெரியும். வெந்தயம், குச்சிக் கிழங்கு வறுவல், சேமியா இவைகளுக்கெல்லாம் பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெந்தயத்தை எல்லோரும் பயன்படுத்துகிறார்கள். வேண்டுமென்றால், மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் விரும்பினால், கிராம்பை எடுத்துவிடுகிறேன்.

திரு. குமரி அனந்தன் : சுவையாக வெற்றிலையெல்லாம் போட்டுக்கொண்டிருக்கிறவர்களுக்கு என்னாலே பெரிய கெட்ட பெயர் வந்துவிடக்கூடாது. அதனாலே நீங்கள் அதைத் தயவு செய்து விட்டு வைத்து விடுங்கள். அதுதான் நல்லது.

அடுத்து நீங்கள் செய்திருப்பது அருமையான வேலை. சேமியா. சேமியாவை பலர் உப்புமாவாக கிண்டிச் சாப்பிடுகிறார்கள். சேமியாவில் பாயாசம் செய்கிறார்கள். பாயாசம்





அதிகமாக வைக்க முடியவில்லையென்றால் வேறு ஏதாவது கிண்டிக் கொடுக்கிறார்கள். சேமியா என்று சொல்கிற போது பரவாயில்லை. எப்படியோ நமக்கு உணவுக்கு வேண்டும்.

அடுத்து குங்குமத்திற்கு வரியில்லை. இதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், இதில் பெண்கள் பெரிதும் மகிழ்வார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதில் பெண்கள் மகிழ்வார்களா என்று தெரியவில்லை. ஏனென்றால், குங்குமம் தொட்டு பொட்டிடுபவர்கள் அதிகம் இருப்பதில்லை. (சிரிப்பு) குங்குமம் தொட்டு பொட்டிடுபவர்கள் அதிகம் இல்லை. ஒட்டி பொட்டு போடுபவர்கள்தான் இப்போது அதிகம். (சிரிப்பு). தொட்டு போடுபவர்கள் இல்லை. ஒட்டு போடுபவர்களுக்கு இருக்கிற காரணத்தினாலே, எந்த அளவிற்கு அவர்கள் மகிழ்வார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் மகிழ்வுக்கு உரியதுதான்.

அதைப்போல நீங்கள் கண் மைக்கு விலக்களித்து பெண்மைக்கு மதிப்பளித்து உள்ளதற்கு நான் பாராட்டு தெரிவிக்கிறேன். ஆண்மைக்கும் நீங்கள் கொஞ்சம் மதிப்பளித்து, பெண்மைக்கு மதிப்பளித்து கண் மைக்கு விலக்கு அளித்ததைப் போல கொஞ்சம் ஆண் மைக்கும் விலை குறைத்து இருக்கலாம். ஏனென்று சொன்னால், இப்பொழுதெல்லாம்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்மைக்கு மை அளித்திருப்பதுபோல் ஆண்களுக்கும் ஏதாவது அளிக்க வேண்டுமென்று சொல்கிறார் ; என்ன அளிக்க வேண்டுமென்று கேட்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரி விலக்கு அளித்திருக்கிறார்கள் ; பெண்மைக்கு மதிப்பளித்து என்று சொன்னேன் ; ஆண்மைக்கும் அந்த மதிப்பளித்து, விலக்கு அளித்து இருக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு வரி விலக்கு அளித்து இருக்க வேண்டுமென்று சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர்

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மையிலே ஆண்மை, பெண்மை என்று கிடையாது. (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை நான் ஒத்துக் கொள்ள மாட்டேன். நீங்கள் அதை ஒத்துக்கொள்ளலாம். நமது நிதி அமைச்சர் அவர்களும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆண்மை கிடையாது என்பதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன் ; ஆண்மை உண்டு. (சிரிப்பு) எப்படியென்றால், வள்ளுவரே சொல்லியிருக்கிறார்.

முற்பகல் 11-45

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஆண்மை இருந்தால் அதற்கு விளக்கம் தேவை இல்லை. (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் திருக்குறளுக்கு விளக்கம் அளிப்பவர்கள். அவர்களுக்கே நன்றாகத் தெரியும். அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எவ்வுரு யார் யாராய்த் தோன்றினும் அவ்வுரு மைப் பொருள் காண்பது அறிவு. (சிரிப்பு) எவ்வுரு யார் யாராய்த் தோன்றினும் அவ்வுரு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொல்கிற மை, அந்த ஆண் மை, அந்த மையைப் பொறுத்த அளவிற்கு ஆண் மை ஆனாலும், பெண் மை ஆனாலும் அது ஒரே மைதான். (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன் : இல்லை. பெண்மை. இது எல்லாம் அனுபவ உண்மை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில விஷயங்கள் திரு. குமரி அனந்தனுக்கு மட்டுமே தெரிகிற மையாக இருக்கின்ற காரணத்தால், அந்த மையைப் பற்றி அவர் நிதியமைச்சரவர்களிடம் தெரிவித்துக் கொள்வார் ; நிதியமைச்சரவர்களும் அதற்கு விளக்கம் அளித்துக் கொள்வார்கள். (சிரிப்பு) எனவே, மையை விட்டு—விடலாம் நேரத்தைக் கருதிச் சொல்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : இந்த மையத்தை விட்டு வெளியே போக வேண்டுமென்று சொல்கிறீர்கள். மகிழ்ச்சி ஐயா. எப்படி இருந்தாலும், இம்மைக்கும்.....



மாண்புமிகு பேரவைத் தலைவர் : 45 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. குமரி அனந்தன் : இம்மைக்கு நல்ல திட்டங்களைத் தந்து மகிழ்ச்சியோடு அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், இதையெல்லாம் சொல்ல ஆரம்பித்தேன். அடுத்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 45 நிமிடங்கள் ஆகின்றன.

திரு. குமரி அனந்தன் : முடித்து விடுகிறேன். அவ்வளவு நேரம் ஆகியிருக்கக் கூடாது. இடையிலே பேசி விட்டார்கள்

அடுத்தாற்போல, நம்முடைய நிதியமைச்சரவர்களின் கண்களிலே பட்டிருப்பது என்னவென்றால், கவரிங் நகைகள். அந்த கவரிங் நகைகள் கண்ணிலே பட்டவுடன் என்ன செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், இப்பொழுது ஏழை பாழைகள் எல்லாம் அதைத்தானே போடுகிறார்கள் என்று சொல்லி, இப்பொழுது என்ன செய்திருக்கிறார்கள் என்றால், நிதிநிலை அறிக்கையிலே வரியைக் குறைத்திருக்கிறார்கள் ஆனால் இதிலே சங்கடம் என்னவென்றால், 1992 நிதிநிலை அறிக்கையிலே கவரிங் நகை அவர்களுடைய கண்ணிலே பட்டு, எட்டு சதவீதமாக இருந்த வரியை 2 ஆகக் குறைத்திருக்கிறார்கள். போன வருஷம் 2 ஆகக் குறைத்து, இந்த வருஷம் 5 ஆகக் கூட்டியதைப் பார்த்து பெண்கள் பெரிதும் மகிழ்வார்களா ? (குறுக்கீடு) பக்கம் சொல்லவா ? பக்கம் 81

அதைப் போலவே, போன நிதி நிலை அறிக்கையிலே 2 சதவீதம் ஆக இருந்து, இப்பொழுது 5 சதவீதம் என்று ஆக்கினால் மகிழ மாட்டார்கள் அல்லவா ? அதனாலே சொல்கிறேன். கவரிங் நகையைப் பொறுத்தவரையிலே, கவர் பண்ண முடியாது அல்லவா ? அதனால் சொல்கிறேன்.

வாடகை டாக்சிகளுக்கு 15 ஆக இருந்ததை 5 ஆகக் குறைத்திருப்பதைப் பாராட்டுகிறேன். (குறுக்கீடு) முடிக்க வேண்டும். சபாநாயகர் சொல்லியிருக்கிறார்.

பிறகு ஏ.சி. ரெஸ்டாரண்ட். அதற்கு இருக்கிற வரியையே எடுத்தாகிவிட்டது. நாம் கூல் டிரிங்ஸ்க்கு வரி போடுவது மாதிரி ஆகிவிட்டது. 18½ இலட்சம் ரூபாய்க்கு மேல் விற்பனை செய்கிற ஓட்டல்களில் வரி விதிக்கப்பட்டு வரும் நிலைமையை மாற்றி இப்பொழுது அதை 2 இலட்சமாகக் கொண்டு வந்து விட்டோம். பக்கத்து மாநிலத்திலே இருக்கிறதா, இல்லையா என்பது அல்ல,

நமக்கு, 18¼ இலட்சத்திற்குக் கீழ கொண்டு வருவது என்றால் என்ன ஆகிறது இப்பொழுது? காலையிலே 20, 30 பேர், சாதாரண ஒரு சின்ன கடையிலே போய், வண்டி இழுக்கிறவர் கள், மூட்டை தூக்குகின்றவர்கள் போய் டீ சாப்பிடுகின்ற கடையிலேகூட, காலையிலே 30 பேர் சாப்பிட்டு, மதியம் 30 பேர் சாப்பிட்டு, இராத்திரி 30 பேர் ஆக 90 பேர் சாப்பிட்டார் கள் என்றால் 800 ரூபாய்க்கு வந்து விடுகிறது. 800 இருந்தால் வரி. ஆகவே, ஏழைகள் கொடுக்கின்ற அந்த வரி இருக்கிறதே அது நல்லது அல்ல. உணவுப் பொருள்களுக்கு வரி கொடுத்தது மாதிரி ஆகும். மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபொழுது இவைகளையெல்லாம் இல்லை என்று சொல்லி விடுவார்கள். என நம்புகிறேன்

அதைப்போல, கசண்டுக்கு 25 போட்டதை 85 போட்டால் கூட மகிழ்ச்சி. ஆனால் கசண்டினாலே மட்டுமே கள்ளச் சாராயம் வரவில்லை; சிலருடைய கயமைத் தனத்தினாலும் வருகிறது என்பதைப் புரிந்து கொண்டு இருக்கிறீர்கள். அதற்கு இன்னும் மேலும் தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உள்ளாட்சிகள் சம்பளம் கூட கொடுக்க முடியாத நிலையிலே இருக்கின்றன. அதனால் ஒரு ரூபாய் நில வரி வசூலித்தால் 45 பைசா உள்ளாட்சிக்குக் கிடைக்கும். இனி ஒரு ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

அதுமாதிரி மேல் வரி 2½ ரூபாய் என்று இருந்தது இவ்வளவு நாளும். இனிமேல் 10 ரூபாய் வரை கொண்டு போகலாம் என்று சொல்கிறீர்கள். ஏழை, கிராம மக்கள் ரொம்ப பாதிக்கப்படு வார்கள். அதனாலே தயவுசெய்து வேறு வழிகளிலே அவர்களுக்கு கவர்ச்சிகரமான திட்டங்கள் நீங்கள் கொடுத்து அதன்மூலம் மக்களாகவே கொண்டு வந்து பணத்தைக் கொடுத்து, அதைப் பெறுகின்றதோ, கொடுக்கின்றதோ மாதிரியான திட்டங்களைக் கொண்டு வர வேண்டுமே தவிர, இந்த வரிகளை உயர்த்துவதன் மூலம் ஏழை கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் ஒரேயொரு செய்தியைச் சொல்லிவிட்டு முடித்து விட வேண்டும். ஏனென்றால், அவைத் தலைவரவர்கள் எனக்குக் கொடுத்து இருக்கின்ற உரிமையோடு கூடிய அந்த அனுமதியை நான் பெருமையோடு ஏற்றுக் கொள்ள வேண்டு மென்ற காரணத்திற்காகவும், நீங்கள் அமைதியாகக் கேட்டதற்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்ற காரணத்திற்காகவும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.



ஆம்னி பஸ்ஸுக்கு இப்பொழுது அடிப்படை வரியிலே 25 சதவீதம் போடுகிறீர்கள். போடலாம். கட்டும். கொடுக்க லாம். நமக்கு அதன்மூலம் வருமானம் வருகிறது. கொஞ்சம் வருகிறது. 450 பேர் இன்னும் ஆம்னி பஸ்ஸுக்கு பர்மிட் வேண்டு மென்று காத்து இருக்கிறார்கள். அப்படிக் காத்து இருக்கின்றவர் களுக்கு நாம் கொடுக்கவில்லை என்றால், என்ன செய்கிறார்கள் என்றால், பக்கத்திலே, ஆந்திராவிற்குப் போகிறார்கள், ஒரு பர்மிட்டை வாங்குகிறார்கள், ஒரு டெம்பரரி லைசென்ஸை வாங்குகிறார்கள். இங்கே ஓடி, பணம் அங்கே போகிறது. அதற்காக ஏறக்குறைய 450 பஸ்களுக்கு-அவர்கள் மனு போட்டு காத்திருக்கிற ஆம்னி பஸ்களுக்கு நீங்கள் கொடுத்தீர்கள் என்றால் நான்கு கோடி ரூபாய் இலாபம் வரும். நமக்கு பற்றாக்குறை இருக்கிறது என்ற காரணத்திற்காக இதையெல்லாம் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு நீங்கள் அனுமதி கொடுத்தால் நல்லது என்ற காரணத்திற்காக அதைச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11.50

அடுத்த செய்தியாக நான் சொல்ல விரும்புவது என்ன வென்று சொன்னால், இது ஒரு துணிகரமான பட்ஜெட் என்று சொன்னேன். ஒருவருக்கொருவர் புரிந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே, நான் வேடிக்கையாகச் சொன்னதைக் கூட நீங்கள் பெருமனதோடு ஏற்றுக் கொண்டு, ஒருவருக்கொருவர் நாம் கலந்துரையாடிக் கொண்ட ஒரு மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை ஏற்படுத்தியதற்கு வாய்ப்பளித்தமைக்கு அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையிலே ஒரு சொல்லைச் சொல்கிறபோது, அதற்கு இரண்டு பொருள் வரும். அது நிதியமைச்சருக்குத் தெரியாததல்ல. 'முள்ளெடுத்துப் போடுவது' என்று சொல்கிறபோது, சொல்லுபவனைப் பொறுத்தும், சூழ்நிலையைப் பொறுத்தும், அது இரண்டு பொருளாக வரும். முன்னே இல்லாத இடத்தில், ஒருவன் முள்ளை எடுத்துப் போட்டு, ராஜநடை நடந்து கொண்டிருப்பவனுடைய காலிலே குத்தட்டும்; இரத்தம் வரட்டும் ; அந்த ராஜநடை போகட்டும் என்று முள்ளை எடுத்துப் போடுபவர்களும் உண்டு. கிடக்கிற முள்ளை இது காலிலே குத்திவிடக் கூடாது ; இரத்தம் வந்து விடக் கூடாது என்று முள்ளை அங்கிருந்து எடுத்து அப்புறப்படுத்த வேண்டுமென்று, முள்ளை-எடுத்துப் போடுபவனாக நான் இருக்கிறேன் என்பதைச் சொல்லி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பிற்பட்
டோர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு போவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி
அனந்தன் அவர்கள் பேசுகிறபோது, தமிழிலே சிறந்த வரை
வாணை எழுதுபவர்களுக்குப் பரிசு வழங்கப்படும் என்றீர்களே,
அது நடந்ததா என்று கேட்டார்கள். பரிசு வழங்கப்பட்டிருக்
கிறது. நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளன்று, தமிழிலே
சிறந்த வரைவு எழுதியவர்களுக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித்
தலைவி அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இன்னொன்று, கல்லூரிக் கல்விக் கட்டணத்தைப் பற்றிக்
குறிப்பிடுகிறபோது, இலவசக் கல்வியை, பெருந்தலைவர்
காமராஜ் அவர்கள் கொண்டு வந்தார்கள் ; அதை மாற்றி
விடாதீர்கள் என்றார். பெருந்தலைவர் காமராஜ் அவர்கள்
பள்ளிக் கல்வியை வளர்க்கத்தான் இலவசக் கல்வியை வைத்
திருந்தார்கள். இன்றைக்கும் அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்து
கொண்டிருக்கிறது. ஆனால், கல்லூரிக் கல்வியில் சில பிரிவினர்
களுக்கு இலவசக் கல்வி என்ற ஆணை பிறப்பித்தவர், மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள். ஆகவே, அதில் ஒரு சிறிய திருத்
தம்தான். ஆனால், இன்றைக்கு வளர்ந்திருக்கிற கல்லூரிக்
கல்வியையொட்டித்தான், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்
களுடைய நிதிநிலை அறிக்கையிலே கருத்து தெரிவிக்கப்பட்டிருக்
கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள்
இந்தப் பொது விவாதத்தில் கலந்து கொள்ள பெரிதும் ஆர்வம்
காட்டியிருக்கிறார்கள். பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள்
பெரும் எண்ணிக்கையில், தாங்கள் இதில் கலந்து கொண்டு
உரையாற்ற வேண்டுமென்று விருப்பம் தெரிவித்திருக்கிறார்
கள். நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறும் பொது விவா
தத்திலும், அதன் பின்னர் மானியக் கோரிக்கைகளின் மீது நடை
பெறும் விவாதத்திலும் உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதி
யில் நடைபெற வேண்டிய முன்னேற்றப் பணிகள் பற்றி, அரசின்
கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு ஒரு அரிய சந்தர்ப்பமாக
அவை இருக்கிற காரணத்தினால், இந்த அளவுக்கு ஆர்வம் காட்டி
வருகிறார்கள். எனவே, விவாதங்களில் கலந்து கொள்ளும்
உறுப்பினர்கள், தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நேரத்திற்குள்
ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தொகுதிப் பிரச்சினை
களைப் பற்றி பேசி முடிப்பது பயனுள்ளதாக இருக்கும். மேலும்
குறுக்கீடுகள் வராதவாறு உரையாற்றுவது, பல உறுப்பினர்கள்



பங்கேற்பதற்கும் வாய்ப்பாக அமையும். இவற்றையெல்லாம்
மனதிலே கொண்டு, உறுப்பினர்கள் விவாதத்திலே கலந்து
கொள்ள வேண்டும். கலந்து கொள்கிற உறுப்பினர்கள், ஒவ்
வொருவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள்
முடித்துக் கொள்வதற்குரிய வகையில் தங்களுடைய உரையை
அமைத்துக் கொள்ள வேண்டும். குறுக்கீடுகள் என்று அமைச்சர்
களோ, மற்ற உறுப்பினர்களோ இடையிடையே குறுக்கிட்டு,
சில விளக்கங்கள் சொல்ல வேண்டும் என்கிற அவசியமான
நிலை ஏற்பட்டால் மட்டும் குறுக்கிட்டுக் கூற கேட்டுக் கொள்
கிறேன். அடிக்கடி குறுக்கீடுகள் இருக்கிற காரணத்தினால்,
அந்த உறுப்பினருடைய நேரமும் நீட்டித்துக் கொடுக்கப்பட்டுக்
கொண்டே போகிறது. அவ்வாறு போகிறபோது, மற்ற உறுப்
பினர்களுடைய சந்தர்ப்பம் பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படு
கிறது இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு, குறுக்கீடுகளை
யும் பெருமளவு தவிர்க்க உறுப்பினர்களும், அமைச்சர்களும்
முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

5. ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மான முன்னறிவிப்புகளை உறுப்பினர்கள்
கொடுக்க வேண்டிய காலம் குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. பி வி.
இராஜேந்திரன் அவர்கள் எழுப்பிய ஓர் ஒழுங்குப் பிரச்சினையில்
என்னுடைய விளக்கத்தை அப்போது அளித்திருந்தேன். பொது
வாக, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கிறபோது, செயலகத்தில்
கொடுப்பதாக இருந்தால், ஒரு மணி நேரத்திற்கு முன்
கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது. பேரவைத் தலைவரிடமோ,
செயலாளரிடமோ கொடுப்பதாக இருந்தால், அரைமணி
நேரத்திற்கு முன்னர் கொடுக்க வேண்டுமென்றிருக்கிறது.
எனவே, என்னுடைய முந்தைய அறிவிப்பில் இவ்வாறு திருத்திக்
கொள்ளக் கேட்டுக்கொள்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம், 1992—93, பொது விவாதம்—
தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 1992—93 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்
மீது என்னுடைய கருத்துக்களைக் கூற முன் வருகிறேன்.

முற்பகல் 11-55

குமரியை ஆடவிட்ட பிறகு, அதே மேடையில் ஒரு கிழவியை ஆடவிட்டால் எப்படி இருக்குமோ, அதைப் போல சொல்லேருழ வர் குமரி அனந்தன் அவர்கள் குமுறிய பிறகு பேசுவதற்கு எனக்கு சற்று தயக்கமாக இருக்கிறது. என்னுடைய கருத்துக் களை அவைத் தலைவர் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னால் முடித்துக் கொள்கிறேன் என்று அவைத் தலைவருக்கு உறுதி கூறி, என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முன் வருகிறேன்.

தமிழகத்தில் சில நிதி அமைச்சர்கள் கடந்தகாலத்தில் சிறந்த நிதி நிலை அறிக்கைகளைத் தயார் செய்து நாட்டு மக்கள் மத்தியிலே பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட முதலமைச்சராக, நிதி அமைச்சராக இருந்து கொண்டு நிதி நிலை அறிக்கையைத் தயார் செய்து நாட்டு மக்களுடைய பாராட்டுக்களைப் பெற்றார்கள். அது இந்த மாமன்றத்திலே, வரலாற்றிலே இடம் பெற்றிருக்கிறது. ஆனால் அந்தக் காலக் கட்டத்தில் இந்த மாநிலத்திற்குத் தேவையான நிதி ஆதாரம் நன்றாக இருந்தது. ஆனால் இன் றைக்கு நம்முடைய மாநிலத்தின் திட்டங்களுக்குத் தேவையான நிதி கடும் பற்றாக்குறையாக இருக்கிற நேரத்தில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் எல்லோரும் பாராட்டும்படியாக ஒரு நல்ல நிதி நிலை அறிக்கையை ஆக்கி, அளித்து, எதிர்க்கட்சிகள் எதுவும் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாத அளவிற்கு, ஒரு நிதி நிலை அறிக்கையைத் தயார் செய்து அளித்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

இந்த நிதி நிலை அறிக்கையில் பல்வேறு நலத் திட்டங்களிலே நம்முடைய ஒப்பற்ற முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தொலை நோக்குப் பார்வை தென்படுகின்றது. நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய அணுகு முத்திரை யும் அதிலே பதிந்திருக்கிறது. இப்படிப்பட்ட, நிதி நிலைமை நெருக்கடியாக இருக்கின்ற கால கட்டத்தில், ஏராளமான வரி கள் போடுவார்கள் என்று நாட்டு மக்கள் எல்லாம் எதிர்பார்த் தார்கள். ஆனால் அவர்களுடைய எதிர்பார்ப்பு பொய்யாகின்ற அளவில் யாரையும் பாதிக்காத ஒரு சிறந்த நிதி நிலை அறிக்கையை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

இந்த நிதி நிலை அறிக்கையை பார்த்த பிறகு என்ன பேசுவது என்று தெரியாமல் சில எதிர்க்கட்சிகள் இந்த நிதி நிலை அறிக்கையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து விட்டு ஒன்றும் சொல்ல முடியாமல் கடைசியிலே ஒரு அரசியல் கட்சித் தலைவர், இது அரை வேக்காடு பட்ஜெட் என்றும், முன்னுக்குப் பின்



முரணாக இருக்கிறது என்றும், அவர் தன்னுடைய பத்திரிகை யில் வழக்கம் போல் எழுதியிருக்கிறார். அரை வேக்காடு என்பது எடுத்துக் கொள்கிற பொருளைப் பொறுத்து இருக்கிறது. டாக்டரிடத்தில் ஒரு நோயாளி போனால் நீங்கள் அரை வேக்காடு முட்டை சாப்பிடுங்கள், அரை வேக்காடு காய்கறிகள் சாப்பிடுங் கள், அதுதான் உடம்புக்குச் சத்து என்று நல்ல டாக்டர் சொல் வார். ஆனால் அந்த அரசியல் டாக்டருக்கு அது ஏனோ தெரிய வில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், அவர்கள் இருக்கிற இடம், பார்க்கிற பார்வை அப்படி. அவர்களுடைய பார்வையிலே கோளாறு இருக்கிறதே தவிர, இந்த பட்ஜெட்டிலே கோளாறு இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கடுமையான நிதிப் பற்றாக்குறை இருக்கிற இந்தக் கால கட்டத்தில் ஏழை மக்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் நல்ல திட்டங்கள் எந்த அளவுக்கு மக்களுக்குத் தேவை இருக் கிறதோ அவற்றை இந்த நிதி நிலை அறிக்கையில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இல்லத் தரசிகளுக்கு மகிழ்வூட்டுகின்ற வகையில் மளிகை சாமான்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது இல்லத் தரசிகளுக்கு மட்டும் மகிழ்வூட்டுவது அல்ல. குமரி அனந்தன் போன்ற இல்லத்தரசர்களுக்கும் மகிழ்வூட்டும். காரணம், அவர் களுடைய வீட்டிலே மளிகைச் சாமான் வாங்கக் காசுக் கேட்கும் போது விலை அதிகமாக இருக்கிறது என்பதால் கோபப் படுவார் என்றுதான் இல்லத்தரசிகளுக்கும், இல்லத்தரசர்களுக்கும் சேர்த்து மகிழ்வூட்டக்கூடிய ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை டாக்டர் நாவலர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கை, எந்தக் காலத்திற்கும், எதிர் காலத்திற்கும், ஏழை மக்களுக்கு உதவும் வகையில் அமைந் துள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல் 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்பதற் கிணங்க, ஏழை சிரிக்க வேண்டும். அது தான் நமது புரட்சித் தலைவி அரசினுடைய நோக்கம், புரட்சித் தலைவியின் நோக்கம் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் நூலகம் அமைப்பது பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. 5000 மக்கட் தொகைக்கு ஒரு நூலகம் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நாம் எவ்வளவுதான் அறிவாளியாக இருந்தாலும் நமக்குப் பொது அறிவு மிக முக்கியம். கிராமப்புறங்களிலே இருப்பவர்கள், நகரத்திற்கு வந்து, நூலகங்களுக்குச் சென்று பத்திரிகை

[திரு. ம. சின்னசாமி] [1992 மார்ச் 9

படிப்பதோ, நூல்களை வாங்கிப் படிப்பதோ இயலாத காரியம்
ஆகவே கிராமப் புறங்களில் 5,000 என்றிருப்பதை 2,000 மக்கட்
தொகைக்கு ஒரு நூலகம் என்று அதைத்திருத்தி அமைக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நூலகங்களில்
மகாகவிபாரதி, பாரதிதாசன் போன்றோருடைய நூல்களை வைக்க
வேண்டுமென்று அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கின்றது.
அந்தப் பெரும் புலவர்களுடைய வரிசையில் பேரறிஞர் அண்ணா
அவர்களுடைய நூல்களையும் சேர்த்து வைக்க வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் பேரறிஞர் அண்ணா
அவர்கள் இளைஞர்களுடைய மத்தியில் மிக்க எழுச்சியைக்
கொண்டு வந்திருந்ததை நாமெல்லாம் சொல்லித் தெரிய வேண்
டிய அவசியம் இல்லை.

நண்பகல் 12-.00

அடுத்து புரட்சித் தலைவியினுடைய மருத்துவத் திட்டம்.
இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம் இது.
நோயாளிகள்தான் மருத்துவமனைகளைத் தேடிப் போவார்கள்.
ஆனால் புரட்சித் தலைவியினுடைய மருத்துவநலத் திட்டத்தில்
டாக்டர்கள் நோயாளிகளைத் தேடி வருகிற நிலையிருக்கிறது.
அத்தகைய ஒரு அருமையான திட்டத்தை இதில் அறிமுகப்படுத்தி
இருக்கிறார்கள். இந்தியாவில் இருக்கின்ற மற்ற மாநிலங்கள்
எல்லாம் பார்த்துப் பின்பற்றுகிற ஒரு நல்ல திட்டத்தை நம்
முடைய வணக்கத்திற்குரிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்
அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதிலே ஒரு சிறிய குறையை
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்
கிறார்கள். அந்த முகாம்களுக்கு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன.
ஆனால் போதிய மருந்துகள் இல்லை என்று எங்களைப் போன்ற
சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த
மருத்துவ முகாம்களுக்கு செல்கிறபோது அங்குள்ள மருத்துவர்
கள் கூறுகிறார்கள். அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி</u> : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ முகாம்களில்
மருந்து கொடுப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொல்லி இருக்கிறார்கள். அந்த மருத்துவ முகாம்களுக்கு நாம்
இப்போது ஓரளவிற்குத் தேவையான மருந்துகளைக் கொடுத்துக்
கொண்டு இருக்கிறோம். அந்த மருத்துவ முகாம்கள் என்ன



1992 மார்ச் 9] [திரு. சு. முத்துசாமி]

நோக்கத்தோடு நடத்தப்படுகின்றன என்பதை நாம் முதலிலே
புரிந்துகொள்வது நல்லது என்று கருதுகிறேன். அந்த ஒரு நாளிலே
மருந்து கொடுப்பதன் மூலமாக மட்டுமே நோய்களைக் குணப்
படுத்திவிட முடியாது. கிராமங்களில் இருக்கின்ற பொதுமக்கள்
அரசு மருத்துவமனைக்கு வந்து தங்களுக்கு என்ன நோய்
இருக்கிறது என்று பரிசோதித்துக் கொள்வதற்கு நேரம் இல்லாத
காரணத்தாலோ அல்லது தெரியாத காரணத்தாலோ விட்டுவிடு
கிறார்கள். எனவே யார், யாருக்கு நோய் இருக்கின்றது என்
பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அவர்
கள் இருக்கின்ற இடத்திற்கே போய் நாம் சோதனை செய்
கிறோம். அப்படி பரிசோதனை செய்வதன் மூலமாக நாம் அறிகிற
நோயாளிகளை பக்கத்தில் இருக்கிற மருத்துவமனைக்கோ அல்லது
மற்ற இடங்களுக்கோ அனுப்பி அவர்களுக்கு சிகிச்சை செய்வதற்
கான ஏற்பாட்டை நாம் இப்போது செய்து கொண்டிருக்கிறோம்.
எனவே அதற்காகத்தான் இந்த முகாம்கள் நடத்தப்படுகின்றனவே
யொழிய நோயாளிக்கு மருந்து கொடுப்பதற்காக அல்ல என்பதை
நான் முதலிலே தெளிவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

இருந்தாலும் வரக் கூடியவர்களைத் திருப்திபடுத்த வேண்டும்
என்பதற்காக ஓரளவிற்கு அங்கு மருந்து கொடுக்கப்படுகிறது.
உதாரணமாக இதுவரையில் ஏறத்தாழ 16½ இலட்சம் பேரை
நாம் பரிசோதனை செய்திருக்கிறோம். அதிலே 7½ இலட்சம்
பேருக்கு நோய் இருப்பதாகக் கண்டு மருத்துவமனைகளுக்கு
போய் மருத்துவம் செய்து கொள்ள வேண்டுமென்று
சொல்லியிருக்கிறோம். அதிலே 22 ஆயிரம் பேருக்கு மேலே தீவிர
சிகிச்சை செய்து கொள்ள வேண்டியவர்கள் என்று கணக்கிடப்
பட்டு அவர்கள் எங்கெங்கே சிகிச்சை செய்துகொள்ள வேண்டு
மென்று ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். உதாரணமாக
கள்ளக்குறிச்சி அருகிலே மேலூர் என்ற கிராமத்தில் 25 குழந்தை
களுக்கு இருதய நோய் இருக்கிறது என்று கண்டுபிடித்து உரிய
மருத்துவர்களை அங்கே அனுப்பி அதற்கான ஏற்பாட்டைச்
செய்திருக்கிறோம். ஆகவே இது பத்திரிகையிலே வரும் என்ற
காரணத்தாலேதான் இந்த விளக்கத்தைச் சொல்ல வேண்டிய
அவசியம் ஏற்பட்டது. எனவே சட்டமன்ற உறுப்பினர்களை நான்
கேட்டுக்கொள்வது இந்த மருத்துவ முகாம்கள் பரிசோதனை
செய்து நோயாளிகளைக் கண்டு பிடிப்பதற்காகவே ஒழிய மருந்து
களைக்கொடுப்பதற்காக அல்ல. இருந்தாலும் அத்தியாவசியமான
சில மருந்துகளைக் கொடுத்திருக்கிறோம். எனவே அவர்களைத்
திருப்தி செய்ய வேண்டிய பொறுப்பு உங்களுடைய கையிலே
இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ம. சின்னசாமி</u> : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, அடுத்து, குடிநீர்த் திட்டத்திற்கு ஏராளமான நிதியை
ஒதுக்கி எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்படும் என்ற
ஒரு புரட்சிகரமான திட்டத்தை நம்முடைய நிதிநிலை அறிக்கை

யில் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குடிநீர்த் திட்டங்கள், குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அமலாக்கப்படுகின்றன. இங்கே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைசசர் அவர்களும் இருக்கிறார்கள். இந்தக் குடிநீர் வடிகால் வாரியத்தில் 'வொய்ட் எலிஃபன்ட்' என்று சொல்லப்படுகிற ஒரு டிவிஷன் இருக்கிறது. அதாவது மெக்கானிக்கல் டிவிஷன். அதிலே ஏராளமான ஆழ்துளைக் கிணறுகள் போடுன்ற இயந்திரங்கள் இருக்கின்றன. அந்த இயந்திரங்களைப் பொறுத்தவரையில் நிர்வாகச் செலவுதான் அதிகமாக இருக்கிறதே தவிர, அவை எதிர்பார்க்கிற அளவுக்கு இல்லை என்பதை இந்த நேரத்தில் அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்து, அந்த டிவிஷன்களை நீங்கள் ஒழித்துவிட்டு தனியாரிடம் ஆழ்துளைக் கிணறு போடுகின்ற பணியை ஒப்படைத்தால் நம்முடைய நிர்வாகச் செலவும் குறையும், நோக்கமும் நிறைவேறும்.

அடுத்து என்னுடைய தொகுதியில் கரூர் நகராட்சிக்கு காவிரியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் போடப்பட்டு அந்தப் பணி ஆமை வேகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அதை விரைவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் மண்மங்கலம், காத்தூர், காதப்பாறை ஆகிய ஊர்களுக்கும் காவிரியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் தண்ணீர் கொடுக்கின்ற திட்டம் ஆய்விலிருந்து, இன்று அரசினுடைய அனுமதிக்காக மூன்றாண்டு காலமாகக் காத்துக் கொண்டிருக்கிறது. அதை விரைவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் புலியூர் பேரூராட்சி என்ற ஒரு பேரூராட்சி இருக்கிறது. அதற்கும் காவிரியிலிருந்து குடிநீர் கொண்டுவர திட்டம் ஆய்வில் இருக்கிறது. அதையும் விரைவுபடுத்த வேண்டும்.

பிற்பகல் 12-05

அடுத்து நீர்ப் பாசனத் திட்டத்தைப் பற்றி ஒரு கருத்தை
நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு நம் பகுதி
யிலே மேற்பரப்பு நீரையெல்லாம் அதிகமாக எதிர்பார்க்கின்ற
கால கட்டத்தில் நாம் இல்லை. நாம் நிலத்தடி
நீரைத்தான் நம்பியிருக்கிறோம். அப்படி இருக்கின்ற போது,
நிலத்தடி நீரை இன்றைக்கு அதிகமாக நாம் சுரண்டி எடுத்து
விட்டோம். ஆகவே சொட்டு நீர்ப்பாசன முறையை நம்மு
டைய அரசு விவசாயிகள் மத்தியிலே நல்ல முறையிலே போதிக்க
வேண்டும். இன்னும் சொல்லப் போனால் "இஸ்ரேல்"



162336



நாட்டிலே 'டிரிப் இரிகேஷன்' என்ற, வேரிலே நீர்ப்பாய்ச்சுகின்ற
முறையை அங்கே அமல்படுத்துகிறார்கள். ஆகவே எதிர்காலத்தில்
பாசனம் நன்றாக இருக்க வேண்டும் என்று நாம் சொன்னால்
சொட்டு நீர்ப்பாசனம் வேண்டும். இது போன்ற நவீன பாசன
முறைகளை நாம் கடைப்பிடித்தாக வேண்டும். அதற்கு
உள்ளாட்சி மன்றங்களில் போதிய நிதிஆதாரம் இல்லாமல் இருக்
கிறது. ஆகவே உள்ளாட்சி மன்றங்கள் சுயமாகச் செயல்பட
வேண்டுமென்று சொன்னால் உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி
ஆதாரங்களைப் பெருக்குவதற்கு ஒரு வல்லுநர் குழுவை
அமைத்து அதற்கு வேண்டிய நிதி ஆதாரங்களைப் பெருக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்
றது) எல்லாவற்றையும் சேர்த்துச் சொல்லிவிடுகிறேன்.

அடுத்து நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்
பேற்ற பிறகு, ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்
மோசமான மின் பல்புகளை, சோக்குகளை எல்லாம் வாங்கி
போட்ட காரணத்தினாலே தெரு விளக்குகள் எரியாமல்
இருந்தன. இன்றைக்கு அமைச்சர் நல்ல தரமான கம்பெனியிலே
தான் வாங்க வேண்டும் என்ற உத்தரவைப் போட்டு இருக்கின்
றார்கள். அப்படிப் போட்ட பிறகும் இன்னும் பெரும்பாலான
கிராமங்களில் மின் விளக்குகள் எரியாமல் இருக்கின்றன. ஆகவே
ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குள் தெரு விளக்குகள் எரிய
வேண்டும் என்ற ஒரு உத்திரவினை அமைச்சர் பிறப்பிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது மாவட்டப் பிரிவினை. தென்னாற்காடு
மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பது பற்றி சொல்லியிருக்கிறார்
கள். அது போலவே திருச்சி மாவட்டம். அது மிகப் பெரிய
மாவட்டம். அந்த மாவட்டத்தை ஏற்கனவே இரண்டாகப்
பிரிக்க வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்து
இருக்கிறார்கள். அது மிகப் பெரிய மாவட்டமாக இருக்கின்ற
காரணத்தினாலேயே அதை மூன்றாகப் பிரித்து கரூரைத் தலை
நகரமாகக் கொண்ட ஒரு புதிய மாவட்டத்தையும் தொடங்க
வேண்டும் என்று நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்
களைக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: சீக்கிரம் முடியுங்கள். நேரம் ஆயிற்று.

<u>திரு. ம. சின்னசாமி</u>: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலையில்
கூட்டுமையிலே ஒரு நல்ல நிதிநிலை அறிக்கைய பெருமையான
ஒரு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த நிதி அமைச்சர்
அவர்களையும், அவர்களுக்கு முழு ஒத்துழைப்பாக இருந்து

திட்டங்களை அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களையும் பாராட்டி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ம. தனபால்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு ஒரு புனிதமான ஆட்சியை நம்மிடையே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு புனிதமான ஆட்சியில் நேற்றையதினம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நம்மிடையே தாக்கல் செய்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கை நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியதாக, ஏழை எளிய மக்களுக்கு வயிற்றில் பால் வார்க்கக் கூடியதாக அமைந்திருக்கிறது. எவ்வளவோ சூழ்நிலைகளுக்கிடையில், நிதிநிலை நெருக்கடிக்கு இடையிலே ஏற்படுத்தப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கை ஏழை மக்களைப் பாதிக்காத வகையில் அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது பாராட்டக் கூடிய ஒன்று, பெருமைப்படக் கூடிய ஒன்று. இந்த நிலையில் இன்றைக்குப் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் தமிழகம் இந்திய பெரும் துணைக் கண்டத்திலேயே எந்த ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஒரு முதன்மையான மாநிலமாக அமைய வேண்டுமென்ற நிலையில், கல்விக்குச் செய்து கொண்டிருக்கின்ற ஒரு சீரமைப்பு பாராட்டத் கூடிய ஒன்றாக இருக்கிறது. கூடுதல் ஆசிரியர்கள் நியமித்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல, பள்ளிக்காக பணமும் கட்டி, இடமும் காண்பித்திருக்கின்ற ஒரு நிலைமை தமிழகத்தில் நிறைய இடங்களில் இருக்கின்றது. பள்ளியே இல்லாத சூழ்நிலையில் பள்ளிக்கு இடம் காட்டி அதற்கான பணமும் கட்டி, நிறைய இடங்களில் காத்துக் கொண்டு இருக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட இடங்களிலே எல்லாம் நமது தமிழக அரசு பள்ளிகளை அமைத்துத் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று, என்னுடைய திருப்போரூர் தொகுதியிலே, மகளிருக்கு ஒரு மேல்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காகப் பணம் கட்டி, அதற்கு இடமும் காண்பித்திருக்கின்றார்கள். அதற்கான தீர்மானத்தையும் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறார்கள்.



பிற்பகல் 12-10

எனவே, அந்தப் பகுதியில் ஒரு மேல்நிலைப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, கடந்த கால நிதிநிலை அறிக்கையின்மீது நான் பேசும்போதுகூட ஒன்றைச் சொல்லியிருக்கிறேன். தையூர் ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளி பகுதியிலே, சுற்று வட்டாரத்திலே, 4, 5 கிலோ மீட்டருக்கு அப்பால் ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கின்ற சூழ்நிலையில் இங்கே ஒரு ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளி இயங்கிக் கொண்டிருக்கிறது. அதனைச் சுற்றிலும் கிட்டத்தட்ட 4, 5 துவக்கப் பள்ளிகள் இருக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட ஒரு நிலையில் அங்கே மாணவர்கள் எண்ணிக்கை கூட அதிகமாகியிருக்கின்ற காரணத்தினால் அதனை ஓர் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இந்த நிதிநிலை அறிக்கையில் மிக அழகாக ஒன்று கூறப்பட்டிருக்கிறது. நாங்கள் எல்லாம் எதிர்பார்த்த ஒன்று. 500 மக்கள் தொகைக்கு மேல் ஆகவும், ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள்ளாகவும் எந்த ஒரு பள்ளியும் இல்லை என்றால் அந்த இடத்திலே கண்டிப்பாக ஒரு ஓராசிரியர் பள்ளி திறவப்படும் என்று அறிவித்திருப்பது மிகவும் பாராட்டக் கூடிய ஒன்று, பெருமைப்படக் கூடிய ஒன்று. ஏழையெளிய, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி அறிவிலே மேம்பாடு அவர்கள் கல்வி அறிவு பெறுவதன் மூலம்தான் அடைய முடியும். இந்த நாடு அதன் மூலம் பெருமை மிக்க, புகழ் மிக்க ஒரு நாடாக மாறிட முடியும் என்ற ஒரு நிலையை உணர்ந்து புரட்சித் தலைவி அவர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், எனது பகுதியிலே கூட ஒரு முக்கியமான பிரச்சினை இளலூர் பகுதியில் இருக்கிறது. அந்தப் பகுதியிலே ஆதி திராவிடர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். அங்கே நெடுநாள் பிரச்சினை என்னவென்றால் பள்ளி இல்லை என்ற குறை இருக்கிறது. அதுபற்றி இங்கேகூட நான் ஏற்கெனவே பேசியிருக்கிறேன். எனவே, அந்த இடத்தில் ஓராசிரியர் பள்ளியையாவது நிறுவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல எனது தொகுதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இருந்துகொண்டிருப்பது எதுவென்றால் தி. மு. க. ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாள் முதல் மூடப்பட்டிருக்கின்ற ஒரு பாலம் இருக்கிறது. கோவளத்தையும், [illegible]யாக்கத்தையும் இணைக்கின்ற முக்கியமான பாலம் அது. [illegible]ப் பயணிகள் செல்வதற்கு வசதியாக இருக்கின்ற அந்தப்

பாலத்தை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கூட காண்பித்திருக்கிறேன். அதுபற்றி இங்கேயும் நான் ஏற்கெனவே பேசியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள்கூட அதுபற்றி ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அந்தப் பாலத்தை— கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் செலவாகும் என்று தொழில் நுட்ப அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள்— இந்த வருடம் இல்லாவிட்டாலும்கூட, அடுத்த வருடத்திலாவது அதனைச் சேர்த்து எங்களுடைய தொகுதிக்கு நெடுநாள் பிரச்சினையாக இருக்கின்ற அந்தப் பிரச்சினையைத் தீர்த்துத் தரும்படி இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுபோன்று, இன்றைய தினம் தமிழக அரசு மதுவிலக்கை அமுல்படுத்தி சாதனை படைத்துக்கொண்டு இருக்கிறது. மது விலக்கை அமுல்படுத்தி சாதனை படைத்துக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் ஒன்றை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சாராயம் காய்ச்சுபவர்களையும், விற்பவர்களையும் மிகவும் கடுமையாகத் தண்டிக்கின்ற வகையிலே ஒரு சட்டம் இருந்தாலொழிய முழுமையாக இதனைச் செயல்படுத்துவது கொஞ்சம் கடினமாக இருக்குமென்று நினைக்கிறேன். எனவே, அவர்களைக் கடுமையாகத் தண்டிக்கின்ற வகையில் ron-b .il .ble என்று சட்டம் போடுகின்ற வகையிலே சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் சாராயம் காய்ச்சுகின்றார்கள், விற்கின்றார்கள் என்று சொன்னால், எங்களிடம் பொதுமக்கள் வந்து முறையிடுகின்றபோது, நான் காவல் துறையினரிடத்தில் தொடர்பு கொள்கின்றபோது, அவர்கள் '' நான் பிடித்து விட்டேன் சார், ஆனால் அவர்கள் ஜாமீனில் வெளி வந்து விட்டார்கள் '' என்று சொல்கிறார்கள். காலையில் பிடிக்கப்படுகின்றவர்கள், மாலையில் வெளிவந்துவிடுகிறார்கள். உள்ளே போய்விட்டு, அன்றைக்கே வெளியே வந்து விடுவதால், அவர்களுக்குத் தைரியம் வந்துவிடுகிறது. அவர்களுக்கு அச்சம் இல்லாத நிலை இருக்கிறது. எனவே, அந்த நிலையைப் போக்க வேண்டுமென்று சொன்னால், கடுமையான சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் மிக அழகாக ஒன்று சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது மத்தியிலே ஒரு பலமான ஆட்சி, மாநிலத்திலே ஒரு தன்னாட்சி என்று மிக அழகாக வர்ணிக்கப் பட்டிருக்கிறது. மத்தியிலே இருக்கிற ஆட்சி, பாதுகாப்பு கொடுக்கின்ற ஒரு ஆட்சியாகவும், மாநிலத்திலே இருக்கின்ற ஆட்சி மக்களுடைய நல்வாழ்வுக்காக அமைகின்ற ஆட்சியாகவும் இருந்திடல் வேண்டுமென கூறப்பட்டிருக்கிறது. [illegible]



பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அப்படிப் பட்ட ஒரு நிலையை உருவாக்குகின்ற இந்த நிதிநிலை அறிக்கை யின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். ஆர். ஜெயராமன்.

திரு. எஸ். ஆர். ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது இந்தியத் திருநாடு ஆங்கிலேயர்களுடைய ஆக்கிரமிப்பின்கீழ் இருந்த நேரத்திலே, தமிழ் நாட்டிலே சேலம் மாவட்டம்தான் முதல் மாவட்டமாக அறிவிக் கப்பட்டது. சேலத்தை முதல் மாவட்டமாக அறிவித்து, 1791 மார்ச் மாதம் 17-ஆம் தேதி, அது தோன்றியது. அதற்குப் பிறகுதான் மற்ற மாவட்டங்கள் எல்லாம் நமது தமிழகத்திலே அமைக்கப்பட்டன. இம்மாதம் 17-ஆம் தேதியோடு சேலம் மாவட்டம் 200 ஆண்டுகளைப் பூர்த்தி செய்கின்றது. இந்த இரண்டு நூற்றாண்டுகளில் சேலம் மாவட்டத்தில் நிகழ்ந்த மாற் றங்களும், வளர்ச்சிகளும் பலவாறாக இருக்கின்றன. இந்த நீண்ட வரலாற்றை நினைவு கொள்வது நம்முடைய வருங்கால வளர்ச் சிக்குச் சாதகமாக அமையுமென்று நான் நினைக்கின்றேன். பல அறிஞர்கள், குறிப்பாக இராஜாஜி, விஜயராகவாச்சாரி போன்ற பல தலைவர்கள் பிறந்து சிறப்பித்த எங்களுடைய மாவட்டத்தின் 200-வது ஆண்டு விழாவை மாவட்டம் முழுவதும் ஓராண்டு பூராவும் சிறப்பாகக் கொண்டாட பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ் வினை, சேலம் மாவட்டத்தினுடைய 200-வது ஆண்டிலே தமிழகத்தினுடைய தலைமையைப் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்றுள்ள இந்த நல்ல சந்தர்ப்பத்திலே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் துவக்கி வைத்து, இந்த ஓராண்டும் சேலம் மாவட்டத்திலே பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடை பெறச் செய்ய வேண்டுமென்று என்னுடைய சேலம் மாவட்டத் தில் இருக்கக்கூடிய அத்தனை சட்டப் பேரவை உறுப்பினர்கள் சார்பாகவும், என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்களுடைய சார்பாகவும், என்னுடைய அரசியல் ஆசான் மாண்புமிகு அமைச்சர் திரு. குமாரமங்கலம் அவர்களுடைய சார் பாகவும் நான் வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய கடந்த பட்ஜெட் உரையிலே நெச வாளர்களுக்காகப் பல கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். அதன் பலனாக கடந்த பட்ஜெட் கூட்டத் திலே நமது தமிழகத்திலே இருக்கக்கூடிய 75 ஆயிரம் ஏழை

நெசவாளர்களின் தறிகளை விசைத் தறிகளாக மாற்றுவது என்ற நிலையை வரவேற்று, அந்த 75,000 விசைத் தறியாளர்களுக்கும் நான் முன்பே குறிப்பிட்டதுபோல, ஓய்வூதியத்தைத் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கொண்டு என்னுடைய மாவட்டத்திலே இந்தத் தொழிலிலே இருக்கக்கூடிய ஏழை நெசவாளர்களுடைய வாழ்வு உயர வேண்டுமென்பதற்காக அங்கே ஒரு ஏற்றுமதி காம்ப்ளெக்ஸ் உருவாக்கப்படவேண்டுமென்று கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரிலே சொல்லி இருக்கிறேன். நம்முடைய கைத்தறித் துறை அமைச்சரவர்கள் இந்த ஆண்டிலே அங்கே ஏற்றுமதி காம்ப்ளெக்ஸை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

பிற்பகல் 12-20.

அடுத்தபடியாக சென்ற பட்ஜெட் கூட்டத்திலே, உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலே என்னுடைய மாவட்டத்திலே கிராமங்களிலே கூட நல்ல ஒரு நிலைமையில் சாக்கடை வசதியும், ரோடு வசதிகளும் இருப்பதாகவும், ஆனால் சேலம் நகரில் பெருவாரியான ஜனத்தொகை இருக்கக் கூடிய அந்த நகரத்திலே சாக்கடை வசதிகளும், ரோடு வசதிகளும் இல்லாத ஒரு நிலைமை இருப்பதாகவும் சொன்னேன். இந்த நிதி ஆண்டிற்குள்ளாவது அந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு இன்று வரை எந்த விதமான மாற்றமும் இல்லாத சூழ்நிலை இருக்கிறபடியால், அந்த நிலைமைகளை மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒரு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

<u>டாக்டர் எஸ். சுந்தரராஜ்</u>: தெளிந்த அறிவுடனும், எப்போதும் விழிப்புடனும் இருந்து துணிந்து செயல்படும் தமிழக முதல்வர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையில் மாண்புமிகு நிதியமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்கள் கொண்டு வந்த வரவு செலவுத் திட்டத்தின் மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு முதலில் நன்றி கூறி என்னுடைய உரையை இந்த மாமன்றத்தில் வைக்கிறேன்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டி, மாநிலத்தில் அமைதி நிலவுவதற்கும், விரைந்து பொருளாதார வளர்ச்சி அடைய தமிழகம் இந்தியாவின் செல்வச் செழிப்பில் முதல்



மாநிலமாக அமைவதற்கும் துணிவுடன் செயல்படுகின்ற புரட்சித் தலைவி அவர்களின் நிதியமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்கள் கொண்டு வந்த வரவு செலவுத் திட்டத்தை நான் வரவேற்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஏழை, எளிய வசதி வாய்ப்பற்ற மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர புரட்சித் தலைவி அவர்களின் அரசு அந்த ஏழை எளிய மக்களுக்கு உணவு, உடை, உறைவிடம் கொடுக்க இந்த வரவு செலவுத் திட்டத்தில் உறுதியளித்து விரிவான உரையாக நிகழ்த்தப்பட்டிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது.

கைக்குழந்தைகள், தாய்மார்கள், ஆதரவற்ற முதியோர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு இந்த அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி இருக்கிறது. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவுக்குப் பொது விநியோக முறையில் அரிசி மிகக் குறைந்த விலையில் விற்கப்படுவது தமிழ்நாட்டில்தான். லெவியை நிறுத்தி வைத்து அரிசி விலையைக் குறைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் பாராட்டுக்குரியன. கடுமையான நிதிப் பற்றாக்குறை இருந்த போதிலும், கூடுதலான நிதி ஆதாரங்களைத் திரட்டி 1992-93வது ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டை ரூ. 1,600 கோடியைக் குறைக்காமல், தமிழகத்தை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் சென்று இன்று கடுமையான நிதிப் பற்றாக்குறை காலக் கட்டத்தில் மத்திய அரசிடம் வாதாடி 1,751 கோடி ரூபாயைப் பெற்று வந்த தமிழக முதல்வர் அவர்களைத் தமிழக மக்கள் ஒட்டுமொத்தமாகப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல், சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து, தீய சக்திகளுக்கு எதிரான தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு காவல் துறையை நவீனப்படுத்தியதோடு, அந்தக் காவல் துறைக்கு மட்டுமல்லாது, காவலர்களுக்கும் வீட்டு வசதி வாரியம் புதுப்பிக்கப்பட்டு, 1,000 குடியிருப்புகள் கட்டுவதற்கு உத்தரவிட்ட தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் உழைக்காமலேயே முன்னேற வேண்டுமென்று எண்ணுகிற இந்தக் காலத்தில், உற்பத்தியைப் பெருக்க வேண்டும். வேளாண்மைக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து, கரிசல் நிலங்களிலும் பயிரிட்டு, திட்டத்தட்ட 1,25,000 ஏக்கரில் பயிரிட்டு, வேளாண்மையைப் பெருக்குவதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும், நாவலர் அவர்கள் நல்ல திட்டங்களைத் தீட்டி உள்ளார்கள். தரமான விதைகளைக் கொடுப்பதன் மூலமும் புதிய நவீன தொழில் நுட்ப உத்திகளின் மூலமும் விவசாயத்தைப் பெருக்குவதற்கும் முன்னுரிமை கொடுத்திருக்கிறார்கள்.

காட்டு வளத்தைப் பொறுத்தவரை, மண்ணை நம்பித்தான்
மரம் இருக்கிறது. ஆகவே அந்த மரங்கள் அதிகமாக இருந்
தால்தான் நாட்டிலே அதிகமாக மழை பெய்யும் என்று,
மரங்களை அதிகமாகப் பயிரிடவும், காட்டுவளத்தையெல்லாம்
பெருக்கவும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். கால்
நடையைப் பொறுத்தவரையில் வருடந்தோறும் 10 மருந்த
கங்கள்தான் ஆரம்பிப்பார்கள். ஆனால் 1992–93-ல் வரவு–
செலவுத் திட்டத்தில், கிட்டத்தட்ட 400 கால்நடை மருந்
தகங்கள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டு இருப்பது மிகவும்
பாராட்டுக்குரிய திட்டமாகும்.

பிற்பகல் 12–25

கல்வியைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு அரசும் செலவு
அதிகமாகச் செய்திருந்தாலும், இவ்வாண்டு ரூ. 1,518 கோடியை
இந்த அரசு ஒதுக்கிச் செலவு செய்து கொண்டிருக்கிறது.
ஆனால் ஆசிரியர்கள், மாணவர்களை அரசியலுக்கு அப்பால்
இழுத்துச் செல்வதற்கு முன்வர வேண்டும் என்ற என்னுடைய
கருத்தை இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் அரியநந்தல், குளத்தூர் என்ற
இரு ஊர்களில் உயர்நிலைப் பள்ளிக்காக ரூ. 60,000–ல்
பள்ளிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, இன்னும்
தொடங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே என்னுடைய தொகுதி
மக்களின் சார்பில் அரியநந்தல், குளத்தூர் ஆகிய ஊர்களில்
உயர்நிலைப் பள்ளிகளை ஆரம்பிப்பதற்கு அரசு முன் வர
வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்
கிறேன்.

சுகாதாரத்தைப் பொறுத்தமட்டில் அனைவருக்கும் நல்
வாழ்வு அளிப்பதற்கான மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்
களது மருத்துவ நலத் திட்டம் மூலம் மருத்துவர்களும், மக்களும்
ஒன்றாகப் பழகுவதற்கு நல்ல வாய்ப்பாகும். அது மட்டுமல்லா
மல் கிராம மக்களுடைய வியாதிகளைக் கண்டுபிடிப்பதற்கு
ஒரு கருவியாக உள்ள இந்த நல்ல திட்டத்தை இந்திய துணைக்
கண்டத்திலே இருக்கின்ற அத்தனை பேரும் பாராட்டுகிறார்
கள்.

என்னுடைய பரமக்குடி தொகுதி இராமநாதபுரம் மாவட்
டத்திலேயே பெரிய நகரமாக உள்ளது. அங்கே கிட்டத்தட்ட
75,000 மக்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் 24 படுக்கை
கள் வசதிதான் இருக்கிறது அதிலும் 'இ ஸ்பெஷலிஸ்ட்'
'ஈ.என்.டி. ஸ்பெஷலிஸ்ட்', மற்றும் 'இன்டென்சிவ் கரோனரி
கேர் யூனிட்' போன்ற பிரிவுகள் இன்னும் ஆரம்பிக்கப்படாமல்



இருக்கின்றன. ஆகவே ஜனத்தொகைக்கேற்ப
அனைத்து வசதிகளும் செய்வதற்கு அரசு உரிய நட
வடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே
நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கு, குறிப்பாக ஆதி
திராவிட மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கு அரசு முன்னுரிமை
கொடுத்து வருகிறது. என்னுடைய இராமநாதபுரம் மாவட்டத்
தில் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் இருந்தாலும்கூட இன்னும்
குடிநீருக்குக்கூட நாங்கள் மற்ற மாவட்டத்தைதத்தான் நம்பி
இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே மழைக் காலங்களில்
Rain Harvesting Scheme என்ற ஒரு திட்டத்திற்கு அரசு முக்கியத்து
வம் கொடுத்து இராமநாதபுரம் மாவட்டத்தில், மழை பெய்கின்ற
காலங்களில் அந்த மழைத் தண்ணீரைத் தேக்கி வைத்து, குடி
நீருக்குப் பயன்படுத்துகிற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்த
வேண்டும். இந்தத் திட்டம் மேற்கு ஆஸ்திரேலியாவில் மிகவும்
பிரபலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்ற கருத்தை
இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அரசுக்குத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

வைகை அணை ஒன்றுதான், கிட்டத்தட்ட 3 இலட்சம்
மக்கள் கொண்ட எங்கள் பகுதிக்கே குடிநீர் வழங்குகிறது.
ஆனால் வைகையில் அணையைக் கட்டியதற்குப் பிறகு வைகைக்கு
நீர்வரத்து குறைந்து விட்டது. கங்கை-காவிரி போன்ற நதி
களை இணைப்பது மட்டுமல்லாமல், மகாநதி, கிருஷ்ணா நதி
போன்றவற்றையும் காவிரியோடு இணைக்கும் திட்டத்தை
மத்திய அரசு செயல்படுத்தவேண்டும். அப்படி இணைக்கும்போது
காவிரியில் உபரியாக வருகின்ற நீரை வைகை அணையோடு
இணைக்கவேண்டும். அது மட்டுமல்லாமல் மேற்கு தொடர்ச்சி
மலையில் இருந்து ஓடி கடலில் கலக்கும் பம்பையாறு, அச்சன்
கோவில் ஆறு ஆகிய ஆறுகளின் நீரை வைகை ஆற்றோடு
இணைத்து நிரந்தர வறட்சிப் பகுதியாக உள்ள இராமநாதபுரம்
மாவட்டத்திற்குக் குடிநீர் கிடைக்க வசதி செய்து தர வேண்டும்
என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர்
அவர்கள், தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக,
தொழில் நிறைந்த பகுதியாக ஆக்க வேண்டும் என்று தொழில்
அதிபர்களை வரவழைத்துப் பேசி நடவடிக்கையை எடுத்து வரு
கிறார்கள். என்னுடைய தொகுதிக்கு ரூ. 6 கோடி செலவில்
SIPCO's second phase-க்கு அனுமதி வழங்கியதற்காக மாண்புமிகு
முதல்வர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் என்னுடைய
தொகுதியின் மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்

கிறேன். மூடிக் கிடந்த ஸ்டாண்டர்ட் மோட்டார் மற்றும் கே. சி. பி. லிமிடெட் ஆகிய கம்பெனிகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

அது மட்டுமல்லாமல் கிராம மக்களுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்றும் கிராம மக்களுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து கிராம மக்களுக்குக் குடிநீர் மற்றும் சாலைகள், பள்ளிக்கூடங்கள், சத்துணவுக்கூடங்கள் ஆகியவைகள் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காக ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்று பார்க்காமல் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் கொடுத்த புரட்சித் தலைவியைத்தமிழக மக்கள் மிகவும் மனதாரப் பாராட்டுகிறார்கள். நாங்கள் எல்லாம் முதலில் எதிர்க் கட்சியாக இருக்கிறபோது, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பார்த்து எங்கள் தொகுதிகள் புறக்கணிக்கப்பட்டன. இன்று அந்த நிலை மாறி தமிழகத்திலுள்ள மக்களின் நலனுக்காகப்பாடுபடுகிற ஒரு நல்ல முதல்வரை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை தமிழக மக்கள் மிகவும் பாராட்டுகிறார்கள். சாலைகளைப் பொறுத்த மட்டில் எப்போதும் இல்லாத அளவிற்கு, கடந்த ஆண்டு 200 கோடி ரூபாய் என்று இருந்ததை தமிழக முதல்வர் அவர்கள் இன்று 317 கோடி ரூபாய் என்று உயர்த்தி இருக்கிறார்கள். என்னுடைய பரமக்குடி தொகுதிக்கு கடந்த 20 வருடங்களாகக் கேட்டும் கிடைக்காத ஒரு பாலத்திற்கு, அதாவது எமனேஸ்வரம்—பரமக்குடியை இணைக்கும் பாலத்திற்கு கிட்டத்தட்ட ரூ. 61 இலட்சம் இவ்வாண்டு தமிழக முதல்வர் அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள். அதற்காக தமிழக முதல்வர் அவர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற்பகல் 12-30.

வீட்டுவசதியைப் பொறுத்தமட்டில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கும், அதுவும் வீடுகள் எல்லாம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற திட்டத்தையும் நான் இந்தச் சமயத்தில் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

ஒரு இலட்சம் மகளிருக்குச் சுயவேலை வாய்ப்பு மூலம் வேலை கொடுத்து, மகளிருக்கு 30 விழுக்காடு எல்லாத் துறைகளிலும் கொடுக்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்த தமிழக முதல்வர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

ஆதி திராவிட மக்களைப் பொறுத்தமட்டில் 10 அம்ச திட்டத்தின் மூலம் அவர்களை அதிகம் முன்னேற்றுவதற்காக தமிழக முதல்வர் அவர்கள் திட்டமிட்டு இருக்கிறார்கள். தமிழகத்திலுள்ள அனைத்துத் தொகுதிகளிலும் ஆதிதிராவிட மாணவர்



களுக்குக் கிட்டத்தட்ட 30 விடுதிகள் கட்டுவதற்கும், அதில்
அந்த மாணவர்களின் அறிவைப் பெருக்குவதற்காக நூலகம்
அமைத்துத் தந்த தமிழக முதல்வர் அவர்களை ஆதி திராவிட
மக்களின் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

என்னுடைய தொகுதியில் 20-11-1984-ல் மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்கள் 28 இலட்சம் அனுமதி அளித்தும்
கூட, இன்னும் அந்த ஆதி திராவிட மாணவர் விடுதி கட்டப்
படாமலே இருக்கின்றது. அந்தப் பிரச்சினை ஹைகோர்ட்டுக்
குச் சென்று ஸ்டே வாங்கப்பட்டதன் காரணமாக இன்னும் அந்த
விடுதி கட்டப்படாமல் இருக்கிற சூழ்நிலையை இந்தச் சமயத்தில்
நினைவுபடுத்த விரும்புகிறேன். 7 அல்லது 8 ஆண்டுகள் ஆகியும்
கூட அந்த வழக்கு இன்னும் நிலுவையிலேயே இருக்கின்றது. அது
இன்னும் ட்ரையலுக்குக் கூட வரவில்லை. ஆகவே, இதில்
தமிழக அரசு சம்பந்தப்பட்ட துறையை அணுகி அந்த விடுதியை
விரைவில் கட்டுவதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதைக் கட்டித்
தர வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 13 விடுதிகளையும், நூலகத்
தையும் கட்டும் திட்டத்தையும், 5 ஆயிரம் வீட்டுமனைகள்
கட்டும் திட்டத்தையும் இந்தச் சமயத்தில் நான் பாராட்டக்
கடமைப்பட்டு இருக்கின்றேன்.

முதியோர், விதவைகள், ஆதரவற்றோர், உடல் ஊனமுற்
றோருக்கு ஓய்வு ஊதியம் 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாக
மாற்றி அமைத்ததற்கு தமிழக முதல்வர் அவர்களை இந்தச்
சமயத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.
(மணி அடிக்கப்பெற்றது).

கருவுற்ற தாய்மார்களுக்கு கிட்டத்தட்ட 200 ரூபாயிலிருந்து
300 ரூபாயாக உயர்த்திக் கொடுத்த தமிழக முதல்வர் அவர்களை
நான் இந்தச் சமயத்தில் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நிர்வாக நலன்களுக்காக குறைகளைக் கேட்டு, அந்தக் குறை
களை உடனுக்குடன் சீர்செய்கின்ற தமிழக அரசையும் தமிழக
முதல்வர் அவர்களையும் நான் இந்தச் சமயத்தில் பாராட்டக்
கடமைப்பட்டு இருக்கின்றேன்.

நிதித் தட்டுப்பாடு அதிகமாக இருக்கின்ற காலத்தில்கூட
இந்த நிதிநிலை அறிக்கையில் மளிகைப் பொருட்களுக்கும், பால்
பொருட்களுக்கும், சேமியா மற்றும் சாக்குப் பைகள் போன்ற
பொருட்களுக்கும் 8 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக விற்
பனை வரியைக் குறைத்து இருப்பதை நான் பாராட்டக் கடமைப்
பட்டு இருக்கின்றேன்.

குங்குமப்பொடி மற்றும் கண் மைக்கு 8 விழுக்காடிலிருந்து வரியே இல்லை என்ற அளவுக்கு வரி நீக்கம் செய்து இருப்பதை இந்தச் சமயத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

டிராக்டருக்கு நுழைவு வரி 16 விழுக்காடுவிருந்து 7 விழுக்காடாகவும். டாக்ஸி போன்றவற்றுக்கு 15 விழுக்காடிலிருந்து 5 விழுக்காடாகவும் வரியைக் குறைத்து இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

ஒவ்வொரு உள்ளாட்சியும் உண்மையிலேயே அவர்கள் சம்பளம் கொடுப்பதற்குக்கூட கஷ்டப்படுகின்ற இந்தச் சமயத்தில், உள்ளாட்சித் துறை வரியில் 50 சதவீதம் மானியமாகக் கொடுத்ததை 75 சதவீதமாக உயர்த்தி இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன். அதே சமயத்தில் அங்கே ஊரில் வருவாய்த் துறை மூலம் இயங்கி வருகிற காட்டுக் கருவேல், வேலிக் கருவேல் மரங்களின் ஒட்டுமொத்த வருமானத்தை அந்த உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுத்து அந்த உள்ளாட்சி மன்றங்களின் வருவாயைப் பெருக்குவதற்கு அரசு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கின்றேன். (மணி அடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். எம். துரை.

*திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"விழித்திரு, தெளிந்திரு, துணிந்திடு" என்ற வள்ளுவப் பெருந்தகையின் பொன்மொழிக்கு இலக்காகத் திகழும் எங்களது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, உங்களை வணங்கி 1992-93 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையைப்பற்றி ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தில் தெரிவிக்கின்றேன்.

தங்கத் தாம்பாளத்தில் ஏராளமான வகை இனிப்பு பொருட்களை வைத்து, அதில் எது நன்றாக, சுவையாக இருக்கிறது என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? எல்லாமே நன்றாகத்தான் இருக்கிறது ; ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான சுவையோடுதான் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அடுத்தவர் பாராட்ட வேண்டுமே என்பதற்காகத் தயாரிக்கப்பட்ட பட்ஜெட் அல்ல இது. ஏழை எளிய மக்களின் மேம்பாட்டுக்காகவும், நல்வாழ்வுக்காகவும் போடப்பட்ட பட்ஜெட் இது. இதை நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தயாரித்து இருக்கின்றார்கள்.



ஔவை கிழவி, ஒரு மன்னனை 'வரப்பு உயர' என்று ஒரே சொல்லில் பாராட்டினார். அதன் பொருள் வரப்பு உயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும். குடி உயர கோன் உயரும் என்பதாகும். எந்த ஒரு நாடும் வேளாண்மையில் செழித்திருக்க வேண்டும், இல்லையெனில் நாடு பாலைவனமாகி விடும். அதை மனதில் வைத்து இந்த அரசு வேளாண்மையைப் பெருக்குவதற்காக சிறப்பு பாசனத் திட்டம், ஏரிகளை நவீனமயமாக்கும் திட்டம், புதிய நீர்த் தேக்கங்கள் கட்டும் திட்டம், தேசிய நீர் மேலாண்மைத் திட்டம் போன்ற அநேக திட்டங்களைத் தீட்டி அவற்றை நிறைவேற்றிட சுமார் 75 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்துள்ளது. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் 64,773 ஏக்கர் நிலங்கள் சாகுபடி வசதியைப் பெறும். சாகுபடி உயர்ந்தால் குடிபடைகள் உயரும். குடிபடைகள் உயர்ந்தால் இந்த ஆட்சி உயரும் அல்லவா? உலக அரங்கில் நமது தமிழகத்தின் பெருமையை உயர்த்துவதற்காக தொடக்கக் கல்வியின் தரத்தில் உயர்த்தும் திட்டம், பள்ளிக் கல்வித் திட்டம், பொதுக் கல்வித் திட்டம், தொழில் நுட்பக் கல்வித் திட்டம், மாநில பள்ளிசாரா கல்வித் திட்டம் போன்றவற்றையும், ஓராசிரியர் பள்ளிகளில் போதனையின் தரத்தை உயர்த்த மூன்று ஆசிரியர்களை நியமனம் செய்வது போன்ற நல்ல பல திட்டங்களுக்காக சுமார் 1,518 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது ஒரு மிகப் பெரிய சான்றாகும், கல்வி வளர்ச்சிக்கு இவ்வளவு செலவு செய்தாலும், குழந்தைகள் பசியோடும் பட்டினியோடும் இருந்தால் கல்விக்குச் செலவிடும் பணம் வீணாகிவிடும் என்பதற்காக அரசு, டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்காக ரூ. 260 கோடி ஒதுக்கீடு செய்து இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி வலுப்படுத்தி உள்ளது.

பிற்பகல் 12–35

'யாம் அறிந்த புலவர்களில் கம்பனைப் போல், வள்ளுவனைப் போல், இளங்கோவைப் போல், கண்டதில்லை' என்று பாரதி பெரிய கவிஞனாக இருந்தும் கம்பனை உயர்த்திப் பாடினார். அந்தக் கவிச்சக்கரவர்த்தி எழுதிய இராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புகழ் கிரீடத்தில் இன்னொரு வைரத்தை பதித்தது போலாகும். அதேபோல சிலப்பதிகாரத்தையும் மொழி பெயர்த்து மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் புகழ் கிரீடத்தில் இன்னொரு வைரத்தையும் பதிக்க நான் ஆசைப்படுகிறேன்.

நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடவுளை அறிந்தவர்கள். வியப்பாக இருக்கிறதா ? உண்மை. நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கடவுளை அறிந்தவர்.

[திரு. எஸ். எம். துரை] [1992 மார்ச் 9

எப்படி என்றால் நாமக்கால் கவிஞர் அவர்கள் கடவுளை அறிந்த வர்கள் யார் என்பதற்கு இலக்கணமே கூறியிருக்கிறார்கள். '' அனைவரையும் மதித்திடத் தகுந்தவர், பசியினால் வாடிய எவரையும் கண்டு பட்டினி தமக்கென பரிதவித்தார்த்து விசையாய் முடிந்ததை விழிப்புடன் கொடுப்பார்—வின் உபச்சாரம் விரும்புதல் விடுப்பார், நோயால் வாடிய எவரையும் கண்டு நோன்பு எனச் செய்வார், எல்லாத் தொண்டும் தாயாம்.'' எனவே தன் சுகம் அனைத்தும் தள்ளி வைத்தருகினில் தாம் இருந்து உதவும் பண்பினைக் கொண்டவர் எவரோ அவரே கடவுளை அறிந்தவர் ஆவர். மேலும் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள் மக்கள் ஆரோக்கிய மாக வாழ்ந்தால் அந்த நாடு பலம் பொருந்திய நாடு என்று பொருள்படும். அதை மனதில் கொண்டு மாண்புமிகு டாக்டர் முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசு இந்திய நாட்டிலேயேவேறு எங்கும் நடத்தப்படாத மிகப் பெரிய நல்வாழ்வுத் திட்டமான புரட்சித் தலைவி இலவச மருத்துவ பரிசோதனை திட்டத்தில் 10,000-க்கு மேலாக முகாம்கள் நடத்தி இலட்சக்கணக்கான ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் திட்டம் நடைபெறுவதைக் காணும் நாளும் எனது தொகுதி மக்களும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையும். அவரது அரசையும் பல்லாண்டு வாழ வேண்டும். ஆள வேண்டும் என வாழ்த்து கிறோம்.

இந்த பட்ஜெட்டிலே கூறியுள்ள அனைத்து திட்டங்களையும் மனதார வரவேற்கிறோம். எங்களது இதய தெய்வத்தின் பெருமைகளைச் சொல்லிவிட்டு. அவர்களின் பொற் பாதங்களில் எனது தொகுதியில் உள்ள கோரிக்கைகளை வைக்கிறேன். கருணை யோடு அவற்றை நிறைவேற்றித் தந்திட வேண்டுகிறேன்.

கைத்தறித் துறையை மேம்படுத்த அரசு 5,000 விசைத் தறிகள் அமைக்க இருப்பதை மனதார வாழ்த்துகிறேன். மேலும் கைத்தறி தொழிலைக் கொண்ட ஏழை நெசவாளர்கள் கைத் தறியை நம்பியே வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் விசைத் தறியைச் சொந்தமாக அமைக்க வழியில்லாமல் வாடுகிறார்கள். இவர்கள் வாழ்வு வளம் பெற நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங் கள் மூலம் மறுவாழ்வுத் திட்டம் ஏற்படுத்தி தனித்த ஏழை நெசவாளர்களுக்கு இலவசமாகவே விசைத்தறிகளை வழங்கும் படியும், குறிப்பாக எனது சின்னாளப்பட்டியில் ஆயிரக்கணக் கான நெசவாளர்கள் குடும்பங்கள் வாழ்வு வளம் பெற உதவும் படியும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பெரும் பகுதி விவசாயத்தை நம்பி வாழும் ஏழை விவசாயிகள் அதிகமாக வாழ் கிறார்கள். ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்திலுள்ள விவசாய



1992 மார்ச் 9] [திரு. எஸ். எம். துரை]

நிலங்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேல் மழையை நம்பி விவசாயம் செய்யும் நிலை உள்ளது. இந்த ஒன்றியத்தில் பாசனத்திற்கும், குடிப்பதற்கும் தண்ணீர் இல்லாமல் வறட்சியாகிக் கொண்டே வருகிறது. வட பகுதியில் உள்ள புதுச்சத்திரம், பலக்கனூத்து, கே. புதுக் கோட்டை, தொத்தப்புள்ளி, சில்லுவார்பட்டி, முருநெல்லிக் கோட்டை, குருநாத நாயக்கனூர், ஜி. நடுப்பட்டி போன்ற ஊராட்சிகளில், குடிப்பதற்கே தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் 200 முதல் 300 அடி ஆழம் வரை அடிக்குழாய்கள் அமைத்தாலும், குடிநீர் கிடைப்பதில்லை. மேலும் இந்த ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஏழை விவசாயிகள் தங்களது நிலத்தில் வேளாண்மை செய்ய முடியாமல் வேறு பகுதிகக்குக் கூலி வேலை செய்யச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

பிற்பகல் 12–40

இதே போன்று, ஆத்தூர் ஒன்றியத்தில் உள்ள ஆத்தூர், சித்தையன்கோட்டை, அய்யம்பாளையம், முதலிய பகுதிகளைக் கருத்தில் கொண்டு, மற்ற பகுதிகளும், செழிப்பாக இருப்பதாக கருதப்படுகிறது. இந்த ஒன்றியத்தில் விவசாயத்திற்குப் பாசன வசதி பெற அருகில் உள்ள சிறுமலையை நம்பி, ஒரு பகுதியில் உள்ள 20-க்கும் மேற்பட்ட குளங்கள் மூலம் பாசனக் கிணறுகள் தண்ணீர் வசதி பெற்று வந்தது. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக சிறுமலை வறண்ட மலை யாகிவிட்டதால், இப்பகுதியில் உள்ள அம்பாத்துரை, தொப்பம்பட்டி, காந்தி கிராமம், சின்னாளம்பட்டி, செட்டிப் பட்டி, கலிக்கம்பட்டி, முன்னிலைக்கோட்டை, ஆலமரத்துப் பட்டி, பஞ்சம்பட்டி, பிள்ளையார்நத்தம், போன்ற ஊராட்சிப் பகுதிகளில் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. மேலும் பாளையங்கோட்டை, வீரக்கல், பாரைப் பட்டி, சீவல்கரடு ஊராட்சிகளில் இதே நிலை உள்ளது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு, ஆத்தூர் சட்டமன்ற தொகுதியை வறட்சிப் பகுதியாகவும், பின்தங்கிய பகுதியாக வும் அறிவிக்கும்படியாக வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் காமராஜர் நீர்த் தேக்கத்திலிருந்து திண்டுக் கல்லுக்கும், மற்றும் எனது தொகுதியில் உள்ள சின்னாளப் பட்டி, விக்கம்பட்டி, பிள்ளையார்நத்தம், பித்தளைப்பட்டி, ஆகிய ஊர்களுக்கும் ஓரளவு குடிநீர் சப்ளை செய்யப்படு கிறது. சின்னாளம்பட்டியில் சுமார் 40 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள். இந்த நீர்த்தேக்கத்திலிருந்து கிடைக்கும் குடிநீர் ஐந்து நாட்களுக்கு ஒரு முறைதான் கிடைக்கிறது. தற்போது காமராஜர் நீர்த்தேக்கம், தூர் எடுக்காமல் மேடாகி

விட்டதால், போதுமான தண்ணீர் தேங்கும் வாய்ப்பு இல்லை. ஆகவே, இந்த நீர்த்தேக்கத்தைத் தூர் எடுத்து, அதிகமாக தண்ணீர் தேங்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்படியும், சின்னாளப்பட்டிக்கு புதிதாக குடிநீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படியும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் ஒன்றியத்தில் உள்ள காந்தி கிராமத்திற்கு கிழக்கே உள்ள சிறுமலையில் விழும் மழைநீரை நம்பி, இப்பகுதியில் உள்ள சுமார் 20 பாசனக் குளங்கள், சமீப காலமாக சிறுமலை வறண்டு விட்டதால், மழை நீர் வராமல் வறண்டுவிட்டது. இதனால் இப்பகுதியில் உள்ள சுமார் ஐந்து ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனவசதி கிடைக்காமல் விவசாயம் செய்ய முடியாத நிலை தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது. இப்பகுதிகள் பாசன வசதிகள் பெற மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து வரும் மழை நீர் ஆத்தூருக்கு அருகில் உள்ள கருங்குளம், நடுக்குளம், புல்லுவெட்டி கண்மாய் ஆகியவை நிரம்பி உபரி நீர் குடகனாற்றில் கலக்கிறது. 1979-ஆம் ஆண்டில் ஒரு ஆய்வு செய்யப்பட்டு, மேற்கூறிய கண்மாயில் இருந்து வெளியேறும் உபரி நீரை நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பச்சை மலையான் கோட்டை வழியாக ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கதிர்பட்டி, அம்பாதுரை, சின்னாளபட்டி வழியாக புதிய கால்வாய் அமைத்து குடகனாற்றில் கலக்க திட்டம் இடப்பட்டது. பிறகு கைவிடப்பட்டது. இத்திட்டத்தை மீண்டும் ஆய்வு செய்து இந்தப் புதிய வாய்க்கால் மூலமாக வரும் தண்ணீர் சுமார் 10 கிராமப் பகுதியில் உள்ள 12-க்கும் மேற்பட்ட குளங்கள் மூலம் பாசன வசதியும், விவசாயக் கிணறுகளும், பொது மக்கள் குடிநீருக்கும் பெரிதும் பயன்பெறும் வாய்ப்பு உள்ளது. ஆகவே, இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தரும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கு தொடர்ச்சி மலையில் எனது தொகுதியில் உள்ள மணலூர், ஆடலூர், பன்றிமலை ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த 12 கிராமங்கள் உள்ளன. இங்கு மலைவாழ் மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் தினக்கூலியாக வேலை செய்து குடியிருக்கும் இடமின்றியும், அடிப்படை வசதியில்லாமலும் வாழ்கின்றார்கள். அவர்களுக்கும் இப்பகுதியில் உள்ள இதர மக்களுக்கும் மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தில் அடிப்படை வசதி ஏற்படுத்தித் தரும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் எம். மோசஸ்.

*டாக்டர் எம். மோசஸ் : மாண்புமிகு பேரவை உப தலைவர் அவர்களே, 1992—93-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் என் கருத்துக்களைக் கூற வாய்ப்புத் தந்த உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். டாக்டரானாலும் ஊசி போட்டுத்தான் ஆக வேண்டும், அதுமாதிரி நிதியமைச்சர் ஆனாலும், ஒரு பட்ஜெட்டை பிரசன்ட் பண்ணித்தான் ஆகவேண்டும். ஆனால் கெட்டிக்கார டாக்டர் என்றால், ஊசி போட்டால் வலிக்காது. டாக்டர் வலியே இல்லாமல் ஊசி போட்டார் என்று சொல்வார்கள். அதைப் போன்று, நமது மாண்புமிகு நிதியமைச்சர் ஒரு வலி இல்லாமல், ஒரு கஷ்டம் இல்லாமல், ஒரு அழகான பட்ஜெட்டை தந்திருக்கிறார்கள். அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

பப்ளிக் டிஸ்டிரிபியூசன் சிஸ்டத்தைப் பற்றி மதிப்பிற்குரிய சகோதரர் குமரி அனந்தன் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். சமுதாயத்திலே நலிந்தவர்களுக்கு அதைப் பட்டும் படாமலும் சொல்லிவிட்டார்கள். நான் பச்சையாகவே சொல்கிறேன். வறுமைக் கோடு என்று ஒரு எல்லையை வைத்திருக்கிறீர்கள். அதற்கு அடியில் இருப்பவர்களுக்கு 25 கிலோவோ அல்லது 30 கிலோவோ இருக்கிற அரிசியை எல்லாம் கொடுங்கள். அதற்கு மேலே உள்ளவர்களுக்கு அரிசி கொடுக்கவே கூடாது. அவர்கள் ஓப்பன் மார்க்கெட்டிலே வாங்கலாம். Public distributio: system is prim:rily meart to help the poor. ஆகவே, எல்லா ஊர்களிலும், இதை நாம் கடைப்பிடித்தால், நிச்சயமாக இது நம் தமிழ் நாட்டுக்கு ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கும் என்பதில் சிறிதேனும் சந்தேகம் இல்லை.

பிற்பகல் 12—45

ஏரிகளை நவீனப்படுத்தக் கூடிய திட்டத்தை அழகாகக் கொடுத்திருக்கிறீர்கள். எங்களுடைய குமரி மாவட்டத்திலே பல பெரிய குளங்கள் எல்லாம் இருக்கின்றன. அவை எல்லாம் ஆக்கிரமிக்கப்பட்டும், நிறைந்தும், இன்று மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஆழப்படுத்தி, கரைகளை பலப்படுத்தினோமானால், நிச்சயமாக, நிலத்தடி நீர் உயரும். அதுமட்டுமல்ல, விவசாயத்திற்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

காட்டு வளம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். குடும்பக்
கட்டுப்பாடு செய்து கொண்ட அரசு ஊழியர்களுக்கு நாம்
சலுகை வழங்குவதுபோல, அரசு ஊழியர்களானாலும் சரி,
மற்றவர்களானாலும் சரி, ஒரு குறிப்பிட்ட அளவு 50 மரங்
களோ அல்லது 25 மரங்களோ நட்டு, பத்து ஆண்டுகளுக்கு
அவற்றைப் பராமரித்து தருவார்களானால், அவர்களுக்கு
நிச்சயமாக அரசாங்கம் சலுகை வழங்கி, அவர்களை ஊக்கு
விப்போமானால், இந்தத் திட்டம் நல்ல வகையில் வெற்றி
பெறும் என்பதை நான் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

மீன் வளத்தைப் பற்றிச் சொல்கிற சமயத்திலே, எங்கள்
குமரி மாவட்டத்தைச் சுற்றி சில குறிப்பிட்ட மீன் ரகங்கள்
இல்லாமல் அழிந்து போகக் கூடிய நிலையில் இருக்கின்றன.
குறிப்பாக குதிப்பு மீன் என்றால் அது மிகவும் ருசியாக
இருக்கும். தாராளமாகக் கிடைத்துக் கொண்டிருந்தது.
இப்போது ஒரு மீன் கூட இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது.
அந்த மீன் உற்பத்தி ஏன் தடைபட்டு இருக்கிறது? கடலில்
என்ன காரணத்தினால் அந்த மீன் உற்பத்தி ஆகவில்லை
என்பதை ஆராயவேண்டுமென்று உங்களை மிகவும் பணிவோடு
வேண்டிக்கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். நாகர்
கோவில் நகராட்சியில் நாங்கள் பலமுறை சுக்குரவிட்டிருக்
கிறோம். எங்களுக்கு நிரந்தரமாக ஒரு நல்ல குடிநீர்த் திட்டத்
தைத் தாருங்கள் என்று சொல்லியிருக்கிறோம். அதை அதிக
செலவு இல்லாமல் செய்ய முடியும். நல்ல இடங்கள்
இருக்கின்றன. பழையாறு அதுல்கயில், புத்தேனேரி குளத்
திலே, அரந்தங்கோணம் குளத்திலே, சுசீந்திரம் குளத்திலே
நீங்கள் ஆழமான கிணறுகளை அமைப்பீர்களானால், அதி
லுள்ள தண்ணீரைக் கொண்டு, நாகர்கோவில் நகராட்சியை
நான்காகப் பிரித்து, நிரந்தரமாகத் தண்ணீரைக் கொடுக்க
முடியும். இப்போது ஜனவரி 28-ஆம் தேதி அணை அடைத்
தால் விட்டது. சானல்களிலே தண்ணீரே இல்லை. ஆறு
நாட்களுக்கு ஒரு முறைதான் நாகர்கோவில் நகரில் குடிநீர்
கிடைக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக்
கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நிலை மாற
வேண்டுமென்றால், நிச்சயமாக ... எங்களுக்கு அதிவிரைவில்
நிரந்தரமாக ஒரு குடிநீர்த் திட்டத்தை நீங்கள் தரவேண்டும்.

அடுத்து மின் சக்தி பற்றி சொல்கிற சமயத்தில் ஒரு
யூனிட் உற்பத்தி செய்வதற்கு ரூ. 1.67 ஆகிறது என்று
சொன்னார்கள். அதில் 40,000 குடிசைகளுக்கு இலவச மின்
சாரம் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே
சமயத்தில் எல்லா விவசாயிகளுக்கும் இதை நாம் இலவசமாகக்



கொடுப்பது என்றால் அது சரியல்ல. ஏழை விவசாயிகளுக்கு
5 ஹெச். பி. வரை இலவசமாகக் கொடுங்கள். அதற்குமேல்
10, 15 பம்பு செட்டுகள் வைத்திருப்பவர்களுக்குக் கொடுப்பதில்,
உங்களுக்கு சும்மா கிடைத்தால் நீங்களும் இலவசமாகக்
கொடுக்கலாம். ரூ. 1.67 செலவு செய்து ஒரு யூனிட்டு
உற்பத்தி செய்து அதை நீங்கள் சும்மா கொடுக்கிறோம்
என்று சொன்னால், அது ஏழைகளின் வயிற்றில் அடிப்பதற்குச்
சமமாகும். ஆகவே அந்த மாதிரி தவறுகளை நாம் செய்யவே
கூடாது என்று உங்களை நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஜே. வி. பி. திட்டப் பிரகாரம், சட்டப்படி அதில்
செய்யக் கூடிய வேலைகள் எல்லாம் டிபார்ட்மெண்ட் வழி
யாகத்தான் செய்ய வேண்டும். கான்ட்ராக்டர்களிடம்
கொடுக்கக் கூடாது. ஆனால் நடைமுறையில் நடப்பது
என்னவென்றால், அதையெல்லாம் கான்ட்ராக்டர்களிடம்
கொடுத்து விடுகிறார்கள். இப்போதெல்லாம் அவர்களுக்கு
பணம் வர வர, திமிர் அதிகமாகியிருக்கிறது. மக்கள் பிரதி
நிதிகளை மதிப்பதில்லை. நிச்சயமாக நீங்கள் அதற்கு
ஒரு வழிவகை செய்து தரவேண்டும். இந்த ஜே. வி. பி.
திட்ட ரோடு வேலைகளில் 10 கொடுத்தால், 2-வது செய்து
தரட்டும். நாங்கள் ஓட்டு கேட்க திரும்ப அந்த ஊர்களுக்குப்
போய்த்தான் தீர வேண்டும். அந்த ரோடுகளை குண்டும்
குழியுமாக அப்படியே வைத்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு
ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அதைச் சொன்
னால் செய்து தர மாட்டேன் என்கிறார்கள். அதற்கு நீங்கள்
ஒரு வழி செய்து தரவேண்டுமென்று உங்களை கேட்டுக் கொள்
கிறேன்.

அடிக்கடி கடன் வஜா செய்வதால் பாதிக்கப்படுவதாக
மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இப்போது கூட
என்.ஆர்.ஈ.பி. லோன் ஒன்று கொடுத்தார்கள். 5,000 ரூபாயி
லிருந்து 10,000 ரூபாய் வரை. அதை இப்போது நான் கூட
எழுதிக் கொடுப்பேன். எனக்கு தேர்தல் நேரத்தில் வேலை செய்
பவன் ஸ்டூடண்டாக இருப்பான். அதைப்பற்றிக் கவலை இல்லை
சொசைட்டியில் கொடுக்கிறார்கள். இந்த நிலையில் போனால்
கொஞ்ச நாட்களில் சொசைட்டிகள் எல்லாம் திவாலாகிப்
போய்விடும். அதை உடனடியாக நீங்கள் கண்காணிக்க
வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உள்ளாட்சி வரிகளை உயர்த்துவது பற்றிச் சொன்
னார்கள். நிச்சயமாகச் செய்ய வேண்டியதுதான். ஆனால்
அதைச் செய்யும் சமயத்தில் கொஞ்சம் கவனமாக இருக்க
வேண்டும். 1958, 1972-ல் உள்ள நிலைமைகள் தான் இந்த
வரி விதிப்பில் இன்னமும் இருக்கின்றன. என்று சொல்கி

றீர்கள். எங்கள் ஊர்களை எல்லாம் பார்த்தீர்கள் என்றால்.
1958-ல் போடப்பட்ட ரோடுகள் எல்லாம் அப்படியேதான்
இருக்கின்றன. அதற்குப் பிறகு ஒரு நாளும் பராமரிக்கப்பட்டது
கிடையாது. 1972-ல் போடப்பட்ட மின் விளக்காகத்தான் இருக்
கிறது. எந்த ஏரியாவும் தெரு விளக்குகளை முழுமையாகப்
பார்த்தது கிடையாது. 100 விளக்குகள் இருக்கக்கூடிய இடத்
தில் 25 தான் இருக்கின்றன. ரோடுகள் எல்லாம் பள்ளமாக
இருக்கின்றன. தெருக்களிலே இறங்கி நடக்கமுடியாது.

பிற்பகல் 12-50

சாக்கடைகள் எல்லாம் துர்நாற்றம் அடித்து நிறைந்து தண்
ணீர் ரோடுகளிலே ஓடுகிறது. அந்த நிலைமையிலே நீங்கள்
வரியை உயர்த்தினால் ஜனங்கள் அதை ஏற்றுக் கொள்
வார்களா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
வரியைக் கட்ட வேண்டியதுதான். இல்லை என்று சொல்ல
வில்லை. ஆனால் கட்டுவதற்கு முன்னால் ஒரு 6 மாதகாலம்
டைம் கொடுங்கள். அதற்கிடையில் இந்தப் பணிகளை நிச்சய
மாக செய்து கொடுத்தால்தான் அவர்களைத் திருப்திப் படுத்த
முடியுமே தவிர மற்றபடி திருப்தி படுத்த முடியாது என்பதைத்
தான் உங்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அரசிடமிருந்து நாகர்கோவில் முனிசிபாலிட்டிக்கு-
Municipality administration has requested the Government to sanction Rs. 86,99,826 towards the D.A. subsidy to Nagercoil Municipality. The Municipality owes the Government Rs. 20,24,387.

பிளீஸ், அந்தப் பணத்தை சீக்கிரம் கொடுங்கள்.
நாங்கள் என்ன போய் கேட்டாலும் முனிசிபாலிட்டியிலே என்ன
சொல்லுகிறார்கள் என்றால் பணம் இல்லை என்று சொல்லு
கிறார்கள். ரோடு தார் போட வேண்டும் என்று போய்க்
கேட்டால் கவர்ன்மெண்ட்டிலேயிருந்து பணத்தை வாங்கித்
தாருங்கள். நீங்கள் 6 பேர் எம்.எல்.ஏ. இருக்கிறீர்கள். ஒரு
எம்.பி. இருக்கிறார். நீங்கள் போங்கள் ஐயா, போய் பணத்தை
வாங்கித் தாருங்கள், நாங்கள் செய்து தருகிறோம் என்று
சொல்லுகிறார்கள். ஆகவே, அந்தப் பணத்தை நீங்கள்
உடனடியாக கொடுக்க வேண்டும் என்று உங்களைப் பணி
வோடு கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல முன்னால்
இருந்த முனிசிபாலிட்டியிலே எலக்டட் செட் அப் இருந்தது.
ஒரு குறிப்பிட்ட கட்சி இருந்தது. அதிலே 10, 20 பேரை
என்.எம்.ஆர். என்று போட்டு வைத்திருந்தார்கள். என்.எம்.
ஆர். என்றால் நான்-மஸ்டர் ரோல் என்பதில், அந்த ஆர்-க்கு
அர்த்தம் சொல்லத் தெரியவில்லை அவர்களுக்கு. வெறுமனே
என்.எம்.ஆர். என்று சொல்லுவார்கள். என். எம். ஆர்.



90 நாள் வேலை செய்வார்கள். ஒரு நாள் பிரித்து
என்றால் 90 நாள் வேலை செய்வார்கள். அப்படி அந்த
விடுவார்கள். திரும்பவும் சேர்த்துக்கொள்வார்கள். அப்படி அந்த
20 பேர்களையும் அவர்கள் பணம் லஞ்சம் வாங்கிக் கொண்டு
அங்கே அப்பாயின்ட் பண்ணியிருக்கிறார்கள். என்ன வேலை
என்றால்-டைப்பிஸ்ட்டாக இருக்கிறான், டிராப்ட்ஸ்மேனாக
இருக்கிறான், டிரைவராக இருக்கிறான். இப்படி பலபேர்
இருக்கிறார்கள். இப்போது நாங்கள் டிஸ்டிரிக்ட் டெவலப்
மெண்ட் கவுன்சிலிலே அதை ரெய்ஸ் பண்ணி எம்பிளாய்
மெண்ட் எக்ஸ்சேன்ஜ் வழியாகத்தான் எடுக்க வேண்டும்
என்று சொல்லி, ஆகவே நீங்கள் எம்பிளாய்மெண்ட்
எக்ஸ்சேன்ஜ் வழியாக எடுத்துக் கொண்டு 90 நாள் கொடுத்து
விட்டு, பிறகு ஒரு நாள் பிரித்து விட்டு அதே சம்பளத்தைக்
கொடுத்தால் போதும் என்று சொல்லி அந்த 20 பேரையும்
பிரித்து வெளியே விட்டிருக்கிறது. அப்படி வெளியிலே விட்ட
பிறகு முனிசிபாலிட்டியிடம் இருந்து அரசுக்கு எழுதி கேட்டிருப்ப
தாக சொல்லுகிறார்கள். எழுதி கேட்டிருப்பார்களோ
என்னவோ தெரியவில்லை. நாங்கள் எம்பிளாய்மெண்ட் எக்ஸ்
சேன்ஜிலேயிருந்து ஆள் எடுக்கலாமா அல்லது அதே
என்.எம்.ஆர். சிஸ்டத்தை கண்டினியூ பண்ணலாமா
என்று கேட்டதாகவும் அதற்கு இன்னும் அங்கேயிருந்து பதில்
வரவில்லை என்றும் சொல்லுகிறார்கள். தயவு செய்து அந்த
என்.எம்.ஆர். சிஸ்டம் வேண்டாம். ஆயிரக்கணக்கான படித்த
இளைஞர்கள் எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேன்ஜிலே பதிவு
பண்ணிக்கொண்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்
களை எடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 1987லே 92 துப்புரவுத் தொழிலாளர்களை
நாகர்கோவில் முனிசிபாலிட்டியிலே ஸ்டேன்ட்-பை வொர்க்
கர்ஸ்லாக எடுத்தார்கள். அந்த 92 பேரும் எம்பிளாய்
மெண்ட் எக்ஸ்சேன்ஜ் வழியாக எடுக்கப்பட்டவர்கள். அதை நாம்
கவனமாகக் கவனிக்க வேண்டும். அந்தச் சமயத்திலேயிருந்து
அவர்கள் எங்களை நிரந்தரமாக்குங்கள் என்று கேட்டும் இது
வரையில் நடக்கவில்லை. இப்போது நம்முடைய மாண்புமிகு
புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் ஆணை
பிறப்பித்திருக்கிறார்கள், அந்த 92 பேரையும் உடனே நிரந்
தரமாக்க வேண்டும் என்று இந்த ஆர்டர் வந்த பிறகு
அங்கே பார்த்ததிலே 47 பேர்கள்தான் இப்போது அதிலே
இருக்கிறார்கள். 92 பேர்களிலே 45 பேர்கள் அங்கே இல்லை.
ஆனால் அந்த 47 பேர்களையும் கூட நிரந்தரமாக்கவில்லை.
ஆக்காததற்குக் காரணம் என்னவென்றால்—நான் புறப்
படுகிற அன்றைக்குத்தான் அவர்கள் என்னை அணுகினார்கள்.
ஒரு மணி நேரத்திலே கிடைத்த தகவல் அது. நபர் ஒன்றுக்கு
5 ஆயிரம் ரூபாய் கொடுத்தால்தான் நிரந்தரம் ஆக்குவேன்
என்று சுகாதார ஆய்வாளர்கள் சொல்லுகிறார்களாம்.

அதிலே பாருங்கள், ஒரு ஆள் சொன்னால் பொய்யாக இருக்க லாம். இரண்டு பேர் சொன்னால் பொய்யாக இருக்கலாம். 27 பேர்களுடைய கையெழுத்து போட்டு ஒரு மனுவைக் கொடுத் திருக்கிறார்கள். எனக்கு கூட இரண்டுமணி நேரம் கிடைத்திருந் தால் அந்த 47 பேர்களுடைய கையெழுத்தும் வாங்கியிருப் பேன். ஆகவே அந்த நிலை எல்லாம் மாற வேண்டும். அந்த 92 பேர்களிலே 47 பேர் போக பாக்கி உள்ளவர்களையும் நீங்கள் எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேன்ஜிலிருந்து எடுக்க ஆணையிடவேண்டும்.

நாகர்கோவில் முனிசிபாலிட்டி இப்போது பெரியதாகிக் கொண்டே போகிறது. 36 வார்டுகளாக இருந்தது இப்போது 44 வார்டுகளாக இருக்கிறது. ஒரு வார்டுக்கு 5 துப்புரவுத் தொழிலாளர்கள் என்றாலும் இன்னும் எத்தனையோ துப் புரவுத் தொழிலாளர்கள் தேவைப்படுகிறது. அதையும் நீங்கள் எங்களுக்குத் தரவேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

<u>திரு. ஏ.கே.சி. சுந்தரவேல் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை யானது ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களின் நலனைக் கருத் தில்கொண்டு தயாரிக்கப்பட்டது. இந்த பட்ஜெட்டை நான் உள மார வரவேற்கிறேன். கடுமையான நிதி நெருக்கடியை ஏற் படுத்தி விட்டுச் சென்றது முந்தைய தி.மு.க. அரசு. அந்தக் காலக் கட்டத்திலே பதவி ஏற்ற இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், அந்தக் கடுமையான நிதிப் பற்றாக் குறையிலும் மத்திய அரசிடமிருந்து எந்த விதமான சிறப்பு நிதி உதவியும் பெறாமல் அரசை எதிர் நோக்கியிருந்த பல்வேறு நிதிப் பிரச்சினைகளை சமாளித்து வந்த இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

பிற்பகல் 12-55

வேளாண்மையைப் பொறுத்த வரையில் கடந்த பத்தாண்டு காலமாக மழை பொய்த்ததன் காரணமாக விவசாயிகள் பெரிதும் அவதிக்குள்ளாகி, விவசாயமே நசித்துவிடும் அளவுக்கு அந்த வேளையிலே மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் பதவி ஏற்றவுடனே, அந்த வருண பகவானே மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி, கொட்டோ கொட்டு என்று தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகள் வயிற்றிலே பாலை வார்த்துள்ளார். இதைக்



கருத்திலே கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையிலே 215.75 கோடி ரூபாய் விவசாயத்திற்காக ஒதுக்கியுள்ளது வரவேற்கத் தக்க ஒன்றாகும்.

சந்தன மரக் கடத்தலைத் தடுப்பதிலே இந்த அரசு எடுத் துள்ள முயற்சிகள் வரவேற்கக் கூடியவை; பாராட்டத்தக்கவை. முந்தைய தி.மு.க. அரசில் நடந்த சந்தனக் கட்டைகள் கடத்தலைக் கண்டு நான் என் தொகுதியிலே உள்ள சந்தனக் காடுகள் எல்லாம் அழிந்துவிடுமோ என்று அஞ்சினேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்றவுடனே முதல் வேலையாக நடவடிக்கை எடுத்து, முழுமையாக சந்தன மரக் கடத்தலைத் தடுத்துள்ளார்கள் என்பதற்காக என் நெஞ்சார்ந்த நன்றியைப் புரட்சித்தலைவி அவர்களுடைய பாத கமலங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

திருப்பத்தூரிலே காடுபடு பொருட்கள் தொடர்பான குற்றங்களை விசாரிக்கத் தனிக் கோர்ட் அமைத்துக் கொடுத்த இந்த அரசுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருகிவரும் கால்நடைகளைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு வரும் ஆண்டிலே 400 கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்த விருப்பது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன். 13.67 கோடி ரூபாய் செலவிலே செம்மறியாடு மேம்பாட்டுத் திட்டம் செயல் படுத்தவிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

வளர்ந்துவரும் சமுதாயத்தில் பிள்ளைகளுக்கு கல்வி அளிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு எடுத்துள்ள நடவடிக்கை பாராட்டத்தக்கது. நடப்பாண்டில் அறிவொளி இயக்கம் 7 மாவட்டங்களில் செயல்படும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் எனது வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டமும் ஒன்றாகும். இந்த அறிவொளித் திட்டம் எனது மாவட்டத்தில் மிகவும் சிறப்பாகவும், முதன்மையாகவும் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதற்காக எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் எடுக்கும் முயற்சிகளுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

'புரட்சித் தலைவி மருத்துவ நலத்திட்டம்' என்பது தமிழக மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இதனால் ஏழை, எளிய மக்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடி மருத்துவர்களே சென்று அவர்களுடைய நோயைப் போக்குகின்ற நிலைமை ஏற்படுகிறது. இந்தத் திட்டம் இதுவரை எந்த அரசும்

[திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்] [1992 மார்ச் 9

செய்யாத ஓர் உன்னத திட்டமாகும். மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு எல்லா மக்களுக்கும் எல்லாம் கிடைத்திட வேண்டுமென்ற எண்ணம் கொண்டது. அதற்கு எடுத்துக் காட்டாக தமிழ்நாட்டில் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் கிடைத்திட 474 கோடி ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது வரவேற்கத் தக்க ஒன்றாகும்.

இந்த நேரத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எனது திருப்பத்தூர் தொகுதியிலே ஆண்டியப்பனூர் என்ற இடத்திலே பம்பையாறு அணையைக் கட்டினால் எனது தொகுதியில் பாதி மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை தீரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தொழிலாளர்களின் அரசு என்பதை நம்பும் வகையில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பெரும் முயற்சி எடுத்து மூன்றாண்டுகளாக மூடிக்கிடந்த ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையைத் திறந்து உற்பத்தியைத் தொடக்கியுள்ளார்கள். இந்தச் சாதனையைக் குறித்து மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களுக்கு என் நன்றியினைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

நெசவாளர்களின் குறைகளைப் போக்க இந்த அரசு எடுத்துள்ள முயற்சிகளை நானும் ஒரு நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன். இதுவரையில் எந்த அரசும் செய்யாத அளவுக்கு நெசவாளர் குடும்பங்களுக்கு ஒரு பிடிப்பினை ஏற்படுத்தியுள்ளது இந்த அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நெசவாளர் குடும்பத்திற்கு ஈட்டுத் தொகையாக வழங்கப்பட்ட 10,000 ரூபாயை 15,000 ரூபாயாக உயர்த்தி நெசவாளர் குடும்பங்களுக்குப் பாதுகாப்பாக உள்ளார் நமது முதலமைச்சர் அவர்கள். இது தவிர இறந்துவிட்டால், நெசவாளர் குடும்பத்திற்கு மாதம் 250 ரூபாய் உதவி அளிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி, நெசவாளர் நெஞ்சங்களிலே நீங்காத இடத்தைப் பிடித்துவிட்டார் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்.

மேலும், என்னுடைய நீண்டநாள் கோரிக்கையான பெண்கள் கல்லூரி ஒன்றை திருப்பத்தூரிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருப்பத்தூர் தொகுதியிலே மொத்தம் 34 மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அவற்றிலிருந்து ஆண்டு தோறும் 3,500 பெண்கள் படித்து வெளி வருகிறார்கள்.



1992 மார்ச் 9] [திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்]

அவர்கள் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் 130 கிலோ
மீட்டர் தூரத்திலுள்ள சேலத்திற்கோ 100 கிலோ மீட்டர்
தூரத்திலுள்ள வேலூருக்கோதான் செல்லவேண்டும். அதனால்
வசதி படைத்தவர்களுடைய வீட்டுப் பிள்ளைகள்தான் கல்லூ
ரிக்குச் சென்று படிக்க முடிகிறது. எனவே, உடனடியாகத்
திருப்பத்தூரில் ஒரு பெண்கள் கல்லூரி ஏற்படுத்தப்பட வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1—00

எனது தொகுதியிலே ஜவ்வாது மலை, ஏலகிரி மலை என்று
இரண்டு மலைகள் உள்ளன. அவற்றில் சந்தன மரங்கள்
நிறைய வளர்ந்து நமது அரசுக்கு நல்ல வருமானம் வருகிறது.
ஆனால் அங்கு வாழும் மக்களோ எந்தவிதமான வசதியும்
இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு சரியான சாலை
வசதி இல்லை. மருத்துவமனைக்கு செல்ல வேண்டுமென்றால்
தொட்டில் கட்டி 30 கிலோ மீட்டர் நடக்க வேண்டிய
தாக உள்ளது. எனவே ஜவ்வாது மலை பெரும்புலி சாலையி
லிருந்து ராஜா பாளையம் வரை ரோடு வசதி செய்து தர வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னொரு மலையான
ஏலகிரி மலையை கோடை வசந்தமாக அறிவிக்க வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனது திருப்பத்தூர்
தொகுதியிலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக பீடித் தொழில்
நடக்கிறது. அங்கே பீடித் தொழிலாளர்களுக்கு பி. எஃப். கணக்கு
இதுவரை சேராமல் உள்ளது. அதை உடனடியாக நிர்வாகம்
கொடுப்பதற்கு அரசு உத்திரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன். பீடித் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதியைத்
தனியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன். மற்ற மாநிலங்களிலே பீடித் தொழி
லாளர்களுக்கு அதிக கூலி கொடுக்கிறார்கள். அதேபோல
நமது மாநிலத்திலும் அதிகமாகக் கூலி கொடுக்க அரசு ஆவன
செய்ய வேண்டுமென்று தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி
விடை • பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு.
கு. லாரன்ஸ்.

* <u>திரு. கு. லாரன்ஸ் :</u> பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையில் முறையாக வளர்ச்சித்
திட்டங்களை உருவாக்கி எதிர்காலத்தில் தமிழகத்தை வளர்ச்சிப்
பாதையில் எடுத்துச் செல்வதற்காக உருப்படியான
திட்டங்களோடு கவர்ச்சியான திட்டங்கள் இல்லாது அடிப்படைத்
திட்டங்களை உருவாக்கி நிதி நிலை அறிக்கையை அளித்திருக்
கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மாண்புமிகு

நிதியமைச்சர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். இந்த நாட்டினுடைய மிக முக்கியமான பிரச்சினை
களின் மையங்களில் இந்த ஆட்சி கடுமையான நிதி நெருக்கடி
யோடு, அதே நேரத்தில் நாட்டு மக்களுடைய நல்வாழ்வுத்
திட்டங்களிலே அடிப்படை கவனத்தைச் செலுத்தி இந்த நிதி
நிலை அறிக்கையை இங்கே ஒப்படைத்திருக்கிறது என்பதை உள்ள
படியே பெருமையோடு பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.
சென்ற ஆண்டு, நிதி நிலை அறிக்கையில் 1200 கோடி பற்றாக்
குறையாக இருந்தது. ஆறு மாதங்களில் இந்த ஆட்சி நடைபெறு
கிற ஒரு சூழ்நிலையில் அதற்கு முன்னதாக கவர்னர் ஆட்சியின்
போது உருவாக்கப்பட்ட ஒரு நிதி நிலை அறிக்கையை வைத்து
அவர்களுடைய அடிப்படையிலேசென்ற ஆண்டுகொடுக்கப்பட்டது
என்பது உண்மையான ஒரு நிதி நிலை அறிக்கை என்றுகூட
சொல்லமுடியாத ஒரு சூழ்நிலையில் அதற்கு முன்னதாக இருந்த
ஆட்சியாளர்களுடைய இடர்பாடுகளால் கொடுமைகளால், தமி
ழகம் பாதிக்கப்பட்டு நாட்டு மக்களுக்கு ஒரு நிதிநிலை அறிக்கை
யைத் தந்த பின்னர் 6 மாத ஆட்சிக்குப் பின்னால் 560 கோடி
ரூபாய் மட்டுமே பற்றாக்குறை ஏற்படுகிறது என்ற அளவு ஒரு
சிறப்பான ஆட்சியை 6 மாதங்களில் நடத்திக் காட்டி ஒரு அற்புத
மான நிதிநிலை அறிக்கையை தந்திருப்பதாக நான் இங்கே
நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற இரண்டொரு மாத காலமாக தமிழகத்தை பொறுத்த
வரையில் விலைவாசி என்பது விஷம் போல ஏறி வந்தது. எங்கே
போனாலும் விலைவாசி உயர்வு என்ற கோஷங்கள் மிகக் கடுமை
யாக இருந்ததை நாம் உணர்வோம். இன்றைக்கு இந்தச் சட்ட
மன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் விலை
வாசி என்பது தமிழக அரசால் எங்கும் கட்டுப்படுத்தப்பட்டு
இருக்கிறது என்பதும், அத்தியாவசியப் பொருட்களை வாங்கிப்
பெறுவதிலே ஏழை எளிய மக்களுக்கு இன்றைக்குச் சுமை இல்லாத
ஒரு ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கிறது என்பதை நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு நமக்கு வழங்கிய அரிசி
யிலே அதிகமான விலைகளை ஏற்றினாலும் கூட, நாட்டிலே
வாழ்கின்ற ஏழைகள் அரிசியை வாங்கிச் சாப்பிடுவதிலே இந்தி
யாவிலேயே தமிழகத்தில்தான் குறைவான விலையில் இருக்கிறது
என்று சொல்கின்ற அளவு நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்து
இருக்கிறது என்று சொல்வதோடு, 40 ரூபாய், 50 ரூபாய் கிலோ
என்று நம்முடைய வெஜிடபிள்ஸ் — மரக்கறிகள் கூடியிருந்த
காலகட்டம் மாறி எங்கே போனாலும், 2 ரூபாய் 2 1/2
ரூபாய்க்கு ஒரு கிலோ தக்காளி கிடைக்கின்ற அளவு, சமுதாயத்
தினுடைய அடித்தளத்திலே வாழ்கின்ற மக்களுக்குத் தேவை
யான அடிப்படை பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள்
கிடைக்கின்ற அளவிற்கு விலைவாசி மிகவும் கடுமையாக கட்டுப்
படுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நினைவுகூரக்



கடமைப்பட்டிருக்கிறேன். விலைவாசி உயர்ந்த காலகட்டத்
தில் விலைவாசி உயர்ந்து விட்டது என்று கோஷம் எழுப்பியவர்
கள் எல்லாம் இன்றைக்கு விலைவாசி குறைந்த பின்னர்
அதை வெளியில் எடுத்துச் சொல்லாமல் மௌனம் சாதிக்கிறார்
களோ என்று நான் ஐயப்படுகிறேன்.

பிற்பகல் 1—05

இன்றைக்கு நம்முடைய சட்டமன்றத்தைப் பொறுத்த
வரையில் ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதில் அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்
கள் மிகப் பெரும் பங்கை வகிக்கிறார்கள் என்பதை நான் நினைவு
கூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன் மேன் ஆர்மி என்று சொல்லுகிற சில அரசியல் கட்சிகள்,
நாட்டு மக்களால் புறக்கணிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், கருணா
நிதியிடம் சம்பளம் பெற்றுக்கொண்டு இங்கே வந்து சிலர்
சண்டித்தனம் செய்கிறார்களோ என்ற ஐயப்பாடு இன்றைக்கு
இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). எனவே எனக்குத்
தெரிந்தது எல்லாம் இந்த சட்டமன்றத்தின் உறுப்பினர்கள்
எல்லாம் கருணாநிதியிடம் தினம் தொலைபேசியில் பேசுவதும்,
அவர் சில விளக்கங்கள் கொடுப்பதும், எப்படிப்பேசுவது என்று
சில அறிவுரைகள்கொடுப்பதாகவும் தன்னுடைய அலுவலகத்திலே
கருணாநிதியோடு பேசி விட்டோம் என்று அவர்கள் சந்தோஷப்
படுவதாக் கூட சொல்லுகிறார்கள். எனவே இன்றைக்கு இருக்கிற
எங்கள் ஆட்சி நான் ஏற்கனவே சொன்னது போல தமிழகத்தைப்
பொறுத்தவரையில் ஒரு மிகச்சிறப்பான ஆட்சியைத் தந்து கொண்
டிருக்கிறது என்பதை. நாட்டு மக்களுக்கு பல்வேறு நலவாழ்வுத்
திட்டங்களைத் தந்து கொண்டிருக்கிறது என்பதை நான்
மிகத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சில பிரச்சினை
களை நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லை
யோர மாவட்டமாக இருக்கிற அந்த மாவட்டம் 10, 15 ஆண்டு
காலமாக உணவை குறிப்பாக அரிசியை தமிழகத்திலிருந்து
கடத்திச் செல்கிற ஒரு மாவட்டமாக இருந்தது உண்டு. ஆனால்
இன்றைக்கு இருக்கிற இந்த அமைச்சரவை தமிழகத்தில் உற்பத்தி
ஆகிற அரிசி, நெல் போன்றவற்றை கடத்தி செல்லக்கூடாது
என்பதில் கடுமையான நடவடிக்கையின் மூலம் அதை தடுத்து
வெற்றி கண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். சமூக விரோத சக்திகளை, இந்த நாட்டினுடைய
பொருளாதாரத்தைச் சிதைக்கின்ற பல்வேறு சக்திகளை தடா
சட்டம், குண்டர்கள் சட்டம் போன்ற சட்டங்களின் வாயிலாக
அவர்களை சிறைச்சாலைகளில் அடைக்க நடவடிக்கையை மேற்
கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி

அதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, தமிழக அரசுஉணவு கடத்தலைத் தடுப்பதிலே இன்றைக்கு வெற்றி பெற்று இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் மாம்பழத் தாறு அணைத் திட்டம் என்பது ஒரு மிக முக்கியமான அணைத் திட்டம். 1957-லே இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டு மென்று ஆராய்ச்சிகள், ஆய்வுகள் நடைபெற்றதுண்டு. சென்ற தி.மு.க. ஆட்சியில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டாம் என்று அவர்கள் ஒதுக்கித் தள்ளினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி வந்த பிறகு பின்னர் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களுடைய விவசாய மக்களுடைய நீர்த் தேவையை நிவர்த்தி செய்வதோடு குமரி மாவட்ட மக்களுக்குத் தேவையான குடிநீர் வசதியை செய்து கொடுக்க முடியும் என்று சொல்லுகிற அளவுக்கு மாம்பழத்தாறு அணைத் திட்டம் இன்றைக்கு ஆய்வு செய்யப்படுகிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டு மென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டத்தின் வாயிலாக ஆண்டுதோறும் 1 லட்சம் கன அடி தண்ணீர் பெருக்க முடியும் என்பதையும், நாகர்கோவில் நகரம் உட்பட பல்வேறு கிராமங்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதையும் நான் இந்த நேரத்தில் நினைவுக் கூரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல் இந்த மாவட்டத்தினுடைய மாவட்ட சுகாதார அலுவலகம் நீண்ட நெடிய காலமாக இரண்டாகப் பிரிக்கப் பட்டாலும் நாகர்கோவிலை மையமாக வைத்து டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபிஸ் நடைபெற்று வருகிறது. இரண்டாக பிரிக்கப்பட வேண்டும் என்பதும், கல்குளம், விளவங்கோடு தாலுக்காவில் தனியாக டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபிஸ் செயல்பட வேண்டும் என்று ஆணைபிறப்பித்த பின்னரும் அந்த ஆணையை நிறைவேற்ற முடியாமல் அது நாகர்கோவிலில் இருக்கிற காரணத்தால் பத்மநாபபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபிஸும் விளவங்கோடு தாலுகாவினை தலைமையிடமாகக் கொண்டு ஒரு டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபிஸ் ஆகப் பிரிக்கவேண்டு மென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நத்தம் புறம் போக்குகள் இல்லை. ஆனால் வீடு அற்றவர்கள், நிலம் அற்ற வர்கள், ஏழை எளியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் நிலம் இல்லாமல் தம்முடைய பட்டாக்களைப் பெற் றுக் கொள்ள முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆனால் புறம்போக்கு நிலங்களை அங்கே இருக்கிற பெரும் நிலச்சுவான்



தார்கள் ரப்பர் எஸ்டேட்டுகளாக மாற்றி வைத்திருக்கிறார் கள். அவர்களுடைய கரங்களில் இருப்பது என்பது ஒன்று, இரண்டு ஏக்கர்கள் அல்ல; 500 ஏக்கர், 1,000 ஏக்கர் அரசு நிலங்களை கையிலே வைத்திருக்கிறார்கள். ஒருபுறம் ரப்பர் களை விற்று அதிலே வரும் வருமானத்தில் தமிழக அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளை அவர்கள் கொடுக்கவில்லை. மாறாக அந்த ரப்பர் பொருட்கள் அங்கிருந்து கடத்தப்படு கின்றன. ஆந்திராவிலே இருக்கிற இச்சாபுரத்திற்கு, இந்தப் பொருட்களைக் கடத்தி கோடிக்கணக்கான ரூபாய்களை அவர்கள் சம்பாதித்து வருகிறார்கள். எனவே, இந்த டாக் சேஷனைப் பொறுத்தவரையில் அதிகாரிகள் இன்னும் செம் மையாக, இந்தத் திட்டத்தில் செயல்படவேண்டும். கோடிக் கணக்கான வரி ஏய்ப்புகளை ரப்பர் உற்பத்தியாளர்கள் செய்து வருகிறார்கள். அதைத் தடுக்க வேண்டுமென்று சொல்வதோடு அவர்களுடைய புறம்போக்கு நிலங்களை அரசே எடுத்துக் கொள்கிற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

பிற்பகல் 1-10

அதேபோன்று எங்களுடைய கல்குளம் தாலுகாவைப் பொறுத்தவரையில் அது மாவட்டத்தினுடைய மிகப் பெரிய தாலுகாவாகும். 1954-லேயே அந்தத் தாலுகா பிரிக்கப்பட வேண்டுமென்கிற ஒரு ஆணை இருந்தது. அன்றைக்கு திருவிதாங்கூர் சமஸ்தானத்தோடு நாங்கள் இருந்தோம். 1956-ல் தமிழகத்தோடு நாங்கள் இணைக்கப்பட்டோம். ஆனால் அன் றைக்கே அந்தத் தாலுகா பிரிக்கப்பட்டு இரணியலைத் தலை நகராக வைத்து, இரணியல் தாலுகா உருவாக்கப்படவேண்டு மென்று அன்றைக்கே ஆட்சியாளர்களுடைய சிந்தனையிலே இருந்தது. அதனுடைய அடிப்படையில் குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மிகக் கடுமையான சுமை பொருந்திய அந்த கல்குளம் தாலுகாவை இரண்டாகப் பிரித்து, இரணியலை தலைநகராக வைத்து இரணியல் தாலுகா உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் நினைவு கூரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குமரி மாவட்டத்தினுடைய மையப் பகுதியாக இருக்கக் கூடிய பத்மநாபபுரம் தொகுதி, அகில இந்திய அண்ணா திரா விட முன்னேற்றக் கழகத்தினுடைய அற்புதமான பராமரிப் பிலே இருக்கிற அந்தத் தொகுதிக்கு, செம்மை பெறுகின்ற எல்லாத் திட்டங்களையும் தர வேண்டும் தர வேண்டும் என்று சொல்லி, நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன், வணக்கம்.

[1992 மார்ச் 9

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. ஆர். முருகானந்தம்.

*திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாய்மை உணர்வோடு, தாயுள்ளத்தோடு, தமிழகத்தின் தாய்மார்களின் வயிற்றிலே பால் வார்க்கும் வகையிலே இந்த வரவு செலவுத் திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அரசு தந்துள்ளது. அன்றாடம் கடைகளிலே வாங்கி, உணவைத் தயாரித்து குழந்தைகளுக்கும் கணவன்மார்களுக்கும், பரிமாறுகிற தாய்மார்கள் மகிழ்ச்சி அடைகின்ற வகையிலே மளிகைப் பொருள்களுக்கெல்லாம் வரி விலக்கு அளித்திருப்பது அடித்தளத்து மக்கள் வரவேற்கின்ற ஒன்றாகும். சத்துணவுக் கூடங்களில் பணியாற்றி வருகின்ற, ஏழையெளிய குடும்பங்களைச் சேர்ந்த சத்துணவு அமைப்பாளர்களுக்கு ஊதிய உயர்வு அளித்து இருப்பதற்கு, அந்தத் தாய்மார்களின் குடும்பத்தினரும் என்றென்றும் நம்முடைய புரட்சித் தலைவியை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

ஏழையெளிய, அடித்தளத்து மக்களும் மருத்துவ வசதியைத் தகுந்த முறையில் பெற வேண்டுமென்ற தாயின் கருணையோடு நலிவுற்றோர், நோய்வாய்ப்பட்டிருப்பவர்களுக்குப் பல்வேறு விஞ்ஞான சாதனங்களோடு மருத்துவ சிகிச்சை மற்றும் தனியார் மருத்துவமனையிலே ஏழைகள் மருத்துவ சிகிச்சை பெறுகின்ற அளவிற்கு, வறுமைக்கோட்டிலே இருக்கின்ற ஏழையெளியவர்களுக்காக, நலிவுற்றோர் நோய்வாய்ப் பட்டால் 15 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்ற நல்ல திட்டத்தை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

ஓராசிரியர் பள்ளிகளிலே மற்றொரு ஆசிரியர் நியமனம் என்ற திட்டத்தின் கீழே ஆசிரியர் வேலை கொடுக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். இதனாலே பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான ஒரு வாய்ப்பை நம்முடைய புரட்சித் தலைவி அரசு தந்துள்ளது.

தமிழகத்துத் தாய்மார்கள் அன்றாடம் பயன்படுத்தும் குங்குமம் போன்ற பொருட்களுக்கு வரிவிலக்கு கொடுத்திருப்பது தமிழகத்துத் தாய்மார்களின் ஆதரவோடு, நமக்கெல்லாம் தாயாக விளங்கும் புரட்சித் தலைவியின் ஆட்சியை ஏற்படுத்தித் தந்த அவர்களுக்கு இந்த வரவு செலவுத் திட்டம் காணிக்கையாக ஆக்கப்பட்டிருக்கிறது.



1992 மார்ச் 9] [திரு. கே. ஆர். முருகானந்தம்]

ஒருங்கிணைந்த மகளிர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழே 1 இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டம் இங்கே தீட்டப்பட்டுள்ளது. தமிழகத்துத் தாய்மார்கள் மட்டும் வரவேற்பதோடு மட்டுமல்லாமல் குடியைக் கெடுக்கும் குடிப் பழக்கத்தை எடுத்துரைக்க மாநில பள்ளி சாரா கல்வித் திட்டத்தின் கீழே 1½ இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டத்தை இங்கே அறிவித்து இருக்கிறார்கள்.

புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கின்ற தொழில் கொள்கையினால் நிறுவப்பட்டிருக்கின்ற தொழில் வளர்ச்சி மையங்களிலே புதிய வேலைவாய்ப்புகள் ஏற்பட இங்கே வகை செய்யப்பட்டிருக்கிறது. அன்னைத் தமிழ் மொழியாம், தொன்மைத் தமிழிலுள்ள கம்பன் கண்ட இராமாயணத்தை அலை கடல் கடந்து பரப்ப வேண்டுமென்ற ஆர்வத்தோடு ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கச் செய்கின்ற அந்தத் திட்டம், தமிழ் கூறும் நல்லுலகம், என்றும் புரட்சித் தலைவியை வாழ்த்துகின்ற திட்டமாக இங்கே கூறியிருக்கிறார்கள். தாய் உணர்வோடு தயாரிக்கப்பட்ட இந்த வரவு-செலவுத் திட்டத்திலே, நம்முடைய பேரறிஞர் அண்ணாவின் அரசாக இருக்கக் கூடிய, நம்முடைய தமிழ் மொழியை வளர்க்க, நம்முடைய திராவிட இயக்கத்தின் அரசியல் வாரிசு, நம் தாய்மொழியாம் தமிழுக்கு அணிசேர்க்கின்ற வகையிலே தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே தமிழை பழித்தவனைத் தாயே தடுத்தாலும் விடேன் என்று பாடிய பாவேந்தர் பாரதிதாசன் நினைவாகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நம்முடைய தாயாக விளங்கும் புரட்சித் தலைவி இருக்கை ஏற்படுத்தித் தருவது, புரட்சித் தலைவி காலத்தில் அவர்கள் தமிழின்பால் கொண்டுள்ள பற்றுக்கும் பாசத்திற்கும் சான்றாகும்.

பிற்பகல் 1-15

குறிப்பாக இந்த பட்ஜெட் நம்முடைய தாய்மார்களுக்கு ஒரு காணிக்கையாக, ஒரு வரப் பிரசாதமாக அமையும் வகையில் இந்த பட்ஜெட்டை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய டாக்டர் நாவலர் மூலம் அறிவித்திருக்கின்றார்கள்.

இங்கே என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலே, சிவகங்கையைத் தலைநகராகக் கொண்ட நம்முடைய பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டத்திலே கிராபைட் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காக சென்ற வரவு-செலவுத் திட்டத்திலேயே 20 கோடி ரூபாயை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருந்தார்கள். அந்தத் தொழிற்சாலையை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கே. ஆர். முருகானந்தம்] [1992 மார்ச் 9

அடுத்து, சிவகங்கை தாலுக்கா பெரிய தாலுக்காவாக இருக்கிறது. அந்தத் தாலுக்கா, கடைகோடியாக, பல்வேறு கிராமங்கள் பின்னப்பட்டு, தொலை தூரம் நிறைய இருக் கிறது. நம்முடைய ஒப்பற்ற தலைவி, இன்றையதினம் பல மாவட்டங்களைப் பிரித்து வருகின்ற நிலையிலே, தாலுக்காக்களைப் பிரிக்கின்ற வகையிலே, சிவகங்கை தாலுக் காவை இரண்டாகப் பிரிக்க வேண்டும். சிவகங்கையைத் தலை நகராகக் கொண்டு ஒரு தாலுக்காவும், மருது இருவர் ஆண்ட சீமையான காளையார்கோயிலைத் தலைநகராகக் கொண்டு ஒரு தாலுக்காவும் ஆக இரண்டு தாலுக்காக்களாகப் பிரிக்க வேண்டும். அதற்கான புரப்போசலும் தமிழக அரசுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து வரப்பட்டு இருக் கிறது. அதை ஆய்வு செய்ய வேண்டுமெனப் புரட்சித் தலைவி அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டரசன் கோட்டைப் பகுதியிலே ஒரு பதிவுத் துறை அலுவலகம்—சப்–ரிஜிஸ்தார் ஆபீஸ் வேண்டுமென்ற ஒரு கருத்துரு—இங்கே நம்முடைய அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அந்தப் பதிவுத் துறை அலுவலகத்தையும் என்னுடைய தொகுதியிலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காளையார்கோயிலிலே பெரிய காவல் நிலையம் இருக்கின்ற காரணத்தினாலே, அந்தப் பகுதியிலே ஜூரிஸ்டிக்ஷன் அதிகமாக இருப்பதாலே நாட்டரசன்கோட்டையிலே ஒரு காவல் நிலையத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியிலே இப்பொழுது இந்து சமயத் துறை துணை ஆணையாளர் அலுவலகம் சிவகங்கையிலே நிறுவப்பட்டிருக்கிறது. அதற்காக நம்முடைய ஒப்பற்ற புரட்சித் தலைவியை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறோம்.

பல சாலை வசதிகள்—தொண்டி—மதுரை ரோடு அகலப் படுத்துதல்; கிராமம், பரவமங்கலம் போன்ற கூறானவலை சாலைகள், மல்லர் சாலை போன்ற பல்வேறு சாலைகள் ஒரு கோடி ரூபாய்த் திட்டத்திலே அங்கே பல்வேறு சாலைகளுக்கு என்னுடைய தொகுதியிலே நம்முடைய புரட்சித் தலைவி அவர் கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அவர்களை நாங்கள் பாராட் டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதுபோன்ற நல்ல காரியங்களைச் செய்கின்ற நேரத்திலே, மாவட்டத் தலைநகரங்களிலே, சிவகங்கை மட்டும்தான் நம்பர் 2 முனிசிபாலிட்டியாக இருக்கிறது. அதை முதல் கிரேடு



1992 மார்ச் 9] [திரு. கே. ஆர். முருகானந்தம்]

முனிசிபாலிட்டியாக நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியிலே ஆக்க வேண்டும். எல்லா மாவட்டத் தலைநகரங் களிலும் இருக்கின்ற முனிசிபாலிட்டியும் ஸ்பெஷல் கிரேடு முனிசி பாலிட்டியாக இருக்கிறது. ஆகவே, இந்த சிவகங்கைச் சீமையை ஒரு முதல் கிரேடு முனிசிபாலிட்டியாக ஆக்கித் தர வேண்டுமென்று கூறிக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த நம்மு டைய சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

*திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1992—93 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பேசும் வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மகளிர் மேம்பாடு, ஏழை எளியவர்களுக்கான சிறப்பான திட்டங்கள், அதிகமான வரிச் சுமை இல்லாமை போன்றவைகள் பட்ஜெட்டில் முக்கிய அம்சங்களாகத் திகழ்கின்றன. மாண்புமிகு நிதியமைச்சரவர் களுடைய அனுபவத்தால், திறமையால் போடப்பட்ட பட்ஜெட் என்பதை இது தெளிவுபடுத்துகிறது. மத்திய அரசினுடைய பட்ஜெட்டை ஏழை எளியவர்களைப் பாதிக்காத பட்ஜெட் என்று அந்த பட்ஜெட்டைப் பற்றி இந்த பட்ஜெட்டில் சொல்லி யிருப்பது உண்மையிலேயே பெருமைப்படக்கூடிய ஒரு விஷய மாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வெளிச்சந்தையிலே அரிசியின் விலையைக் குறைக்கும் நோக்குடன், நம்முடைய வர்த்தகர்கள் மீது லெவியை விதிக்கும் முறை இன்றைக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே குறிப்பிட்டுள்ளீர்கள். இன்றைக்கு சற்றுக் கவனமாக இந்த அரசு அதைக் கவனிக்க வேண்டும். ஏனென்றால், பணக்காரர்கள், பதுக்கல்காரர்கள் முதலியவர்களை வைத்துக் கொண்டு இந்த லெவி முறையை ஒழித்துவிட்டால், பெருச்சாளியை மடியிலே கட்டிக் கொண்டதற்குச் சமமாக மாறிவிடும் என்பதை நீங்கள் சற்று உன்னிப்பாகக் கவனித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், இந்த லெவி முறையைத் தாராளமாக விட்டு விட்டால் ஒருவேளை இது பதுக்கல் பேர்வழிகளுக்கு இடம் கொடுத்து விடுமோ என்பதற்காக நான் இங்கே இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குக் காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக சுமார் ரூ. 276.31 கோடியை இங்கே ஒதுக்கி இருக்கிறீர்கள். மிக அருமையாக இன்றைக்குக் காவல் துறையில் உள்ளவர்கள்

* டி2 53-464—16

1992 மார்ச் 9]     [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

செயலாற்றுவதற்கு, மக்கள் பெருக்கத்திற்கு ஏற்றாற்போல
குற்றங்கள் இன்றைக்குப் பெருகி வருகின்ற இந்தக் காலத்தில்,
போதுமான ஸ்ட்ரென்த் போலீஸ் காவல் நிலையங்களிலே
இல்லாத ஒரு நிலை இருக்கிறது.

பிற்பகல் 1–20

இந்த நிலை இருக்குமானால் சமூக விரோதிகளின் வளர்ச்
சிக்கு அது பேருதவியாக இருக்கும். எனவே, காவல் துறை
யிலே அதிக 'ஸ்ட்ரென்த்' இருக்கும்போதுதான், அவர்கள்
கள்ளச் சாராயப் பேர்வழிகளையும் திருட்டுக்களையும் தடுப்
பதுடன், கோவில் சிலைத் திருடுபவர்கள் போன்றவர்கள்மீது
துரிதமான நடவடிக்கை எடுப்பதற்கு மிக வசதியாக இருக்
கும். அதேசமயத்தில், காவலர்களுடைய நலனும் காக்கப்
பட வேண்டும். எனவே, காவலர்களுடைய 'ஸ்ட்ரென்தை'
கூட்ட வேண்டுமென்பதை இங்கே நான் உங்களுடைய கவனத்
திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே, நெல்லை மாவட்டத்தை
நீங்கள் எடுத்துக் கொள்வீர்களேயானால், படிப்படியாக சுமார்
45 கோவில்களிலே சிலைகள் உடைக்கப்பட்டிருக்கின்றன,
அதுமட்டுமல்ல, கோவில்களிலேயுள்ள உடைமைகள் திருடப்
பட்டிருக்கின்றது. என்னுடைய தொகுதியிலுள்ள கங்கை
கொண்டான் கோவிலிலே ஒரு சிலை பல துண்டுகளாக
உடைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசுக்கு ஏதோ
களங்கம் விளைவிக்க வேண்டும் என்பதற்காக சில விஷமிகள்
செய்து கொண்டிருக்கிறார்கள். இது குறித்து துரிதமாகச்
செயலாற்றுவதற்கு இன்றைக்கு தனி போலீஸ் படை அமைக்
கப்பட்டிருப்பதை, இந்த அரசு ஏற்படுத்தியுள்ளதை நான்
பாராட்டுகிறேன். அதே சமயத்தில், அந்தக் கோவில் திருட்டு
களை மிகத் துரிதமாக நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்
ஏனென்றால், இதனால் அங்கு ஒரு இனக்கலவரம்
உருவாகி விடக்கூடாது. இதுபோன்ற செயல்களை சில விஷமி
கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த
மாமன்றத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இந்தப் பட்ஜெட்டில், வேளாண்மைக்காக பல்
வேறு திட்டங்களை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். பாசனம்
என்பது வேளாண்மையின் ஒரு முக்கிய அம்சமாக இருக்
கிறது. வரப்பு உயர நீர் உயரும் என்று சொல்வார்கள்.
வரப்பு உயர வேண்டும்; வரப்பு உயர வேண்டுமென்றால்.
பல்வேறு கிராமங்களிலுள்ள கால்வாய்கள். அதைப்போல
கிராமங்களிலேயுள்ள பல்வேறு குளங்கள் சீர்திருத்தம் செய்து
கொடுக்கப்பட வேண்டும்,



1992 மார்ச் 9]     [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

European Economic Community -யினுடைய உதவியால்
இன்றைக்கு பாசனங்களுக்கு. — பாசனக் குளங்களைச்
செப்பனிடவும். அதேபோல் பாசனத் திட்டங்களை
விருத்தி செய்வதற்காகவும் பல்வேறு திட்டங்களை இங்கே
நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், மிக அருமையான திட்டங்கள்
நாங்கள் வரவேற்கிறோம். அதேசமயத்தில். என்னுடைய
பகுதியில் பல நாட்களாக நாங்கள் கேட்கிற அந்த சிற்
றாறு பாசனத் திட்டத்தை— நீங்கள் விரிவுபடுத்தி, அங்
குள்ள பகுதி மக்களுக்கு. ஏழையெளிய விவசாயிகள் வளம்
பெறுவதற்கு ஏற்றவகையில் சீர்திருத்தம் செய்ய வேண்டு
மென்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்
அவர்களை இங்கே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், சுமார் 40 ஆயிரம் விவசாயிகளுக்கு மின்னி
ணைப்பு கொடுப்பதற்காக இந்த பட்ஜெட்டிலே நீங்கள்
திட்டத்தைச் சொல்லியிருக்கிறீர்கள், வரவேற்கிறோம்,
ஆனால், அதேசமயத்தில் இப்போது ஒரு ஆணை பிறப்பிக்கப்
பட்டிருக்கிறது, சுமார் 25 ஆயிரம் ரூபாய் கட்டினால், அவ்
வாறு அந்த 25 ஆயிரம் ரூபாய் கட்டியவர்களுக்கு முதலாவ
தாக நாங்கள் மின் இணைப்பு கொடுப்போம் என்று அரசு
ஆணை பிறப்பித்திருக்கிறது, இதனால் பல்வேறு ஏழை
எளிய மக்கள் பாதிக்கப்படுவார்களோ என்று நான் அச்சப்
படுகிறேன். 25 ஆயிரம் ரூபாய் வைத்திருக்கிற பணக்காரன்
மிக எளிதாகக் கட்டி, மின்சாரத்தை அவனுடைய பம்பு செட்டு
களுக்கு வாங்கிவிடுவான், ஆனால். ஏழை எளியவர்கள் அவ்
வாறு வாங்க முடியாமல் போய்விடுகிறது, எனவே. ஏழைகளுக்
கும் பாதிப்பு ஏற்படாத அளவுக்கு என்ன வழி செய்யவேண்
டுமோ அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் இந்த
மாமன்றத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

சுகாதார நிலையங்களுக்கு, மருந்துகளுக்காக இன்றைக்கு
நிதி ஒதுக்கீடு சுமார் ரூ. 10,000 கூடுதலாக அளித்திருப்பது,
மிகப் பேருதவியாக இருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமே
இல்லை. ஏனென்றால் சிறிது காலமாக மருந்துகள் கொடுக்
கப்படாமல் இருந்தன என்று இந்த மாமன்றத்திலே பல
உறுப்பினர்கள் பேசியிருந்தார்கள். இன்றைக்கு 10 ஆயிரம்
ரூபாயை ஒரு மருத்துவ மனைக்குக் கூட்டிக் கொடுத்திருப்பது
மிகவும் மகிழ்ச்சி தரும் ஒரு செய்தியாக இருக்கிறது. அதே
சமயத்தில், புரட்சித் தலைவி அவர்களின் மருத்துவ நலத்
திட்டம் என்ற ஒரு திட்டமானது, மிகப் புதுமையாக எந்த
ஒரு மாநிலத்திலும் இல்லாத அளவுக்குச் செயலாற்றிக் கொண்
டிருப்பதால், மக்கள் பெருமளவுக்கு வரவேற்பைக் கொடுக்
கிறார்கள். கிராமத்து மக்களுக்கு நேரடியாக இந்த
மருத்துவ நலத் திட்டமானது, செயலாற்றிக்
கொண்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அதே சம

அதேபோல், ஊத்துமலை அருகிலே கண்ணாம்புக்கல்
அதிகமாகக் கிடைப்பதால், கிரானைட் தொழிற்சாலை
அமைத்துக் கொடுக்க வேண்டும். இந்தத் தொழில் வளர்ச்சித்
திட்டத்தின் மூலமாகப் பல்வேறு கிராமங்களிலே சிறிய சிறிய
தொழில்களை ஏற்படுத்தித் தருவதற்கு இந்த அரசு பல்வேறு
முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதை உங்கள்
மத்தியில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், சாலை வசதிகள். சாலை வசதிகளுக்காக
இன்று சுமார் ரூ314.51 கோடி பட்ஜெட்டிலே கொடுக்கப்பட்
டிருக்கிறது. சாலை வசதி என்பது மிகவும் முக்கியமான ஒன்று.
நகர்ப்புறச் சாலைகளை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல்,
சீர்கெட்டிருக்கும் கிராமப்புறச் சாலைகளைச் செப்பனிடுவதில்
மாண்புமிகு அமைச்சர் பெருமான் ஏற்பாடு செய்து
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல
ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட எங்கள் தொகுதியினுடைய
சாலைகளை நீங்கள் போட்டுத் தர வேண்டும் என்பதை இந்த
மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக் கொள்கிறேன்.
அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு பட்ஜெட்டிலே மளிகை
சாமான்கள் விலை குறைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல
பெண்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களைச்
சொல்லியிருக்கிறீர்கள். ஒரு குடும்பத்திலே, ஆண் குழந்தை
இல்லாத குடும்பத்திலே, பெண் குழந்தை மட்டும் இருந்தால்,
அதுவும் இரண்டு பெண் குழந்தைகளுடன் பெற்றோர்
கருத்தடை செய்து கொண்டுள்ள குடும்பங்களுக்கு, குடும்பம்
ஒவ்வொன்றுக்கும் ரூ. 2,000 கொடுத்து அதை நிதி நிறுவனம்
ஒன்றில் முதலீடு செய்து, நீங்கள் திருப்பிக் கொடுக்கும்போது
மொத்தமாக ரூ. 10,000 அளிப்பதாகச் சொல்லியிருப்பது ஒரு
சிறப்பான திட்டம் என்பதால் வரவேற்கிறேன்.

மளிகை சாமான்கள் விலைக்குறைப்பிற்கு வரிச் சலுகை
அளிக்கின்றபோது இன்னும் சில பொருள்களுக்கு வரிகளைக்
குறைத்திருக்கலாம் என்பதை நான் இங்கே உங்கள் மத்தியிலே
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மக்கள் அமைதியாக வாழ வேண்டும்.
நீங்கள் எத்தனை திட்டங்கள் போட்டாலும் இந்த நாட்டிலே
மக்கள் ஏழை எளியவர்கள் அமைதியாக வாழவில்லை என்றால்,
பட்ஜெட்டிலே நீங்கள் எவ்வளவு பணத்தை ஒதுக்கினாலும்,
நிலையான நல்லாட்சி இல்லையென்றால், மக்களுக்கு அமைதி
யில்லையென்றால், நிச்சயமாக இந்தத் திட்டங்கள் எதுவுமே
நிறைவேறாது. ஆனால், இன்றைக்கு புரட்சித் தலைவியின்
ஆட்சி ஏற்பட்ட பின்னால், அகில இந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரசும் இணைந்து



ஒரு சிறப்பான ஆட்சியைக் கொண்டு வந்ததினால், விடுதலைப்
புலிகள் தமிழகத்திலே ஒழிக்கப்பட்டிருக்கின்றார்கள்.
இது நம்முடைய தமிழக வரலாற்றிலேயே மிகவும் முக்கிய
மான ஒன்றாகும்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்
அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படு
கிறது. வேகமாக முடித்து விடுங்கள்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகளினுடைய ஆதிக்கத்
தினால் நாமெல்லாம் அச்சப்பட்டிருந்தோம். மக்களெல்லாம்
அச்சப்பட்டிருந்தார்கள். ஆனால் அந்தச் சூழ்நிலைகள்
எல்லாம் தவிர்க்கப்பட்டு இன்றைக்கு விடுதலைப் புலி
களின் நடமாட்டமே இல்லை என்று சொல்லக் கூடிய அளவில்
தமிழகத்திலே இருப்பதால் இன்றைக்கு மக்கள் அமைதியாக
வாழ்கிறார்கள் என்று சொல்லக்கூடிய அளவிலே மக்கள் பாராட்டு
கிறார்கள்.

அடுத்து இன்றைக்கு விலைவாசிகள் ஏறுகின்றன. அந்த
விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு கடுமையான
நடவடிக்கை எடுக்க வேண்டும். ரேஷன் கடைகளில் அரிசி
விநியோகம் செய்யும்போது சில கடைகளில் 20 கிலோ அரிசி
போடப்பட்டு வந்த கடைகளில் அவை குறைக்கப்பட்டிருக்
கின்றன என்று கூட எனக்குச் சில புகார்கள் வந்திருக்கின்றன.
அதாவது 2 ரூபாய்க்குப் போடக்கூடிய அரிசியானது சுமார்
3 கிலோ, 4 கிலோதான் போடுகிறார்கள் என்று ஏழை மக்கள்
சொல்கிறார்கள். அதை அதிகரித்துக் கொடுக்க அரசு தக்க
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் உங்கள் மத்தியில்
சொல்லிக் கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சிக்கு என்று ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது.
கம்பராமாயணத்தை மொழி பெயர்ப்பது பற்றிச் சொல்லப்
பட்டு இருக்கிறது. தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும் என்று சொன்னதற்கிணங்க
நம்முடைய தமிழ்மொழி உலகமெலாம் பரவ வேண்டும்
என்றால் நாம் அன்னிய மொழியில் உள்ள பல்வேறு நூல்களை
இங்கே மொழி பெயர்த்துக் கொண்டுவர வேண்டும். நம்முடைய
நாட்டின் பல்வேறு மொழிகளில் உள்ள பல்வேறு
நூல்களை இங்கே மொழிபெயர்த்துக் கொண்டுவந்து
நம்முடைய தமிழோசை உலகமெலாம் பரவச் செய்வது
நம்முடைய அரசினுடைய கடமையாகும் என்பதைச் சொல்லி

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] [1992 மார்ச் 9

சிறப்பான இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாகப் பல்வேறு திட்டங்களை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் விலைவாசியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும். பொதுமக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய இன்னும் பல்வேறு திட்டங்களை நீங்கள் உருவாக்க வேண்டும் என்பதைச் சொல்லி வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.—

ஏதுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.—

1. 1992–93 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 62 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (62 புத்தகங்கள்).

2. 1992–93 ஆம் ஆண்டிற்கான கடன் செலவுகள் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

3. 1992–93 ஆம் ஆண்டிற்கான பொதுக்கடன்—திருப்பிச் செலுத்துதல் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

4. 1992–93 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்—பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

5. 1992–93 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 39—சாலைகள், பாலங்கள் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

6. 1992–93 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 56—பொதுப்பணிகள்— கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).



1992 மார்ச் 9]

7. 1992–93 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 57—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்.)

8. 1992–93 ஆம் ஆண்டில் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

9. 1992–93 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை.

10. 1992–93 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை குறிப்பு.

11. 1992–93 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை குறிப்பின் இணைப்புகள்.

12. 1992–93 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி-2 திட்டங்கள்).

13. 1992–93 ஆம் ஆண்டு திட்டம் (திட்டம்-வரவு செலவுத் திட்ட இணைப்பு) (1992–93 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு).

14. 1992–93 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

15. 1992–93 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல் (ஆங்கிலம் மற்றும் தமிழ்).

16. 1992–93 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

17. 1992-93 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்து நிதி அமைச்சர், மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

162336
600 008.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-2.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannadhi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthagasalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

---

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.